# தமிழரசு



சூன் 16 1973 40 காசு

# உங்களுக்குத் தெரியுமா?




## உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.

உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

தமிழரசு
மலர் 3
இதழ் 24
16-6-1973



# புதிய சமுதாயம் அமைக்கும் பொன்னான தொண்டில் இன்னொரு சாதனை!



"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது!" என்று ஒளவையார் குறிப்பிட்டிருக்கிறார். இன்றைய நவீன உலகம்—நாகரிக உலகம் இந்த முதுமொழியில் மாறுபாடு கொண்டிருக்கிறது! 'மானிடராய்ப் பிறப்பது அரிதல்ல—பிறந்த பின்னும் மானிடராய் வாழ்தல் அரிது' என்ற புதுக் கருத்தைக் கொண்டிருக்கிறது—இன்றைய பண்பாட்டு உலகம்.

மனிதனை மனிதன் மதிக்க வேண்டும் என்ற கொள்கை—மனிதாபிமானம் உள்ளவர்களின் உள்ளங்களில்தான் கொலுவீற்றிருக்க முடியும்! தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்

# சமுதாயத்தில் தாழ்ந்து கிடக்கும் ஒரு பிரிவினருக்குப் புதுவாழ்வு

தமது பிறந்தநாளை—மனிதாபிமானச் செயல்களுக்காக ஒதுக்கி வருவதைத் தமிழ் கூறும் நல் உலகம் சந்தித்து வருகிறது.

நமது முதல்வர் அவர்கள், தமது 48-வது பிறந்த நாளில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு தரும் திட்டத்தை மேற்கொண்டார்.

49-வது பிறந்த நாளில் கண்பார்வை இழந்த எண்ணற்றோருக்குப் பார்வையும்—கண்ணாடியும் தரும் அருந்தொண்டில் ஈடுபட்டார்.

50-வது பிறந்த நாளில்—பொன்விழா நாளில்—மனிதனை மனிதன் இழுத்துச் செல்லும் மனிதாபிமானமற்ற செயலை நீக்குகின்ற விதத்தில் கைரிக்ஷாக்களுக்குப் பதிலாக, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த முனைந்துள்ளார்.

அந்தத் திட்டத்தின் துவக்கம் 5—6—1973 அன்று இரவு 7 மணியளவில் ஒருபெரும் விழாவாக மலர்ந்து, ராஜாஜி மண்டபத்தையொட்டியுள்ள திடலில், நாவலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். வரவேற்புரையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் குறிப்பிட்டதாவது :

"இந்தத் திட்டம் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"இந்தியாவிலேயே தமிழகத்தில்தான், தமிழக அரசுதான், கலைஞர் பிறந்த நாளில் கைரிக்ஷாவை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பதில் நாம் பெருமைப்பட வேண்டும்.

"மாடுகளும்—குதிரைகளும் வண்டிகளை இழுப்பதுபோல மக்களும் இழுத்துக் கொண்டிருந்த கொடுமை இந்நாட்டில் நீண்டநாள் நிலவி வந்தது. மக்களிடையே அவர்கள் மாக்களாக உலவி வந்தார்கள். அந்தக் கொடுமையை மாற்றி நல்ல சூழ்நிலையை உருவாக்கி—மக்களிடையே அவர்கள் மாக்களாக வாழும் நிலையை மாற்ற—எழுந்துள்ளது இந்த அருமையான திட்டம்; ஆகவேதான் இது அமைதியான புரட்சியாகும் !

"பொதுவாக ஏழைகளைப் பீடித்திருப்பது இரண்டு ! ஒன்று மடமை; மற்றொன்று வறுமை ! மடமையை நீக்கக் கல்வி தேவை ! வறுமையை நீக்க மறுவாழ்வு தேவை !

"ஆகவே, மடமையை நீக்கும் கல்வியமைச்சர் அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை ஏற்பதும், மறு வாழ்வளிக்கும் முதல்வர் அவர்கள் சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவதும் மகிழ்ச்சிக்குரியதாகும் — பொருத்தமானதாகும்"

போக்குவரத்துத் துறை அமைச்சரின் வரவேற்புக்குப் பின்னர், தலைமை ஏற்ற கல்வியமைச்சர் நாவலர் குறிப்பிட்டார்.

"முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை அடிப்படையாகக் கொண்டு—பற்றுக்கோடாகக் கொண்டு—தாழ்ந்து கிடக்கும் மக்களை முன்னேற்றிடும் பணியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

"பன்னெடுங் காலமாகவே நமது நாட்டில், பிறந்த நாள் விழாக் கொண்டாடி வருகிறோம். மொழிக்கு நன்மை செய்தவர்களை—நாட்டுக்கு நன்மை செய்தவர்களை—பிறந்தநாள் விழாக்களின் போது பாராட்டுகிறோம்.

"அக்காலத்தில் மன்னர்கள் 'நாள் மங்கல விழா' கொண்டாடி வந்தார்கள். பிறந்த நாள் விழாதான் அது ! பிறந்தநாள் விழாவின் போது, கொடுமைகள் நீக்கப்படும்—கஷ்டங்கள் தவிர்க்கப்படும்—கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

"காந்தியடிகளின் நூறாவது பிறந்த நாளின் போது கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

"அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்த நாளின் போது கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

"அதுபோல, கலைஞர் அவர்களின் பிறந்தநாளின்போது சமுதாயம்—நன்மை பெறத்தக்க அளவுக்கு நாம் பணிகளை ஆற்றி வருகிறோம்.

"கைரிக்ஷாவைப் பொறுத்தவரை, அது, மனிதனை மனிதன் வதைத்த போக்கு ! சமுதாய வாழ்வை வதைத்து வந்த இந்தப் போக்கினை எண்ணிப் பலரும் கண்ணீர் வடித்தார்கள்—பலர் உருகி உருகி எழுதினார்கள்.

"மனிதனை மனிதன் இழுத்துச் செல்லலாமா ?

"மனிதனை மாட்டுக்கு இணையாக நடத்தலாமா?

"இப்படியெல்லாம் கேட்டார்களே தவிர, எவரும் விடை காண முன்வரவில்லை.

"இந்தத் துன்பம் துடைக்கப்படவேண்டும். மாற்றப்பட வேண்டும் என்று கூறினார்களே தவிர—எவரும் அந்தப் பணியில் ஈடுபடவில்லை.

"ஆனால் நமது கலைஞர் அவர்கள்தான், கைரிக்ஷா இனிமேல் ஓடாது—ஓடக்கூடாது என்று × (இன்ட்டுக்) குறியிட்டுக் காண்பித்திருக்கிறார்கள்.

"இந்த உள்ளம் சாதாரணமாக, எவருக்கும் எளிதில் வராது.

"இந்த அரும்பணி, நாட்டு வரலாற்றில் ஏறத்தக்க அளவுக்கு—அகராதியில் ஏறத்தக்க அளவுக்கு — கலைக்களஞ்சியத்தில் ஏறத்தக்க அளவுக்கு மலர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இப்படிப்பட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று, அவற்றால் தமிழகம் ஏற்றம் பெறுக"

நாவலரது உரைக்குப் பின்னர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாலைகளும் வாழ்த்து மடல்களும் குவிந்தன. ஏழை எளிய மக்கள்—தங்களது உண்மைத் தொண்டரான முதல்வரிடம் ரிக்ஷாத் தொழிலாளர் மறுவாழ்வுத் திட்டத்திற்காக நிதி கொடுத்தனர். ஒருவர், இரண்டு ரூபாய் நிதியாகக் கொடுத்தார் ; பணத்தால் அவர் ஏழை ; ஆனால் பண்பட்ட உள்ளத்தால் அவர் ஒரு செல்வர் என்பதை அவரது

வள்ளண்மை எடுத்துக் காட்டியது.

தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பில் இந்த நிதிக்கு 1,201 ரூபாய் கொடுக்கப்பட்டது.

ரிக்ஷாத் தொழிலாளர் சங்கங்களும், ரிக்ஷா உரிமையாளர் சங்கங்களும் முதல்வர் கலைஞருக்குப் பாராட்டு மடலும், நிதித் தொகையும் கொடுத்தார்கள். பண்ணுருட்டியைச் சேர்ந்த ஒரு ரிக்ஷாத் தொழிலாளர், தலையிலே ஒரு பலாப் பழத்தைச் சுமந்துவந்து, கற்பூரத்தை ஏற்றி ஆரத்தி எடுத்த நிகழ்ச்சி உள்ளத்தை உருக்குவதாக—உண்மை அன்புக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. அதன்பின் முதல்வர் கலைஞர் உரையாற்றினர் :

''இன்று மிகப் புதுமையான—எல்லா வகையிலும் புதுமையான ஒரு விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை நீங்களும் உணர்கிறீர்கள். நானும் உணர்கிறேன்.

''இந்த விழாவை இங்கே நாம் ஏன் நடத்துகிறோம் என்பதற்கான காரணத்தை முன்னால் பேசியவர்கள் விளக்கினார்கள்.

''கழக அரசு அண்ணா அவர்களின் தலைமையில் 1967-ல் உருவான போது, சட்டப் பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த அரசின் சட்டங்களாயினும், திட்டங்களாயினும், தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கிற ஏழை எளிய, பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட நடுத்தர மக்களுடைய வாழ்க்கையை மையமாக வைத்துத்தான் வகுக்கப்படும் என்று சொன்னார்.

''அவருடைய வழி நின்று நடைபெறுகிற இந்த அரசு எந்தெந்த அளவுக்கு ஏழை மக்களுக்குத் தன்னுடைய கடமையைப், பொறுப்புணர்ந்து ஆற்ற முடியுமோ அந்த வகையில் எல்லாம் ஆற்றி வருகிறது என்பதற்குள்ள எத்தனையோ சான்றுகளில் • ஒன்றைத்தான் இன்றைக்கு நீங்கள் உள்ளபடியே காண்கிறீர்கள்.

''வாழ்த்திதழ் படித்த ஏழைகளுடைய குரல் எந்த அளவிற்குக் கள்ளம் கபடம் இல்லாமல் என்னை—இந்த அரசை வாழ்த்தியது என்பதை நீங்கள் உணர்ந்தீர்கள்.

''கண் கலங்க—உள்ளம் நெகிழ—குரல் தழுதழுக்க-நாத் தடுமாற அந்த நண்பன் வாழ்த்திதழைப் படித்தபோது என்னுடைய நெஞ்சமெல்லாம் குலுங்கியது ; இப்படிப்பட்ட ஏழை யெளியவர்கள் இந்த அரசை நம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் இந்த அரசு இன்னும் அவர்களுக்கு எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது என்பதை எண்ணித்தான் நான் இந்த மேடையில் தவித்துக் கொண்டிருந்தேன் ; பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தேன்.

''என்னுடைய பிறந்த நாள் விழாவைச் சமுதாயத்தின் அடித்தளத்து மக்களில் ஒரு பிரிவினருக்குப் பயன் படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு, அந்த அடிப்படையில் கடந்த இரண்டு-மூன்று ஆண்டுகளாக நான் கொண்டாடி வருகிறேன் என்பதையும், அதற்குத் தமிழ் நாட்டில் உள்ள நல்ல எண்ணம் படைத்தவர்கள்,வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள் வாரி வாரி வழங்குகிறார்கள் என்பதையும், தருகிறேன் என்று சொல்லி நிச்சயமாகத் தருகிறார்கள் என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். கடந்த மூன்றாண்டுக் காலமாகப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை அமைப்பதாலும், கண்ணொளி வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுவதாலும், கை ரிக்ஷாக்களை அகற்றி அதற்குப் பதிலாக இலவசமாக, சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குகிற திட்டமானாலும், பொது மக்களிடத்தில், வள்ளல் தன்மை வாய்ந்த வசதி படைத்த சிலரிடத்தில் நாம் கையேந்துகிறோம்.

இந்தக் கையில் நன்கொடை அளித்தால் அது ஏழை, எளிய மக்களுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிச்சயமாகப் பயன் படும் என்ற நம்பிக்கையோடு அவர்களும் நிறைய அள்ளித் தந்தார்கள்.

''அந்த வகையில்தான் கடந்த ஆண்டுக்கு முதல் ஆண்டு தொழு நோயப் பிச்சைக்காரர்களுக்கான மறு வாழ்வு இல்லங்கள் அமைக்கும் பணியில் நாம் ஈடுபட்டோம். அது, அகற்றுகிற பணிதான். அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற வறுமையை அகற்றுவது மாத்திரமல்ல அவர்களுடைய உடலில் ஏற்பட்டிருக்கிற அந்தப் பயங்கரமான நோயை அகற்றுகிற அந்தப் பணியை நாம் முதலில் மேற்கொண்டோம்.

அடுத்த படியாக, கண்ணொளி வழங்குகிற திட்டமானாலும் அதில் வழங்குவது என்ற வார்த்தை இருந்தாலும், கண்ணில் வளர்ந்துவிட்ட சதையை—ஏற்பட்டுவிட்ட நோயை அகற்றுகிற அந்தக் காரியத்தைத்தான் அந்தத் திட்டத்திலும் செய்தோம்.

இந்த சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்திலும் வழங்கும் திட்டம் என்று நாம் இதற்குப் பெயர் வைத்து அழைத்தாலும், மனிதனை மனிதன் இழுக்கின்ற கொடுமை நிறைந்த காரியமாக விளங்குகிற அந்தக் கை ரிக்ஷாக் கருவிகளை எல்லாம் அகற்றுகிற திட்டத்தைத்தான் இங்கே நாம் நிறைவேற்றவிருக்கிறோம்.

''ஆகவே, அகற்ற வேண்டியவற்றை அகற்ற வேண்டிய தருணத்தில் அகற்றினால்தான் அரசு நிலையானதாக இருக்கும் ; அரசு ஒழுங்கானதாக இருக்கும் என்பதை நான் இன்றைக்கு ஒரு சூளுரையாக எடுத்துக் கொள்கிறேன்.

''அந்த வகையில்தான் நம்முடைய நாவலர் பேசுகிற நேரத்தில், ஏசுநாதரிடத்தில் இருந்த 12 மாணவர்களில் ஒருவன்—காட்டிக் கொடுப்பவனாக இருந்தான் என்று குறிப்பிட்டார். ஏசுநாதர் தாமதமாகக் கண்டுபிடித்தார். ஆகவே கஷ்டத்திற்கு ஆளானார்.

''என்னைப் பொறுத்தவரையில் எவ்வெப்போது அப்படிப்பட்ட மாணவர்கள் எங்கெங்கே தோன்றுவார்கள் என்பதை நான் நன்றாகக் கண்டறிவேன்.

# மடமை நீங்கக் கல்வி! வறுமை நீங்க மறுவாழ்வு!

# மனிதனை மனிதன் சுமக்கும் இழிநிலை இனியில்லை!

"ஆகவே, அகற்ற வேண்டியவற்றை ஒழுங்காக அகற்றுவேன் என்ற உறுதியை—கை ரிக்ஷாக்களை அகற்றுகிற இந்த நேரத்தில் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்கிறோமே அதற்கும் சிலர் பொறுமை கொள்கிறார்களே என்று நாவலர் இங்கே கேட்டார்

"இந்த விழாவிற்கு முன்பு சைதாப்பேட்டையில் நடைபெற்ற நரிக்குறவர் வீட்டுப் பிள்ளைகள்—அந்த மாணவர்களுக்கான ஒரு விடுதி திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியில் பேசிய என். வி. என். அவர்களும், சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களும் மிகுந்த உருக்கத்தோடு, இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்கிறோமே, அதைக் கேலி செய்கிறார்களே, நன்றி கிடையாதா? என்றெல்லாம் கேட்டார்கள். நான் அங்கேயே சொன்னேன்.

"இந்தக் காரியங்களை எல்லாம் கைம்மாறு கருதி நாம் செய்யவில்லை. நம்முடைய காரியங்களை நாம் செய்து கொண்டே போவோம். நம்முடைய பாதை நீளமானது; நம்முடைய பயணம் வெகு தொலைவில் உள்ளது. அப் பயணத்தை நடத்துகிற நேரத்தில், பாதையில் கற்கள் இடரலாம்; முட்கள் குத்தலாம்; காட்டாறுகள் குறுக்கிடலாம்; கடும் புலிகள் சீறலாம்; சிறுத்தைகள் வரலாம், சிம்மங்கள் கர்ஜிக்கலாம்; ஆனால் இவற்றை எல்லாம் எதிர்த்துத் தான் நம்முடைய இலட்சியப் பயணம் நிறைவேற வேண்டும் என்ற உறுதியோடு இந்தப் பயணத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

"நன்றி இல்லையா? பொறுமைப் படலாமா? கிண்டல் செய்யலாமா? கேலி செய்யலாமா? என்றெல்லாம் அந்த விழாவில் அம்மையார் கேட்ட போது நான் சொன்னேன்.

"இங்கே நரிக்குறவர்களுடைய மாணவர்களுக்கான இல்லத்தைத் திறந்து வைக்கிறோம். இன்னும் பத்து நாட்களுக்குப் பிறகு இங்கேயுள்ள சில மாணவர்களே கூட இதே இல்லத்தின் சுவரில் "கருணாநிதி ஒழிக" என்று எழுதக் கூடும். அப்படி எழுதினால் அதற்காக ஆத்திரப்பட மாட்டேன்; ஆச்சரியப்பட மாட்டேன்.

"குழந்தையைத் தூக்கி மார்புறத் தழுவுகிற நேரத்தில் அந்தக் குழந்தை தாயின்மேல் மலஜலம் கழித்து விடலாம். மார்புறத் தழுவினேனே குழந்தை மலஜலம் கழித்து விட்டதே என்று குழந்தையைத் தூக்கி எறிந்து விடமாட்டாள் தாய். அந்த மலத்தை எப்படிச் சந்தனம் போல் கருதி, எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் தாய் அதை வழித்து எறிவாளோ, அதைப் போலத்தான் இந்த அரசு அவர்களைப் பற்றியெல்லாம் எண்ணும் என்பதை நரிக்குறவர் மாணவர்களிடம் சொன்னேன்.

"அவர்களிடம் சொன்னதைத் தான் கைரிக்ஷாக்களை மாற்றி இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களைப் பெறுகிற அருமைத் தோழர்களே, உங்களுக்கும் சொல்லி, 'வாழ்க நீங்கள்' என்று கூறி விடை பெறுகிறேன்."

—முதல்வர் கலைஞர் தமது உரையை முடித்து விட்டு கைரிக்ஷா வழங்கும் பணியை மேற்கொண்டார்.

திடலில் அணி அணியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன சைக்கிள் ரிக்ஷாக்கள். என்றாலும், அனைத்தையும் மேடையின் அருகில் கொண்டு வந்து, அவற்றை முதல்வர் வழங்குவது என்பது சிரமமான செயல் என்பதால், மூன்றே மூன்று சைக்கிள் ரிக்ஷாக்கள் மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

மூன்று சைக்கிள் ரிக்ஷாக்களையும், மூன்று தொழிலாளருக்கு முதல்வர் வழங்கிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது.

முதலில் தருமலிங்கம் என்பவருக்கு, சைக்கிள் ரிக்ஷாவை வழங்கினார்; அவரது கழுத்திலே மாலை அணிவித்து, அவரை சைக்கிள் ரிக்ஷாவிலே அமர வைத்து முதுகைத் தட்டிக் கொடுத்தனுப்பிய முதல்வர் கலைஞர் அவர்களின் செயல், மகனுக்கு வெற்றிப் பாதையைக் காட்டி அனுப்புகின்ற கடமை மிகு தந்தை ஒருவரின் அன்புத் தொண்டினை நினைவுறுத்தியது.

அதன்பின், சொக்குவேல், தனபால் என்னும் இருவருக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை முதல்வர் வழங்கினார். அவர்களுக்கும் மாலை அணிவித்து அவர்களைத் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார் முதல்வர்.

அப்போது எழுந்த 'முதல்வவர் கலைஞர் வாழ்க' என்னும் மகிழ்ச்சி ஒலி, அரசினர் தோட்டம் முழுவதும் எதிரொலித்தது.

தமிழ்நாடு அரசு உள்துறைச் செயலாளர் திரு. எஸ். பி. அம்புரோஸ் நன்றியுரை கூறிய போது குறிப்பிட்டார்.

"இந்த நாளை ரிக்ஷாத் தொழிலாளர்களின் மறுவாழ்வு தினம் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. புரட்சிகரமான திட்டம், அமைதியான முறையில் இங்கே நடைபெறுகிறது. விழாவிலே மூன்று ரிக்ஷாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விழா முடிவுற்றதும் முந்நூறு ரிக்ஷாக்கள் கொடுக்கப்படும். இந்த மாத இறுதிக்குள் இன்னும் 500 ரிக்ஷாக்கள் வழங்கப்படும்' என்று குறிப்பிட்டார்.

அவரது நன்றியுரைக்குப் பின்னர், விழா முடிந்தது; என்றாலும் மக்கள் கூட்டம் திடலை விட்டு நகர்ந்து செல்லவில்லை. முந்நூறு ரிக்ஷாக்களைத் தொழிலாளர்கள் எடுத்துச் செல்லும் காட்சியைக் காண்பதற்காக எல்லாரும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

விழாவுக்கு வந்திருந்த பெருமக்கள் எல்லாம் மனிதாபிமானத்தைக் காட்டுகின்ற இந்த மாபெரும் தொண்டுக்கு வாழ்த்துக் கூறியபடியே கலைந்து சென்றார்கள்.

சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி




# சூரியகாந்தி சூரியகாந்தி சூரியகாந்தி

**அட்டை சொல்லும் கட்டுரை**

ஒரு காலத்தில் தமிழ் நாட்டின் வீட்டுத் தோட்டங்களிலும், பூங்காக்களிலும் அழகுக்காகப் பயிரிடப்பட்டு வந்த சூரிய காந்தி, தற்பொழுது தமிழ் நாட்டிற்கு ஏற்ற ஒரு சிறந்த எண்ணெய் வித்துப் பயிராக விளங்குகிறது. சோவியத் யூனியன், பல்கேரியா, ருமேனியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், அர்ஜெண்டைனா, உருகுவே, கனடா, யூகோஸ்லேவியா, ஹங்கேரி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் சூரிய காந்தி முக்கியமான எண்ணெய் வித்துப் பயிராகவே சாகுபடி செய்யப்படுகிறது. அந்நாடுகளில் தாவரக் கொழுப்பு ( Vegetable Fat ) தயாரிக்கச் சூரிய காந்தியே முக்கிய ஆதாரமாக விளங்கி வருகிறது.

வளர்ந்து வரும் நாடுகளுக்கும், மக்கள் தொகைப் பெருக்கத்தால் வறுமை நிலவும் நாடுகளுக்கும் வாழ்வளிக்கும் பயிராகச் சூரியகாந்தி உதவுகிறது. எனவே, வளர்ந்து வரும் இந்தியாவின் மறு மலர்ச்சிக்குச் சூரிய காந்தி பெருந்துணை புரியும் என்பது திண்ணம்! இந்திய நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை (Foreign Exchange) ஈட்டுவதற்கும், இந்திய மக்களின் உடல் நலத்தை மேம்படுத்தவும், இந்தியாவில் மேலும் பல புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கவும் சூரிய காந்தி வழிவகுக்கும் என்றால் மிகையன்று!

## சூரியகாந்தியின் பயன்கள்

சூரிய காந்திச் செடியின் விதை, உமி, பூக்கொண்டை, பூவிதழ், இலை, தண்டு முதலிய எல்லாப் பாகங்களும் சூரியகாந்தி எண்ணெய்யும், பிண்ணாக்கும் பின்கண்டவாறு பல்வேறு வகைகளில் பயன்படுகின்றன.

### விதை

1. சூரிய காந்தி விதைகளில் 45 முதல் 47 சதம் வரை எண்ணெய் இருப்பதால், எண்ணெய் எடுக்கப் பயன்படுகின்கின்றன.

2. சூரியகாந்தி விதைகளில் 19·1 சதம் வரை புரதச்சத்து இருப்பதால், விதைகளின் மேல் தோலை (உமி) அகற்றிவிட்டு நேரடியாக உண்பதற்கு ஏற்றதாக உள்ளது.

3. சூரிய காந்தி விதைகளின் பருப்பை நன்கு வறுத்து, மசாலாப்பொடி கலந்து உண்ணலாம்.

4. சூரியகாந்தி விதைகளின் பருப்பை மாவாக்கி "அல்வா" போன்ற இனிப்புகளும் செய்யலாம்.

5. பதப்படுத்தப்பட்ட காய்கறிகள், மீன் ஆகியவைகள் தயாரிக்க, சூரிய காந்தி விதையின் பருப்புகள் பயன்படுகின்றன.

6. சூரியகாந்தி விதைகளை நன்கு அரைத்துச் சலித்து எடுக்கப்படும் மாவில் 50 சதம் வரை புரதச் சத்து அடங்கியுள்ளதால், சூரியகாந்தி மாவு கால் நடைகளுக்கும், கோழிகளுக்கும் சிறந்த தீனியாகப் பயன்படுகின்றது.

### உமி

'ஹெக்சோஸ்' (Hexose) 'பென்டோஸ்' (Pentose) ஆகிய பொருள்கள் தயாரிக்கச் சூரிய காந்தி விதையின் உமி (எடையில் 25 முதல் 29 சதம்) பயன்படுகிறது. ஈதைல் ஆல்கஹால், சத்துள்ள ஈஸ்ட் ஆகியவை தயாரிக்க 'ஹெக்சோஸ்' பயன்படுகிறது. பிளாஸ்டிக், செயற்கை நார், உடையாத கண்ணாடி, மற்றும் இதர இரசாயனப் பொருள்கள் செய்ய உதவிடும் 'பர்பரால்' (Eurfural) என்னும் பொருள் தயாரிக்க 'பென்டோஸ்' உதவுகிறது.

### பூக்கொண்டை

1. விதைகளை அகற்றிய பிறகு பூக்கொண்டைகளைப் பசுமையாகவோ அல்லது காயவைத்தோ மாடுகளுக்குச் சிறந்த தீனியாக அளிக்கலாம்.

2. விதைகளை எடுத்த பிறகு பூக்கொண்டைகளில் 7 சதம் புரதச் சத்தும் 57 சதம் வரையான தழைச்சத்து அல்லாத பொருள்களும் உள்ளதால், 'பெக்டின்' என்னும் ஒரு வகை உணவுப் பொருள் தயாரிக்கப் பூக்கொண்டைகள் பயன்படுகின்றன. ஜெல்லி, ஜாம், கற்கண்டு, பழ ஜெல்லி போன்றவை தயாரிக்க 'பெக்டின்' உதவும்.

### பூவிதழ்

சூரியகாந்திப் பூவின் மஞ்சள் நிறப் பூவிதழ்களிலிருந்து மஞ்சள் நிறச் சாயம் (Dye) தயாரிக்கலாம்.

### இலை

1. சூரியகாந்தி இலைகளில் 14 முதல் 16 சதம் புரதச் சத்தும், 95 சதம் வரை 'க்ரோட்டின்' (Carotene) என்ற பொருளும் அடங்கியுள்ளதால் சூரியகாந்திச் செடியின் இலைகளைக் கால்நடைகளுக்குத் தீவனமாக அளிக்கலாம். பூப்பூக்கும் சமயத்தில் சூரியகாந்திச் செடிகளை வெட்டி, கால் நடைத் தீவனமாகப் பயன்படுத்துவது சிறந்தது. அவைகளை 'சைலேஜ்' முறையில் பதப்படுத்தி வைத்துக் கொண்டு, கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுக்கலாம்.

2. சூரியகாந்தி இலைகளைப் பசுந்தழையாகவும் பயன்படுத்தலாம்.

### தண்டு

1. அறுவடைக்குப் பிறகு சூரியகாந்திச் செடியின் தண்டுகளைக் காயவைத்து விறகாகப் பயன்படுத்தலாம்.

2. 'பொட்டாசியம் கார்பனேட்' தயாரிக்கச் சூரிய காந்தியின் தண்டுகள் உபயோகமாகின்றன.

3. சூரியகாந்தியின் தண்டுகளை நறுக்கி, ஊறவைத்து, அரைத்துக் கூழ் போலாக்கி, நல்ல தரமான காகிதம் செய்யலாம்.

4. சூரிய காந்தியின் தண்டுகளைப் (இலைகளுடன்) பசுந்தாளுரமாகவும் பயன்படுத்தலாம்.

5. சூரிய காந்திச் செடிகளின் தண்டுகளைத் தண்ணீரில் ஊறவைத்து நார் எடுக்கலாம்.

### சூரியகாந்தி எண்ணெய்

சூரியகாந்தி விதைகளிலிருந்து எடுக்கப்படும் சூரியகாந்தி எண்ணெய் பாதியளவு உலரும் தன்மை (Semi-drying in nature) வாய்ந்தது. சூரியகாந்தி எண்ணெய் பின்கண்ட வகைகளில் பயன்படுகிறது :—

1. சமையலுக்கு மிகவும் உகந்த, மிகவும் உயர்ந்த தரமுள்ள எண்ணெய்யாக உள்ளது.

2. சூரியகாந்தி எண்ணெய்யில் கொழுப்பில் கரையக்கூடிய உயிர்ச்சத்து எ, டி, இ, கே, (Fat soluble Vitamins A, D, E and K) ஆகியவை உள்ளதால் மனித இனத்தின் உடல் நலத்திற்கு உதவுகிறது.

3. சூரிய காந்தி எண்ணெய்யில் 52 முதல் 62 சதம் வரை 'லினோலிக்' அமிலமும் (Linolic acid), 32 முதல் 47 சதம் வரை 'ஓலிக்' அமிலமும் (Oleic acid) உள்ளதால், இருதய நோய் உள்ளவர்களுக்குச் சூரியகாந்தி எண்ணெய் ஓர் வரப்பிரசாதமாகும்.

4. சூரியகாந்தி எண்ணெயை அன்றாடம் பயன்படுத்தி வந்தால், இரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்தும் 'ஆர்த்ரோஸ் கிளிரோசிஸ்' (Artherosclerosis) என்னும் மனித இனத்தின் கொடிய நோயைக் கட்டுப்படுத்தி நல்வாழ்வு வாழலாம்.

5. நீரிழிவு (Diabetes) நோயைக் கட்டுப்படுத்தவும் சூரியகாந்தி எண்ணெய் உதவுகிறது.

6. சூரியகாந்தி எண்ணெய்யில் நுண்ணுயிர் இயக்கமும் உள்ளதால், அது நோய் பரப்பும் நுண்ணுயிர்களை அழிக்க வல்லதாக உள்ளது.

7. சூரியகாந்தி எண்ணெய் சிறுநீர்க் கழிவினைத் தூண்டுகிறது.

8. மூச்சுக் குழாய், குரல் வளை, நுரையீரல் ஆகியவைகளில் உள்ள கபத்தை (சளி) வெளிக் கொணரும் மருந்தாகச் (Expectorant) சூரியகாந்தி எண்ணெய் பயன்படுகிறது. இருமல், சுவாசக் கோளாறு, வயிற்றுக் கடுப்பு போன்ற நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

9. சூரியகாந்தி எண்ணெயில் உள்ள கொழுப்புச் சத்து உடல் நலத்திற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது.

10. சிறந்த வகை 'மார்கரின்' (Margarin) என்னும் வெண்ணெய் தயாரிக்கச் சூரிய காந்தி எண்ணெய் பயன்படுகிறது.

11. சூரியகாந்தி எண்ணெய் விரைவில் உலர்ந்து விடக் கூடியதாகையால் 'வார்னிஷ்', 'பெயிண்டு', சோப்பு ஆகியவை தயாரிக்க உதவுகிறது.

12. கம்பளித் தொழிலுக்குப் பயன்படும் 'ஓலிக்' அமிலம் தயாரிக்கவும் சூரிய காந்தி எண்ணெய் உதவுகிறது.

### சூரியகாந்திப் பிண்ணாக்கு

1. சூரிய காந்திப் பிண்ணாக்கில் 26·3 சதம் புரதச் சத்தும் 8·1 சதம் கொழுப்புச் சத்தும், 1·5 சதம் சுண்ணாம்புச் சத்தும் உள்ளதால், சூரிய காந்தி பிண்ணாக்கு கால்நடைகளுக்குச் சிறந்த உணவாகப் பயன்படுகிறது.

### சூரியகாந்தியின் அறிமுகம்

இந்தியாவில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற பயிராகச் சூரியகாந்தி கருதப்பட்டு, முதன் முதலாக 1916-ஆம் ஆண்டில் மகாராட்டிர மாநிலத்திலும், பிறகு 1924-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலும் சூரியகாந்தி அறிமுகப்படுத்தப் பட்டது. அப்பொழுது சூரியகாந்திப் பயிர் மூலம் எக்டேருக்கு ஒரு டன்னுக்கும் அதிகமான அளவு விதைகளும், 10 முதல் 20 டன் வரை பசுந்தாள்களும் கிடைத்தபோதிலும், சூரியகாந்தியைப் பயிரிடும் ஆர்வம் நாளடைவில் குறைந்து விட்டது. இதற்குக் காரணம் அப்பொழுது அறிமுகப்பட்டுத்தப்பட்ட 'ரஷ்யன் மம்மத்' (Russian Mammoth) 'சூரிய உதயம்' (Sun rise) போன்ற ரகங்களின் எண்ணெய் கொடுக்கும் திறன் மிகமிகக் குறைந்த அளவில் இருந்ததேயாகும்.

அண்மையில் மீண்டும் இந்தியாவில் சூரியகாந்தியைப் பயிரிடும் ஆர்வம் தோன்றியதற்கு இந்திய அரசின் வேளாண்மை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. ஏ.பி. ஷிண்டே அவர்களே மூலகாரணமாவார்! அவருடைய தூண்டுதலினாலேயே 1969-ஆம் ஆண்டு அதிக அளவு எண்ணெய் தரும் சக்தி கொண்ட சூரியகாந்தி ரகங்கள் ரஷியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிதி உதவியுடன், அனைத்து இந்திய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மற்றும் மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் இந்தியாவிற்குச் சூரியகாந்தி ஏற்றதா என்பதை ஆராய்வதற்காக நடத்தப் பெற்ற ஏராளமான பரிசோதனைகளே இந்தியாவில் சூரிய காந்தி பரவுவதற்கு வழிகோலியுள்ளன.



2. சூரிய காந்தி பிண்ணுக்கில் 4·2 சதம் தழைச் சத்தும், 2·3 சதம் மணிச் சத்தும், 1·4 சதம் சாம்பல் சத்தும் இருப்பதால், சூரிய காந்தி பிண்ணுக்கைப் பயிர்களுக்கு எருவாகவும் பயன்படுத்தலாம்.

3. கோழித் தீனி தயாரிக்கச் சூரிய காந்தி பிண்ணுக்கு உதவுகிறது.

### இதர பயன்கள்

1. குறைந்த வயதுடையதாகவும், அதிக மகசூல் அளிக்க வல்லதாகவும் இருப்பதால் சூரிய காந்தி பன்முறைச் சாகுபடிக்கு (Multiple cropping) ஏற்றதாக உள்ளது.

2. சூரியகாந்தி சாகுபடி செய்வதால், நாட்டில் தேன் உற்பத்தி பெருகும்.

### எண்ணெய்ப் பற்றுக் குறையைத் தீர்த்திடலாம் !

இந்தியாவில் நிலவும் தாவர எண்ணெய்யின் பற்றுக்குறையைத் தவிர்ப்பதற்கும், தொழிற்சாலைகளின் தேவையை ஈடு செய்வதற்கும் ரஷியா போன்ற வெளி நாடுகளிலிருந்து 1966-67 முதல் 1970—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை 59·54 கோடி ரூபாய் மதிப்புள்ள சூரிய காந்தி எண்ணெய், சோயா மொச்சை எண்ணெய் ஆகியவைகளை இறக்குமதி செய்துள்ளோம். இவ்வாறு இறக்குமதி செய்வதனுல் பல கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை நாம் இழந்து விடுகின்றோம். எனவே, இறக்குமதியை நிறுத்தவும், அந்நியச் செலாவணி இழப்பைத் தவிர்க்கவும் நமது நாட்டின் எண்ணெய் உற்பத்தியை விரைந்து பெருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நம்நாட்டின் எண்ணெய் உற்பத்தியை விரைந்து பெருக்குவதற்குக் குறுகிய காலத்தில் நிறைந்த மகசூல் அளித்து அதிக அளவு எண்ணெய் தரும் சூரிய காந்தியைப் பெரும் பரப்பளவில் விரைந்து பயிரிடுவதே சிறந்த வழியாகும்.

### தமிழ் நாட்டிற்கு ஏற்றதா ?

தமிழ் நாட்டின் மண்வளத்திற்கும், கால நிலைமைகளுக்கும் மிகவும் ஏற்றதாக சூரிய காந்தி விளங்குகிறது. சூரிய காந்திக்கு உள்ள பின்கண்ட குணநலன்கள், தமிழ் நாட்டில் சூரியகாந்தியைப் பயிரிடுவதற்கு பேராதரவாக இருக்கின்றன.

1. குறைந்த வயது (85 நாள்);

2. சூரிய வெளிச்சத்தினுல் எந்தவித மாற்றமும் பெருது (Photoinsensitivity). இதனுல் சூரிய காந்தியை ஆண்டு முழுவதும், எப்பொழுது வேண்டுமானுலும் பயிரிடலாம்.

3. குறிப்பிட்ட பரப்பில், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட அளவு தண்ணீரைக் கொண்டு அதிக அளவு எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும்.

4. வறட்சியைத் தாங்கிக் கொள்ளும் தன்மை.

5. சூரிய காந்தியின் விதைகளிலிருந்து எளிதில் எண்ணெய் எடுக்க முடிகிறது. நாட்டுச் செக்கிலிட்டும் எண்ணெய் எடுக்கலாம்.

6. உண்பதற்குகந்த உயரிய தரம் கொண்ட எண்ணெய் தரும் குணம்.

மேற்கூறிய குணங்களைக் கொண்டுள்ளதால் தமிழ் நாட்டின் வேளாண்மையில் பின்கண்ட காரணங்களால் சூரிய காந்தி முக்கிய அங்கம் வகிக்க வல்லது என்பது தெளிவாகிறது.

1. மானுவாரி நிலைமையில் இந்தியாவில் சூரிய காந்தியின் எண்ணெய் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 377 கிலோவாக உள்ளது. ஆனுல், இந்தியாவில் நிலக் கடலையின் எண்ணெய் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 226 கிலோவாகவே உள்ளது. ஆகவே சூரிய காந்தி, குறிப்பிட்ட பரப்பிலிருந்து நிலக் கடலையை விட 66 சதம் அதிக எண்ணெய் கொடுக்க வல்லதாக இருப்பதுடன், சாகுபடி செய்யும் நிலத்தை 10 முதல் 15 நாட்கள் முன்னதாகவே அறுவடைக்குக் கொண்டு வந்து, அடுத்த பயிரிடுவதற்கு நிலத்தைச் சீக்கிரமாகக் கிடைக்கச் செய்கிறது.

2. சூரிய காந்தி குறைந்த வயதுடையதாக இருப்பதாலும், சூரிய வெளிச்சத்தினுல் மாற்றம் பெருது இருப்பதாலும் தற்பொழுதுள்ள பயிர் மாற்ற முறையில் (Crop Rotation) இரு முக்கியப் பயிர்களுக்கு இடையில் உள்ள காலத்தில் இறைவைத் துணைப்பயிராகச் (Catch crop) சூரிய காந்தியைச் சாகுபடி செய்யலாம்.

3. சூரிய காந்தி விரைந்து வளரும் பயிராக இருப்பதால், ஆரம்பக் காலத்தில் மெதுவாக வளரும் நீண்ட காலப் பயிருடன் சூரிய காந்தியைத் தோழமைப் பயிராகச் (Companion crop) சாகுபடி செய்யலாம். புது டில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலும், லக்னோவில் உள்ள மைய கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலும் மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளின்படி கரும்புடன், சூரிய காந்தியைத் தோழமைப் பயிராகப் பயிரிட்டுப் பயன் பெறலாம். அது போலவே, மரவள்ளிக் கிழங்குப் பயிருடனும், தென்னையுடனும் சூரிய காந்தியைத் தோழமைப் பயிராகச் சாகுபடி செய்யலாம்.

4. சூரிய காந்தியின் வேர்கள் ஆழமாகச் செல்வதால், வறட்சியைத் தாங்கிக் கொள்ளும். ஆகவே, மானாவாரி நிலங்களுக்கு நிலக் கடலையைவிடச் சூரிய காந்தி மிகவும் ஏற்றதாக உள்ளது. மழை குறைவாகப் பெய்தால், நிலக் கடலையின் மகசூல் பெருமளவில் குறைந்து விடக் கூடும். ஆனால் சூரிய காந்தி குறைந்த மழையிலும் நன்கு வளர்ந்து, நிலக்கடலையைவிட அதிகப் பயன் தரவல்லது. மழை பெய்வதில் தாமதம் ஏற்பட்டு, நிலக்கடலைப் பட்டம் தவறிவிட்டாலும், பிறகு பெய்யும் மழையைக் கொண்டு சூரியகாந்தியைச் சாகுபடிசெய்து நல்ல மகசூல் பெற்றுப் பயனடையலாம். எக்டேருக்கு 200 கிலோ நிலக்கடலைக் கூட விளையாத நிலங்களில், சூரிய காந்தி எக்டேருக்கு 400 கிலோ விளைந்துள்ளது.

5. மானாவாரியிலும் சூரிய காந்தி எக்டேருக்கு 1 டன் மகசூலுக்குக் குறையாமல் பல இடங்களில் கொடுத்துள்ளது. தகுந்த ஈர நிலையில் சூரிய காந்தி மானாவாரியிலேயே எக்டேருக்கு 1,300 முதல் 1,400 கிலோ வரை மகசூல் அளித்துள்ளது. ஒரு மித்த செய் நேர்த்தி முறைகளை மேற்கொண்டு இறைவையாகப் பயிரிடும் போது சூரிய காந்தி எக்டேருக்கு 3,600 கிலோ முதல் 3,800 கிலோ வரையிலும் மகசூல் கொடுத்துள்ளது.

6. குறுகிய காலத்தில் மிகுந்த இலாபம் கொடுக்கும் பயிராக இருப்பதால், பல பயிர் சாகுபடிக்குச் சூரிய காந்தி மிகவும் ஏற்றதாக இருக்கிறது.

ஆகவே, தமிழ் நாட்டிற்குச் சூரிய காந்தி மிகவும் ஏற்ற பயிராக உள்ளது என்பது வெள்ளிடை மலையாகும்!

**நிலக்கடலை, எள் ஆகியவற்றைவிடச் சூரியகாந்தியே சிறந்தது!**

அண்மைக் காலத்தில் அயல் நாட்டுச் சூரிய காந்தி ரகங்களைக் கொண்டுவந்து இந்தியாவில் சாகுபடி செய்து பார்த்ததில், மாபெரும் வெற்றி கிட்டியுள்ளது. பல்வேறு மண் வகைகளில் குறைந்த அளவு மழையைக் கொண்டு மானாவாரியாகவும், நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் இறைவையாகவும் பயிரிட்டதில் சூரிய காந்தி நல்ல மகசூல் அளித்துள்ளது என்பதை நாளேடுகளும், திங்கள் ஏடுகளும், வார ஏடுகளும், வானொலியும் அடிக்கடி அறிவித்து வருகின்றன.

புதிதாகப் புகுத்தப்பட்டுள்ள ஒரு பயிராகச் சூரிய காந்தி இருப்பதால், எல்லா உழவர் பெருமக்களும் தற்பொழுது புகழ் பெற்ற எண்ணெய் வித்துப் பயிர்களாக விளங்கும் நிலக் கடலை, எள் ஆகியவற்றுடன் சூரிய காந்தியின் மகசூல் திறன், எண்ணெய் தரும் சக்தி ஆகியவைகளை ஒப்பிட்டறிய விரும்புகின்றார்கள். இதைக் குறிக்கோளாகக் கொண்டு கோவில் பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1972-ஆம் ஆண்டின் கோடைப்பட்டத்தில் நிலக்கடலை, எள் ஆகியவற்றுடன் சூரிய காந்தியை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதுபோன்ற பரிசோதனைகள், அனைத்து இந்திய ஒருங்கிணைந்த மானாவாரிப் பண்ணைத் திட்டத்தின் கீழ், இந்தியாவின் பல்வேறு இடங்களில் மானாவாரி நிலைமையில் நடத்தப் பெற்றன.

இப்பரிசோதனைகளில், நிலக் கடலையையும், எள்ளையும் விட மகசூல் அளிப்பதில் சூரிய காந்தி மிஞ்சிவிட்டது. அப்பரிசோதனைகளில் கீழ்க்கண்டவாறு மகசூல் கிடைத்துள்ளது.

| பயிரின் பெயர். | சராசரி எக்டேர் மகசூல். (கிலோ) |
|---|---|
| சூரிய காந்தி | 820 |
| நிலக்கடலை | 400 |
| எள் | 270 |

சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் மகசூல் திறனை ஒப்பிட்டறிய, கோவில் பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1972-ஆம் ஆண்டு கோடைப்பட்டத்தில் (ஏப்ரல் முதல் ஜூன் வரை)

### சூரியகாந்தி விதையின் அளவைகள்

| | |
|---|---|
| 1 கிலோ விதைகள் | 2·22 லிட்டர். |
| 1 கிலோ விதைகள் | 1·22 பட்டணம்படி. |
| 1 லிட்டர் விதைகள் | 0·450 கிலோ. |
| 1 லிட்டர் விதைகள் | 0·54 பட்டணம்படி. |
| 1 பட்டணம்படி விதைகள் | 0·820 கிலோ. |
| 1 பட்டணம்படி விதைகள் | 1·82 லிட்டர். |

### சூரியகாந்தி எண்ணெய் அளவைகள்

| | |
|---|---|
| 1 கிலோ எண்ணெய் | 1·12 லிட்டர். |
| 1 லிட்டர் எண்ணெய் | 0·890 கிலோ. |
| 1 லிட்டர் எண்ணெய் | 0·57 பட்டணம்படி. |
| 1 பட்டணம்படி எண்ணெய் | 1·75 லிட்டர். |

### சூரியகாந்தி பற்றிய அளவையை மாற்றும் முறைகள்

| | |
|---|---|
| ஒரு பட்டணம்படி விதைகளை கிலோவாக மாற்ற | 0·82-ஆல் பெருக்கவும். |
| ஒரு லிட்டர் விதைகளை கிலோவாக மாற்ற | 0·45-ஆல் பெருக்கவும். |
| ஒரு பட்டணம்படி எண்ணெய்யைக் கிலோவாக மாற்ற | 1·557-ஆல் பெருக்கவும். |
| ஒரு லிட்டர் எண்ணெய்யைக் கிலோவாக மாற்ற | 0·89-ஆல் பெருக்கவும். |
| ஒரு கிலோ எண்ணெய்யை லிட்டராக மாற்ற | 1·12-ஆல் பெருக்கவும். |
| ஒரு கிலோ எண்ணெய்யை பட்டணம்படியாக மாற்ற | 0·64-ஆல் பெருக்கவும். |

ஒவ்வொன்றும் 200 சதுர மீட்டர் பரப்புள்ள 3 தனிகளில் முறையே கோவில்பட்டி—1 சூரிய காந்தி (இ. சி. 68414 என்ற ரஷிய ரகம்), பொள்ளாச்சி—1 நிலக்கடலை, திண்டிவனம்—3 எள் ஆகியவைகள் இறைவையாகப் பயிரிடப்பட்டன. அம்மூன்று எண்ணெய் வித்துப் பயிர்களும் ஒரே நாளில் அதாவது 3-4-1972 அன்று விதைக்கப்பட்டன. ஆனால் சூரிய காந்தி 15-6-1792 அன்றும், எள் 27-6-1972 அன்றும், நிலக்கடலை 19-7-1972 அன்றும் அறுவடைக்கு வந்துள்ளன.

அப்பரிசோதனையில் கீழ்க் கண்டவாறு மகசூல் கிடைத்துள்ளன.

| பயிரின் பெயர் | எக்டேர் மகசூல். (கிலோ) |
|---|---|
| கோவில்பட்டி—1 | |
| சூரியகாந்தி .. | 2,665 |
| பொள்ளாச்சி—1 | |
| நிலக்கடலை .. | 1,390 |
| திண்டிவனம்—3 | |
| எள் .. .. | 350 |

அப்பரிசோதனையின் முடிவுகள் கீழே அட்டவணை-1-ல் விளக்கப்பட்டுள்ளன.

அட்டவணை—1.

சூரியகாந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் ஒப்பியல் பரிசோதனை முடிவுகள்

| பயிரின் பெயர் | வயது (நாட்கள்) | கணக்கிடப்பட்ட எக்டேர் மகசூல் (கிலோ) | எக்டேர் மகசூலிலிருந்து கிடைக்கக்கூடிய எண்ணெய் அளவு (கிலோ) | ஒரு எக்டேரிலிருந்து ஒரு நாளைக்கு உற்பத்தியாகக் கூடிய எண்ணெய் அளவு (கிலோ) | எக்டேருக்கு சாகுபடிச் செலவு (ரூபாய்) | எக்டேருக்கு மொத்த வருவாய் (ரூபாய்) | எக்டேருக்கு நிகர வருவாய் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| கோவில்பட்டி—1 | | | | | | | |
| சூரிய காந்தி .. .. | 73 | 2,665 | 1,252 | 17.2 | 925 | 3,998 | 3,073 |
| பொள்ளாச்சி—1 | | | | | | | |
| நிலக்கடலை .. .. | 107 | 1,390 | 528 | 4.9 | 1,178 | 2,800 | 1,622 |
| திண்டிவனம்—3 | | | | | | | |
| எள் .. .. .. | 85 | 350 | 182 | 2.1 | 655 | 1,050 | 395 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விவரங்களிலிருந்து சூரிய காந்தியே நிலக்கடலை, எள் ஆகியவற்றை விட அதிக மகசூலும், அதிக இலாபமும் அளிக்கக் கூடியது என்பது புலனுகின்றது.

சூரிய காந்தி விதைகளிலிருந்து 47 சதமும், நிலக்கடலையிலிருந்து (மேல் தோலுடன்) 50.6 சதமும், எள்ளிலிருந்து 52 சதமும் எண்ணெய் கிடைக்கும் என்ற மதிப்பில் கணக்கிட்டால் ஒரு எக்டேர் நிலத்திலிருந்து ஒரு நாளில் சூரியகாந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் மூலம் முறையே 17.2 கிலோ, 4.9 கிலோ, 2.1 கிலோ எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும் என்பது புலனுகியுள்ளது.

கோவில்பட்டி—1 சூரியகாந்தி 73 நாட்களிலும், பொள்ளாச்சி—1 நிலக்கடலை 107 நாட்களிலும், திண்டிவனம்—3 எள் 85 நாட்களிலும் அறுவடைக்கு வந்துள்ளதால், சூரிய காந்தியே மிகவும் குறுகிய காலப் பயிர் என்பதும் தெளிவாகியுள்ளது.

அப்பரிசோதனையிலிருந்து சூரிய காந்தியே இறைவையில் குறிப்பிட்ட பரப்பில், குறிப்பிட்ட காலத்தில் அதிக மகசூல் அளிக்க வல்லது என்பதும், சூரிய காந்தியை வெகுவிரைவாகப் பெரும்பரப்பில் சாகுபடிக்குக் கொண்டு வருவதே தமிழ் நாட்டின் எண்ணெய் உற்பத்தியை விரைந்து பெருக்கிட உதவும் என்பதும் நன்கு தெளிவாகியுள்ளன.

## எண்ணெய் தரும் திறன்!

சூரிய காந்தி விதைகளின் எண்ணெய் தரும் திறனை ஆராய்வதற்கான பரிசோதனையும் கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற் கொள்ளப்பெற்றன. ஒரே அளவு எடையுள்ள சூரிய காந்தி விதைகள், நிலக்கடலை விதைகள், எள் விதைகள் ஆகியவைகளைத் தனித்தனியே 'ரோட்டரி' இயந்திரத்தில் (Rotary oil crushing unit) இட்டு எண்ணெய் எடுத்து அவைகளின் எண்ணெய் தரும் திறன் ஆராயப்பட்டது. ஒரே அளவு எடையின் அடிப்படையில் 'ரோட்டரி' இயந்திரத்தில் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவை முறையே 33 சதம், 40 சதம், 36 சதம்என்ற அளவில் எண்ணெய் கொடுத்துள்ளன. இந்த அடிப்படையில் ஒரு எக்டேர் பரப்பிலிருந்து கிடைக்கும் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் மகசூல்களிலிருந்து கிடைக்கும் எண்ணெய் பின்கண்ட அளவில் இருக்கின்றன.

| எண்ணெய் வித்தின் பெயர் | ஒரு எக்டேர் மகசூலில் இருந்து கிடைக்கும் எண்ணெய் (கிலோ) |
|---|---|
| சூரிய காந்தி .. | 879 |
| நிலக்கடலை .. | 417 |
| எள் .. .. | 126 |

'ரோட்டரி' இயந்திரத்தில் சூரிய காந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறன் நிலக்கடலையைவிட 7 சதம் குறை



16—6—3

வாகவும், எள்ளை விட 3 சதம் குறைவாகவும் இருந்தபோதிலும், அதிக மகசூல் கொடுப்பதால், எக்டேர் மகசூலிலிருந்து கிடைக்கும் எண்ணெயின் அளவு சூரியகாந்தியிலேயே அதிகமாக உள்ளது.

இப்பரிசோதனையில் நிலக்கடலை பருப்புகளாகவும், (மேல்தோல் நீக்கியது), சூரிய காந்தி விதைகளாகவும் (மேல் தோல் நீக்கப்படாதது) எண்ணெய் எடுக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளதால் சூரிய காந்தியும், நிலக்கடலையும் சமமான அடிப்படையில் ஒப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். சூரிய காந்தி விதைகளில் உள்ள மேல் தோலை (உமி) நீக்கினால் 75 சதம் பருப்புகள் கிடைக்கக் கூடும். எனவே, சூரிய காந்தி எண்ணெய் எடுக்க, சூரிய காந்தி விதைகளுக்குப் பதிலாக, மேல் தோல் நீக்கப்பட்ட சூரிய காந்திப் பருப்புகளைப் பயன்படுத்தினால் சூரிய காந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறன் நிலக்கடலையைவிட நிச்சயமாக அதிகமாக இருக்கும் என்பது திண்ணம்!

சூரிய காந்தி விதைகளின் மேல் தோலை அகற்றாமல் அப்படியே எண்ணெய் எடுக்கப் பயன்படுத்தினாலும் நிலக்கடலை, எள் ஆகியவற்றைவிட குறுகிய காலத்தில் அதிக மகசூல் அளிக்கும் திறன் பெற்றிருப்பதால்—குறிப்பிட்ட பரப்பில், குறிப்பிட்ட காலத்தில் சூரிய காந்தியே அதிக எண்ணெய் கொடுக்கிறது என்பதும் நன்கு தெளிவாகிறது.

ஆனால் நமது உழவர் பெருமக்கள் நிலக்கடலை அல்லது எள் அல்லது சூரிய காந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறனை கொள்ளளவு அடிப்படையிலேயே ( Volume Basis ) ஒப்பிட்டு, சிறந்தது எது என முடிவு செய்யும் பழக்கம் உடையவர்கள்! கொள்ளளவு அடிப்படையில் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றின் எண்ணெய் கொடுக்கும் திறன் முறையே 17 சதம், 28 சதம், 25 சதம் அளவில் உள்ளன.



அதாவது 100 படி சூரிய காந்தி விதையிலிருந்து 17 படி எண்ணெய், 100 படி நிலக்கடலைப் பருப்பிலிருந்து 28படிஎண்ணெய், 100 படி எள்ளிலிருந்து 25 படி எண்ணெய் கிடைக்கக்கூடும். இந்த அடிப்படையில் கணக்கிட்டால், ஒரு எக்டேர் சூரிய காந்தி, நிலக்கடலை, எள் ஆகியவற்றிலிருந்து பின்கண்ட அளவு எண்ணெய் கிடைக்கும்.

| | | படி |
|---|---|---|
| சூரியகாந்தி | .. | 562.5 |
| நிலக்கடலை | .. | 266.8 |
| எள் | .. .. | 80.6 |

ஆகவே கொள்ளளவு அடிப்படையிலும் சூரிய காந்தியே ஒரு எக்டேர் பரப்பில் அதிக எண்ணெய் கொடுக்க வல்லது என்பது தெளிவாகிறது.

சூரிய காந்தி விதைகளின் மேல் தோலை (உமி) நீக்கிவிட்டு பருப்புகளை மட்டும் 'ரோட்டரி' ஆலையில் இட்டு எண்ணெய் எடுத்தால், சூரிய காந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறன் மேலும் அதிகமாக இருக்கும். சில வியாபாரிகள் நெல் அரைக்கும் இயந்திரத்திலேயே சூரிய காந்தி விதைகளை இட்டுத் தகுந்தவாறு சரி கட்டி இயந்திரத்தை இயக்கி, சூரிய காந்தி விதைகளின் மேல் தோலை நீக்கி விட்டுப் பிறகு ரோட்டரி ஆலையில் இட்டு எண்ணெய் எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. நாடெங்கிலும் ஏராளமான நெல் அரைக்கும் இயந்திரங்கள் உள்ளதால் நெல் அரைக்கும் இயந்திரத்திலேயே சூரிய காந்தி விதைகளின் மேல் தோலை அகற்றும் பணி வெற்றிகரமாக முடியுமானால், அது உழவர் பெருமக்களுக்குப் பேருதவியாக இருக்கும். எனவே, இவ்வகையிலும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### சூரிய காந்தி சாகுபடி குறிப்புகள்

ரகம்: தமிழ்நாட்டில் சாகு செய்வதற்கு 'கோவில்பட்டி-1' ( K. 1 ) எனப்படும் இ. சி. 68414 ( E.C. 68414 ) என்ற ரஷ்ய நாட்டு ரகமே சிறந்தது. இதன் வயது இறைவையில் 75 முதல் 85 நாட்களாகவும், மானாவாரியில் 80 முதல் 90 நாட்களாகவும் உள்ளன. கோவை மாவட்டத்தில் இ.சி. 68415 என்ற ரஷ்ய ரகம் நல்ல பலன் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

மண் : கெட்டியான கரிசல் (களி) மண்ணிலிருந்து, மிருதுவான மண் வரை எந்த மண்ணிலும் சூரியகாந்தி நன்கு பயிராகி நல்ல மகசூல் தரும். தண்ணீர் வடியாமல் தேங்கி நிற்கக் கூடிய நிலங்களும், பி.எச். 8.5க்கு மேற்பட்ட களர் நிலங்களும், அமில நிலங்களும் சூரிய காந்தி பயிரிடுவதற்கு ஏற்றதல்ல! ஈரம் காக்கும் கரிசல் நிலங்கள் (தென் மாவட்ட நிலங்கள்) மழை குறைவாக இருந்தாலும் சூரிய காந்தி பயிரிட ஏற்றதாக உள்ளன.

பருவம் : இறைவைப் பயிராகச் சூரிய காந்தியை ஆண்டு முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் பயிரிடலாம். இறைவையில் அதிக மகசூல் பெற கீழ்க் கண்ட இரு பட்டங்களும் சிறந்தவை.

1. ஆனி, ஆடிப்பட்டம், (ஜூன்-ஜூலை முதல் ஆகஸ்டு-செப்டம்பர் வரை).

2. மாசிப்பட்டம் (பிப்ரவரி மார்ச்சு முதல் மே-ஜூன் வரை) நெல் அறுவடைக்குப் பிறகு விதைக்க ஏற்றது. சித்திரைப் பட்டத்திலும் (ஏப்ரல், மே) இறைவையில் பயிரிடலாம்.

மானாவாரியாகச் செம்மண் நிலத்தில் ஆடிப் பட்டத்திலும் (ஜூலை, ஆகஸ்ட்), கரிசல் நிலத்தில் புரட்டாசிப் பட்டத்திலும் (செப்டம்பர்-அக்டோபர்) புன்செய் நிலங்களில் பயிரிடலாம்.

• பூப் பூக்கும் காலத்திலும், மகரந்தச் சேர்க்கை நடைபெறும் காலத்திலும் சூரியகாந்தி மழையினால் பாதிக்கப்படாமல் இருக்குமாறு திட்டமிட்டுச் சூரிய காந்தியை விதைக்க வேண்டும். ஏனெனில், மழையில் மகரந்தப் பொடிகள் கொட்டி விடுவதுடன், மகரந்தச் சேர்க்கையும் நடைபெறாது. அதனால் சூரிய காந்திப் பூவில் எதிர்பார்க்கும் அளவில் விதைகள் உருவாகாமல், வெற்றிடமாக இருந்துவிடும்.

நிலக்கடலை, பருத்தி, கரும்பு, மரவள்ளி, மஞ்சள் ஆகியவை பயிரிடும் காலங்களில் ஊடு பயிராகவும் சூரிய காந்தியைப் பயிரிடலாம்.

**நிலம் தயாரித்தல்:**—ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு உரமிட்டு, நிலத்தை 3 அல்லது 4 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். இறைவைப் பயிருக்கு 30 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் நிலத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

**இரசாயன உரமிடுதல் :** மானாவாரிப் பயிருக்கு ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்து அளிக்க 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18.0 கிலோ யூரியா, 100 கிலோ சூப்பர் பாஸ்பேட் 26 கிலோ மியூரியேட் ஆப்பொட்டாஷ் ஆகியஉரங்களைக் கடைசி உழவில் அல்லது விதைப்பதற்கு முன் தூவி விடவேண்டும்.

இறைவைப் பயிருக்கு ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்து 32 கிலோ மணிச்சத்து, 32 கிலோ சாம்பல் சத்து அளிக்க 80 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 36 கிலோ யூரியா 200 கிலோ சூப்பர் பாஸ்பேட் 52 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களைக் கலந்து கொண்டு அதைப் பாரின் சரிவில் விதை ஊன்றும் இடத்திற்கு 2 அங்குலம் கீழாக, 2 அங்குல ஆழத்தில் (கூரிய குச்சியால் கீறிக்கொண்டு ) வரிசையாக இட்டு மண்ணால் மூட வேண்டும். அல்லது இவ்வுரங்களைக் கடைசி உழவில் இட்டுப் பிறகு பார் பிடித்துக் கொள்ளலாம்.

மேற்கூறிய உர அளவில் தழைச் சத்தில் பாதியை அடி உரமாகவும், பாதியை மேல் உரமாகவும் இட்டு நடத்தப் பெற்ற பரிசோதனைகளில் மேலுரமிடுவதால் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு மகசூல் அதிகம் கிடைக்கவில்லை. எனவே முழு அளவு தழைச் சத்தையும் அடியுரமாகவே போடுமாறு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. ஆயினும் ஆர்வமுள்ள உழவர் பெருமக்கள் பாதி தழைச் சத்தைக் களையெடுக்கும் போது மேலுரமாக இட்டுச் சாகுபடி செய்து பார்க்கலாம்.

**விதை அளவு :** ஏக்கருக்கு 4 கிலோ விதைகளை விதைக்க வேண்டும்.

**விதையுடன் மருந்து கலத்தல் :** ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'பிராசிகால்' அல்லது 'கேப்டான்' மருந்து கலந்து 3 மணி



நேரம் அப்படியே வைத்திருந்து பிறகு விதைத்தால், சிறு செடிகள் 'தண்டு அழுகல்' நோயினால் அழுகிப் போவதைத் தடுக்கலாம்.

**விதைப்பும் இடை வெளியும் :** புன்செய் நிலங்களில் விதைகளைத் தூவி விட்டு, ஏர் ஓட்டி விடுவதும், ஏர் ஓட்டிச் சால்களில் விதைப்பதும் தவறு. வரிசை வரிசையாக விதைகளை ஊன்றுவதே சிறந்த முறையாகும். மழைக்குப் பின் தகுந்த ஈரம் இருக்கும் போது உரமிட்டு உழுத பிறகு, வரிசைக்கு வரிசை 30 சென்டி மீட்டரும் (1 அடி), வரிசையில் குழிக்குக் குழி 15 சென்டிமீட்டரும் (6 அங்குலம்) இடைவெளிவிட்டு, குழிக்கு ஒரு விதை வீதம் ஊன்ற வேண்டும். விதைகளை 2.5 சென்டி மீட்டர் (1 அங்குலம்) ஆழத்தில் ஊன்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் 5 சென்டி மீட்டர் ( 2 அங்குலம்) ஆழத்திற்கு மேல் ஊன்றக் கூடாது. மண்ணில் ஈரம் குறைவாக இருந்தால் முதல் நாள் இரவில் விதைகளை ஈர மண்ணால் மூடி வைத்து, மறு நாள் விதைக்க வேண்டும்.

இறைவையாக விதைக்கும் பொழுது ஒரு அடிக்கு ஒரு பார் வீதம் அமைக்கப்பட்டுள்ள பார்களில் ஒரு பக்கச்சரிவில் குழிக்குக்குழி 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடை வெளி விட்டு, குழிக்கு ஒரு விதை வீதம், ஒரு அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். விதைகளை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 4-ஆம் நாள் இரண்டாம் முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**களை எடுத்தல் :** விதைத்த 15 முதல் 20 நாட்களில் முதல் களையும், 30 முதல் 40 நாட்களில் இரண்டாவது களையும் எடுக்க வேண்டும். பார்களில் விதைத்திருந்தால் இரண்டாவது களை எடுக்கும் பொழுது பார்களைக் கொத்தி விட்டு மண் அணைக்க வேண்டும். சூரிய காந்தி சாகுபடி செய்துள்ள நிலத்தில் களை களை அழிக்க களைக்கொல்லிகளைக் உபயோகிக்க வேண்டாம்.

**நீர்ப்பாசனம் :**— இறைவைச் சாகுபடிக்கு விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்சவும். பிறகு 4-ம் நாள் இரண்டாம் முறைத் தண்ணீர் பாய்ச்சவும். அதன் பின் நிலத்தின் தன்மைக் கேற்ப 12 முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சவும். பூப்பூக்கும் பொழுது நன்றாகத் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம். அதன்பின் அதிகத் தண்ணீர் தேவையில்லை.

**பயிர்ப் பாதுகாப்பு :** இது வரை சூரிய காந்தியைப் பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்கியதாகத் தெரியவில்லை. பல உழவர் பெருமக்கள் பூச்சிகளும், நோய்களும் சூரிய காந்தியை அறவே தாக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். ஆயினும், கம்பளிப் பூச்சி, புகையிலை வெட்டுப் புழு, காவடிப் புழு, அசுவணி, பச்சைதத்துப் பூச்சி, பச்சை வண்டு முதலிய பூச்சிகளும், 'தண்டு அழுகல்' நோய், 'சொறி' நோய் ஆகிய நோய்களும் சூரிய காந்தியைத் தாக்கக் கூடும்.

மானாவாரியாகப் பயிரிடும் சூரியகாந்திக்கு விதைத்த 15-வது 30-வது நாட்களில் ஏக்கருக்கு 8 கிலோ வீதம் 'செவின்' அல்லது தயோடின் மருந்துத் தூளைத் தூவான் மூலம் தூவினால் பூச்சிகளைக் கட்டுப் படுத்தும். பூப் பூக்கும் சமயத்தில் பூச்சிகள் காணப்பட்டால் மேற்கூறிய அளவில் மருந்து தூவுதல் சிறந்தது.

இறைவையாகப் பயிரிடப்படும் சூரிய காந்தியில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த விதைத்த 15-வது 30-வது நாட்களில் ஏக்கருக்குக் கீழ்க்கண்ட மருந்தில் ஏதேனும் ஒன்றைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

1. தையோடான் 35 சதம் இ.சி. மருந்தில் 0.70 சதம்—200 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும், அல்லது

2. செவின் 50 சதம் மருந்தில் 0.1 சதம்—200 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும், அல்லது

3. பாரத்தியான் 50 இ.சி. மருந்தில் 0.025 சதம்— 50 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பூப் பூக்கும் பொழுது பூச்சிகள் காணப்படின் 'தயோடின்' 0.70 சத மருந்தைத் தெளிக்கலாம் அல்லது 'டிப்டிரெக்ஸ்' 95 சதம் எஸ்.பி. மருந்தில் 0.1 சதம் (100 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கலாம்.

'சொறி நோய் தாக்கினால், ஏக்கருக்கு 8 முதல் 10 கிலோ கந்தகத் தூளைத் தூவ வேண்டும்.

'தண்டு அழுகல்' நோய் தோன்றினால் ஏக்கருக்கு ஒரு கிலோ நனையும் செரசான் மருந்தை 1,000 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளைத் சுற்றிலும் ஊற்றி மண்ணை நனைத்தல் நல்லது.

வேறு ஏதேனும் பூச்சிகளோ நோய்களோ தோன்றினால் வேளாண்மைத் துறை அலுவலர்களின் உதவியை நாடி, அவர்களின் பரிந்துரைக்கு ஏற்ப மருந்து தெளியுங்கள்.

(முக்கியக் குறிப்பு : மாலை வேளைகளிலேயே மருந்து தெளிக்க வேண்டும். ஏனெனில் காலை வேளைகளில் தேனீக்கள் சுறுசுறுப்பாக இயங்கி, மகரந்தச் சேர்க்கை ஏற்பட உதவிக் கொண்டிருக்கும். காலை வேளையில் மருந்து தெளித்தால், தேனீக்களின் இயக்கம் கட்டுப் படுத்தப்பட்டுவிடும். அதனால் மகரந்தச் சேர்க்கை பூக்களில் ஏற்படாது ; விதைகள் அதிகம் தோன்றாது).

அறுவடை : சூரியகாந்தி பூக்களின் புறவிதழ்கள் காய்ந்த பிறகு, பூக்கொண்டைகளை மட்டும் அறுத்து வெய்யிலில் காய வைத்து, மணிகளைத் தட்டி எடுக்கலாம்.

மகசூல் : மேற்கூறிய முறைகளில் சாகுபடி செய்தால் மானாவாரியில் ஏக்கருக்கு 400 கிலோவுக்கும், இறைவையில் ஏக்கருக்கு 1,000 கிலோவுக்கும் குறையாமல் மகசூல் எடுக்கலாம். உயர்ந்த அளவாக மானாவாரியில் ஏக்கருக்கு 1·4 டன் வரையிலும், இறைவையில் ஏக்கருக்கு 3.5 டன் வரையிலும் மகசூல் எடுக்கலாம்.

சூரியகாந்தி விதைகளை நன்கு காய வைத்தால் அவைகளின் மேலுள்ள கறுப்புத்தோல் (உமி) விரிந்து உள்ளிருக்கும் வெண்ணிறப் பருப்பு தெரியும். வெண்ணிறப் பருப்புகளைச் செக்கிலிட்டு அல்லது 'ரோட்டரி' அல்லது 'எக்ஸ்பெல்லர்' எண்ணெய் இயந்திரங்களில் இட்டு எண்ணெய் எடுக்கலாம். சூரிய காந்தி விதைகளின் மேலுள்ள தோலை அரிசி அறைக்கும் இயந்திரம் மூலமாகவும் அகற்றலாம்.

சூரியகாந்தி விதைகளின் மேல் தோலை அகற்றாமலும் அப்படியே எண்ணெய் எடுக்கலாம். 20 கிலோ சூரிய காந்தி விதைக்கு 1 கிலோ வெல்லம் வீதம் கலந்து நாட்டுச் செக்கிலிட்டு வெகுச் சுலபமாக எண்ணெய் எடுக்கலாம்.

நிகர இலாபம் :— மானாவாரியாக சாகுபடி செய்ய ஏக்கருக்கு 190 ரூபாயும், இறைவையாகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 410 ரூபாயும் செலவு ஆகும். மானாவாரியில் குறைந்த அளவு 300 கிலோவும், இறைவையில் குறைந்த அளவு 600 கிலோவுக்கு மகசூல் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும், அவ்விதைகளைக் கிலோ 1 ரூபாய் 50 காசு வீதம் விற்பதால் மானாவாரியில் ஏக்கருக்கு 450 ரூபாயும், இறைவையில் ஏக்கருக்கு 900 ரூபாயும் மொத்த வருவாய் கிடைக்கிறது. ஆகவே, சாகுபடிச் செலவு போக மானாவாரியில் ஏக்கருக்கு 260 ரூபாயும், இறைவையில் ஏக்கருக்கு 490 ரூபாயும் நிகர இலாபம் கிடைக்கும். எண்ணெய் எடுத்து விற்றால் இன்னும் அதிக இலாபம் பெறலாம்.

எனவே, சூரிய காந்தி பயிரிட்டுப் மிகு பயன் பெறுமாறு தமிழ்நாட்டு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

—ஆர். எம்.

### சூரியகாந்தியின் வயதும் வளர்ச்சியும்.

| வயது நாட்கள். | வளர்ச்சிப் பருவம். | புற அமைப்பின் விவரம். |
|---|---|---|
| 1 முதல் 5 | முளைக்கும் பருவம் | 5 நாட்களுக்குள் முளைத்துவிடும். |
| 5 முதல் 20 | முன் வளர்ச்சிப் பருவம். | மெதுவாக வளரும். 20 நாளில் 10 அங்குல உயரம் வளர்ந்திருக்கும். 8 முதல் 10 இலைகள் இருக்கும். |
| 20 முதல் 35 | பின் வளர்ச்சிப் பருவம். | மிகவும் விரைவாக வளரும். இலைகள் இருதய வடிவில் அமையும். 3 அடி உயரம் வளர்ந்து விடும். 24 முதல் 30 இலைகள் இருக்கும். |
| 35 முதல் 40 | மொட்டுப் பருவம் | பூக்கொண்டைகள் தோன்றும். |
| 40 முதல் 50 | பூக்கும் பருவம் | பூக்கள் மலரும். |
| 50 முதல் 60 | மகரந்தச் சேர்க்கைப் பருவம். | மகரந்தச் சேர்க்கை நடைபெற்று முடிந்துவிடும். |
| 60 முதல் 70 | விதை உருவாகும் பருவம். | விதைகள் உருவாகி, பூக்கொண்டை நிறையும். |
| 70 முதல் 90 | முதிர்ச்சிப் பருவம் | எல்லாவிதைகளும் முதிர்ச்சி அடைந்து விடும். இறவையில் 75 முதல் 85 நாட்களிலும், மானாவாரியில் 80 முதல் 90 நாட்களிலும் அறுவடைக்கு வந்துவிடும். |

மேற்கூறிய பருவங்களில் மொட்டுப் பருவம் முதல் பூக்கும் பருவம் வரை சூரியகாந்திக்கு நல்ல ஈரம் தேவைப்படுகிறது. எனவே மொட்டுப் பருவத்தில் நன்கு தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம்.

# பெருந் தொழில்கள் மூலம்
# தமிழகத்தின் வளர்ச்சி வேகம்

தமிழ் நிலத்தின் தொழிற் செழுமை மேலும் வளர, நாளும் பெருக :—

*தமிழகத்தில் புதிய தொழிலாகச் சணல் ஆலைகள் அமைத்தல், தஞ்சைத் தரணியில் சணல் பயிரிடுதல் ;

*காவிரி தீரத்திலும், கடலோரப் பகுதிகளிலும் எண்ணெய் வளங்களை ஆராய முனைப்பான முயற்சிகள் ;

*தொழிற்சாலைகள் தங்களுக்கெனச் சொந்தமான மின்சார உற்பத்திச் சாலைகளை அமைத்துக்கொள்ள அனுமதித்தல் ; அனல் மின்சார—அணு மின்சார வசதிகளைப் பெருக்குதல் ;

*கரும்புச் சக்கையிலிருந்து பெரும் அளவில் காகித உற்பத்தி ;

*தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்குப் பகுதிகளில் கூட்டுத் தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் ; இந்த வகையில் பூர்வாங்க வேலைகளில் மாநில அரசினரின் தனி உதவிக்கு இடமளிக்கச் செய்தல் ;

*தொழில் ஆராய்ச்சி வசதிகளை ஊக்குவித்தல்.

• •

என்ற வகையில் பரிந்துரைகளையும், கருத்துக்களையும் தந்திருக்கிறது, மாநிலத் திட்டக் குழு. தொழில்கள் மூலம், மாநிலத்தில் பொருளாதார மேம்பாடு காண்பதற்கு மாநிலத் திட்டக் குழுவின் செயல் அணி 12 ஆண்டுத் தொலை நோக்குத் திட்ட (1972—1984) அறிக்கையை வெளியிட்டுள்ளது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சி நிலைமை, வருங்காலத்தில் தொழிலைப் பெருக்க வாய்ப்பு வசதிகள் ஆகியன அறிக்கையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### ஒரே ஒரு தொழில்

அண்மைக் காலம் வரை பஞ்சு, நூற்பு ஆலைத் தொழில்தான் தமிழகத்தின் முக்கியமான பெருந்தொழிலாக இருந்து வந்தது. கோவையின் சுற்றுப்புறப் பகுதியில் பெருமளவிலும், சென்னை, மதுரை நகரப் பகுதிகளில் ஓரளவுக்கும் இத்தொழில் இயங்கி வந்தது. கடந்த பதினைந்து ஆண்டுகளில் பலதரப்பட்ட பெருந் தொழில்கள் வளர்ந்து, விரிவடைந்து, மேம்பட்டதன் காரணமாகத் தமிழகம் இன்று இந்தியாவில் பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிடும் போது மூன்றாவது இடத்தை வகிக்கின்றது.

உலோகம், உலோகவியல்—தொழில்கள், இரசாயனங்கள் வேளாண்மைக் கருவிகள், பண்ணை இயந்திரங்கள், இயந்திரப் பொறியியல், மின் பொறியியல் தொழில்கள், மோட்டார், ரயில் பெட்டித் தயாரிப்பு முதலிய தொழில்களில் தமிழகம் கண்டுள்ள வளர்ச்சி அற்புதம் என்று சொல்லத் தக்கதாகும்.

எடுத்துக் காட்டாகச் சொல்வதென்றால் 1970 டிசம்பர் வரை பெருந்தொழில்கள் தொடங்குவதற்காகத் தரப்பட்டுள்ள உரிமங்களைக் குறிப்பிடலாம். நூல்-நெசவாலைகள் தவிர்த்து மற்ற தொழில்கள் தொடங்க, முதல் திட்டக் காலத்திலிருந்து 1970 டிசம்பர் வரை மொத்தம் 787 உரிமங்களே வழங்கப்பட்டன. இவற்றின் வகை பின்வருமாறு : இயந்திரப் பொறியியல் தொழில்கள் 232 ; உலோகவியல் தொழில்கள் 121 ; இரசாயனங்கள், உரத் தொழில்கள் 106 ; வேளாண்மைச் சார்பு இயந்திரத் தொழில்கள் 100 ; மற்றும் காகிதம், சோப்பு, சிமிட்டி, கட்டட மரம் போன்றவற்றில் 228



அரக்கோணம் தொடர் உருக்கு
வார்ப்படத் தொழிற்சாலை

தொழில்கள். மாநிலத்தின் தொழில் வளப்பெருக்கத்துக்குத் தனியார் துறை, பொதுத் துறை, இரண்டுமே நல்ல முறையில் உதவியிருக்கின்றன.

#### சர்க்கரை நாலரை மடங்கு

*1956*-க்கும் *1961*-க்கும் இடைப்பட்ட காலத்தில் சிறப்பான வளர்ச்சியைக் காட்டியுள்ள சில முக்கியத் தொழில்கள் பின்வருமாறு :—

**சிமிட்டி:**—இதன் உற்பத்தி 6.93 இலட்சம் டன்னிலிருந்து 27.99 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது.

**சர்க்கரை:**—உற்பத்தி 64,000 டன்னிலிருந்து 2.99 இலட்சம் டன்னுக அதிகரித்துள்ளது.

**மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர்:**—உற்பத்தி 1,130 என்ற அளவிலிருந்து 5,000 என்ற அளவைக் கடந்துள்ளது.

**சைக்கிள்:**—1.30 இலட்சத்திலிருந்து 4.5 இலட்சமாக உயர்ந்தது.

**மோட்டார் டயர்கள்:**—1.04 இலட்சம் டயர்களிலிருந்து 9 இலட்சம் டயர்கள் என்ற அளவுக்கு உயர்ந்தது.

அண்மைக் காலத் தொழில் அரங்கில் புதிய உற்பத்திப் பொருள் வகையில் குறிப்பிடத் தக்கவை: டிராக்டர்கள், காகிதம், உருக்கு இரும்பு வார்ப்புகள், குழாய்கள், பிளாஸ்டிக் பொருட்கள், மோட்டார் சைக்கிள் டயர்கள், டியூப்கள், மின்சாரக் கருவிகள், மின் பொருட்கள் முதலியன. அண்மைக் காலத்தின் புதிய தொழில்களில் மேட்டூர் இரசாயன, அலுமினியத் தொழில்கள் ; சென்னையிலும் சுற்றுப் புறப் பகுதிகளிலும், மோட்டார், மோட்டார் உறுப்புத் தொழில்கள் ; வார்ப்படங்கள், கோவை பகுதியின் மின்சார மோட்டார்த் தொழில் முதலியவை குறிப்பிடத் தக்கவையாகும்.

#### அரசின் முதலீடுகள்

மாநில அரசுத் துறையில் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நான்காம் திட்டக் காலத்தில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மூன்ரும் திட்டக் காலத்தில் இவ்வகையில் மொத்தச் செலவு ரூ. 1.60 கோடிதான். ஆனல், நான்காம் திட்டக் காலத்தில் இவ்வகையில் செலவு சுமார் ரூ. 17.45 கோடியாகும். பெருந்தொழில்களை அரசாங்கமே மேற்கொண்டு நடத்த முற்பட்டதே இதற்குக் காரணம் என்பது குறிப்பிடத் தக்கது. அரக்கோணத்தில் தொடர் வார்ப்பு உருக்குத் தொழிற்சாலையின் முதல் கட்ட வேலை முடிவுற்றுள்ளது. இதற்குச் செலவு ரூ. 8 கோடியாகும். இதன் உற்பத்தி அளவினை இரட்டிப்பாக்க—ஒரு இலட்சம்டன் அளவுக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆலங்குளம் சிமிட்டித் தொழிற்சாலை இப்போது ஒரு இலட்சம் டன் உற்பத்தித் திறனுடன் செயல்பட்டு வருகின்றது. இதற்கு முதலீட்டுச் செலவு இதுவரை 4 கோடி ரூபாய். இந்தத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 2 இலட்சம் டன்னுகவும் பின்னர் 4 இலட்சம் டன்னுகவும் உயர்த்தப்படும்.

அடுத்த இதழில்

* புதிய தலைமுறை உருவாகிறது !
—நரிக்குறவர்கள் சிறப்புப் பேட்டி
* பென்சில் வரலாறு
* குருதிக் கொதிப்பு
* அலைகள் (கவிதை)

நலிவுற்ற ஆலைகளை மேற்கொண்டு அவற்றைச் சீரமைத்து வரும் நிறுவனம் தனது பணியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. திட்ட ஒதுக்கீடான ரூ. 2 கோடி போதுமானதாக இல்லை என்று தெரிய வந்துள்ளது. நடைமுறையில் செலவு ரூ. 2.15 கோடி ஆகலாம். உப்பு சார்ந்த தொழில்கள், ஸ்பாஞ்ச் இரும்புத் தொழிற்சாலை, எந்திரக் கருவிகள் தொழிற்சாலை முதலியன அமைப்பதில் பெரும் முன்னேற்றம் ஏற்படவில்லை என்ருலும் கணிசமான அளவில் ஆரம்ப வேலைகள் நடந்துள்ளன.

தூத்துக்குடியில் பெட்ரோ-கெமிக்கல் தொழில் மையம் ஓர் அரும்பெரும் முயற்சியாகும். இதில் பிரம்மாண்டமான இரசாயன உரத் தொழிற்சாலை தொடக்கமாகிறது. அரசினர்-தனியார் கூட்டு முயற்சியான இத்திட்டத்தில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ( TIDCO ) பெரும்பங்கு கொண்டுள்ளது. மொத்தம் ரூ. 73·5 கோடி செலவு ஆகும். இத்தொழில் மையம் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இயங்கத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### சேலம் உருக்காலை நிலை

சேலம் உருக்காலைத் திட்டத்துக்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மத்திய அரசு, மத்திய அரசின் தொழில் துறையின் கீழ் இதனை மேற்கொண்டிருப்பதால், ஒதுக்கப்பட்ட பணத்தில் மிகப் பெரும் பாகம் செலவிடப்படாமலேயே இருக்கிறது. குறிப்பாகச் சொல்லுமிடத்து, நான்காம் திட்டக் காலத்தில் அரசினர் — தனியார் கூட்டுத் தொழில் முயற்சிகள் நல்ல முறையில் தொடங்கியுள்ளன. மாநில அரசு, சொந்தமாகத் தொழில்களைத் தொடங்கியிருப்பதன் மூலம், தொழில் வளர்ச்சிப் பணியில் 'முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அரசினர் தொழில் ஊக்குவிப்பு நிறுவனம் (State Industries Production Corporation) ஆகியவை பல்வேறு தொழில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்து வைத்துள்ளன. வரும்ஆண்டுகளில் அவை செயல்படுத்தப்படும். மாநிலத்தில் பின்னடைந்த பகுதிகளில் புதுத் தொழில்கள் தொடங்க அரசினர் தொழில்

ஊக்குவிப்பு நிறுவனம் சிறப்பான முறையில் உதவி வருகின்றது.

### மத்திய அரசுத் துறைத் தொழில்கள்

தமிழகத்தில் மத்திய அரசுத் தொழில் நிறுவனங்களில் முதலீடு 1969—70-ல் ரூ. 377 கோடி ஆகும். இந்தத் தொழில்களில் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி அளவு சுமார் 90 கோடி ரூபாய். சுமார் 50,000 பேர்கள் இவற்றில் வேலை செய்கிறார்கள். இந்தத் தொழில் நிறுவனங்கள் வருமாறு :—

1. நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்ட நிறுவனம் ;

2. சென்னை, பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலை ;

3. சென்னை, நந்தம்பாக்கம் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை ;

4. சென்னை, கிண்டி இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை ;

5. உதகையில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி நிறுவனம் ;

6. திருச்சி, திருவெறும்பூர் உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை ;

7. மணலியில் உள்ள இரசாயன உரத் தொழிற்சாலை ;

8. மணலியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை (Madras Refiners)

9. சென்னை, ஆவடியில் உள்ள டாங்கித் தொழிற்சாலை (Heavy Vehicle Factory)

10. திருச்சியில் உள்ள துப்பாக்கிக் கருவிகள் தொழிற்சாலை;

11. சென்னை, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்.

• • •

மத்திய அரசுத் துறைத் தொழில்கள், வட்டாரப் பொருளாதார வளத்தை வலுப்படுத்துவதில் உதவியாக இருக்கின்றன. சில நிறுவனங்கள் தங்கள் பணிகளை நல்ல முறையில் விரிவுபடுத்தியுள்ளன. திருச்சி உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை தனது உற்பத்தியைச் சிறப்பான முறையில் பெருக்கியுள்ளது. புதிய தேவைகளுக்கேற்பப் பெரிய அளவிலான கொதிகலன்களைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை

### இடையூறுகள் நீங்குகின்றன!

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டம், தொழில் நுட்பச் சிக்கல் மற்றும் பல இடையூறுகள் காரணமாக, அனல் மின்சார அமைப்பையும், இரசாயன உர உற்பத்தி வசதிகளையும், முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றாலும், மின்சார உற்பத்தியில் இத்திட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. அதிக அளவில் மின்விசை, இரசாயன உரங்கள், பழுப்பு நிலக்கரிக் கட்டிகள் உற்பத்திக்காகப் பழுப்பு நிலக்கரி எடுக்கும் அளவை அதிகரிப்பது மிகஅவசியமாக இருக்கிறது. அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை, போட்டோ பிலிம் தொழிற்சாலை ஆகிய இரண்டும் தத்தம் முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்தியாகவில்லை. இவ்வகையில் இருந்த தொழில் நுட்பச் சங்கடங்கள் படிப்படியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன.

### ரயில்பெட்டி ஏற்றுமதி

ரயில்பெட்டித் தொழிற்சாலை சிறந்த பணியாற்றுகின்றது. பல்வேறு வகை ரயில் பெட்டிகளின் தேவை அதிகரித்து வருவதையொட்டியும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியின் காரணமாகவும், உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகின்றது. மணலி பெட்ரோ கெமிகல் தொழில் மையப் பணிகளில் அண்மைக் காலத்தில் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திறம்படச் செயல்பட்டு வருகின்றது. இடையூறுகளைக் களையவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பல விரிவினை வேலைகளை மேற்கொண்டுள்ளது. மணலி தொழில் மையத்தில் இரசாயன உர உற்பத்தி 1971 நவம்பரில் தொடங்கியது. இதன் உற்பத்தி அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

ஆவடி டாங்கித் தொழிற்சாலை இலக்கு விகிதப்படியாக டாங்கிகளைத் தயாரித்து வருகின்றது. வேறு வகைக் கருவிகளை இதில் தயாரிக்கவும் திட்டம் உள்ளது. திருச்சி துப்பாக்கிக் கருவிகள் தொழிற்சாலை நாட்டுப் பாதுகாப்புக்குத் தேவையான கருவிகளைத் தயாரித்து வழங்கி வருகின்றது.

பல்வேறு முனைகளிலும் வளர்ச்சிப் பணிகளின் விளைவாக, அனைத்திந்தியப் பொருள் உற்பத்தி அளவில் தமிழகத்தின் பங்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இருக்கின்றது. தமிழகத்தில் சில தொழில்கள், நல்ல வலிமையும், வளர்ச்சியும் பெற்று வருங்காலத்தில் வேகமான வளர்ச்சிக்கு வழி வகுத்திருக்கின்றன.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் இந்த வேகத்தை நிலை நிறுத்திக் கொள்ளுமானால், இதனுடைய உற்பத்திச் சக்திகள் வளர்ந்து, வட்டாரங்களுக்கிடையே மட்டுமின்றித் தேசிய அளவிலும் தமிழகத்தின் சாதனைகள் எடுத்துக்காட்டாக விளங்கும்.

### வருங்காலத் திட்டங்கள்

வருங்காலத்தில் தொழில் வளத்தை மேலும் பெருக்குவதற்குப் பொறுத்தவரை, விவசாயச் சார்பான தொழில்களின் விரிவினையிலும் பொருள் பதனத் தொழில்களிலும் முக்கியக் கவனம் செலுத்துவதன் அவசியத்தைத் தமிழ்நாட்டின் தொலை நோக்குத் திட்ட அறிக்கை

வலியுறுத்துகிறது. கன இரசாயனங்கள், பெட்ரோ கெமிகல், பொறியியல், மின் பொறியியல், உலோகவியல் தொழில்கள், நமது முன்னேற்றத்துக்குத் தவிர்க்க இயலாத தேவைகளாகும். சர்க்கரை, நூற்பு நெசவு ஆலைகள், காகிதம்,கனிப்பொருட்களைச் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றிலும் வளர்ச்சி வேகம் அதிகரிக்க வேண்டும்.

மாநிலத்தில் பாசன வளங்களை மிகப் பெருமளவுக்குப் பயன்படுத்தியாகிவிட்டது. அவ்வகையில் விரிவினைப் பணிகளுக்கு அதிகமான இடம் இல்லை. பாசன வசதியைப் பெருக்க மாநிலங்களுக்கிடையேயான முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டு, பலன் காண்பதற்குச் சிறிது காலமாகலாம். நமது விவசாய உற்பத்தி முறையையே கூட மாற்றி அமைத்துக்கொள்ளும்படி நேரலாம். வாணிபப் பயிர்கள் உற்பத்தியை அதிகரிக்கும் வழியிலும் விவசாயச் சார்புத் தொழில்களை மேலும் பெருக்கும் முறையிலும் மாற்றங்கள் தேவைப்படும். உப்பு, மாக்னசைட், இரும்புக் கனிப் பொருட்கள் ஆகியவைகளை வெற்றிகரமாகப் பயன்படுத்துவது அவசியமாகும். காவிரி தீரத்திலும் கரையோரப் பகுதிகளிலும் எண்ணெய் வளங்களைக் கண்டறியவும், பாக்சைட் மற்றும் இரும்பு அல்லாத உலோகப் படிவங்களைக் கண்டு பிடிக்கவும், முனைப்பான முயற்சிகள் அவசியம் என்றும், தொலை நோக்குத் திட்ட அறிக்கை எடுத்துரைத்திருக்கிறது. கரும்புச் சக்கை போன்ற கச்சாப் பொருட்களை இன்னும் பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளும் அவசியமாகின்றன. கரும்புச் சக்கை மூலம் காகித உற்பத்திக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது.

### ஊக்கமும் உதவியும்

தொழில் முனைவர்களின் ஆர்வம், தொழில் நுட்பத்திறன், நன்கு ஆய்ந்து முடிவு செய்யப்பட்ட கூட்டுத் தொழில் திட்டங்கள் இவற்றின் மூலம் மாநில அளவிலும் வட்டார அளவிலும் தென்கிழக்குஆசியா,ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளின் பகுதிகளிலும் சிறந்த முன்னேற்றம் எய்த இயலும் என்றும், செயலணியின் அறிக்கை குறிப்பிடுகிறது.

பன்னிரண்டு ஆண்டுக் காலத்துக்குத் தொழில் வளர்ச்சிக்கான திட்டமிடும் போது, மாநிலத்தின் பொருளாதாரத் தேவைகள் அதிகரிப்பதை மட்டும் கணக்கில் கொள்ளாமல், கிடைக்கக் கூடிய வாய்ப்புகளையும் மனத்தில் இருத்தவேண்டும். சர்க்கரை, சிமிட்டி, வனஸ்பதி, இரசாயன உரங்கள்போன்றவற்றின் தேவை வருங்காலத்தில் மிகவும் அதிகரிக்கும். இந்தத் தேவை எந்த அளவுக்கு வளரும் என்பதை இப்போதுள்ள நிலையில் மதிப்பிட்டுச் சொல்வது கூட எளிதல்ல. இந்தத் தொழில் வசதிகளைப் படைத்துள்ள மாநிலங்கள் உபரியான பொருட்களை மற்ற மாநிலங்களுக்குத் தந்துதவலாம். வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம். இந்தக் கண்ணோட்டத்தில் தான் சர்க்கரை ஆலைத் தொழிலை மிகப் பெருமளவில் மேம்படுத்துவது அவசிய மாகின்றது. நெசவாலைத் தொழில்கள் முன்னணி இடத்தைத் தொடர்ந்து வகித்து வருவதும் இக் கண்ணோட்டத்தில் இன்றியமையாததாகும். மோட்டார்த் தொழிலிலும் இதே வகையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

திட்டக் குழுவின் செயல் அணி தனது தனிப் பரிந்துரைகளில் மேலும் குறிப்பிட்டிருப்பது பின்வருமாறு.—

நெசவாலைகள் சீரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்த தனி வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

மின்சார வெட்டு முதலியவைகளால் பொருள் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தொழிற்சாலைகள், சொந்தமாக மின்சார உற்பத்தி அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். நாட்டில் அனல் மின்சாரம்—அணுமின்சார வசதிகளைப் பெருக்கவேண்டும்.

தமிழகத்தில் சணல் ஆலைகளை ஏற்படுத்துவதற்கு உள்ள வாய்ப்புகளை முழுமையாகப்பயன்படுத்திக் கொள்வது அவசியம். தஞ்சை மாவட்டத்திலும் மற்றப் பகுதிகளிலும் சணல் பயிரிட வகை செய்வது பற்றி ஆராய்தல் வேண்டும்.

உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிக்கும் வகையிலும், தொழிற் பணிகளில் அனாவசியத் தலையீடுகளைத் தடுக்கும் வண்ணமும் தொழிலாளர் நலக் கொள்கை அமைத்தல் அவசியமாகும். முடியுமான இடங்களில் பல ஷிப்டுகள் ஏற்படுத்திப் பணியாற்றலாம். இதன் மூலம் உற்பத்தியும் பெருகும் ; வேலை வாய்ப்பும் அதிகரிக்கும்.

கடந்த 15 • ஆண்டுகளில் சிறப்பான முன்னேற்றம் காரணமாகவும், தொழில் பெருக்கத்துக்கான அடித்தளம் வலுவாக அமைந்திருப்பதன் விளைவாகவும், தொலை நோக்குத் திட்டக் காலத்தில் தொழில் உற்பத்தி 10-லிருந்து 12 சத விகிதம் வரை அதிகமாவது எளிது. 12 ஆண்டுக் காலத்தில் மக்களின் சராசரி நபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதும் எளிதாக இருக்கும் என்று திட்டக் குழுவின் செயல் அணி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

### தொழில் வளர . . .

நமது நாட்டில் தொழில்கள் வளர இயற்கையோடு ஒட்டி வாழுவது குறைக்கப்பட்டுள்ளது. காலையில் எழுந்தவுடன் பச்சை பசேலென்ற காட்சியும், பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழுதலே நலன் பயக்கும் என்று உடற்கூறு நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனல் நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கான கட்டடங்களாக மாறி வருகின்றதைப் பார்க்கிறோம். தொழில்கள் அதிகமாகி வரும்போது புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனல் இந்தக் காரணங்களால் நாம் தொழில் வளர்ச்சியை விட்டுவிட முடியாது. தொழில் வளர்ந்தால்தான் பொதுச் செல்வம் ஏற்படும். அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளம் உண்டாகும்.

—பேரறிஞர் அண்ணா



# வேளாண்மைத் துறையில் நமது சாதனைகள்!

இன்றைக்கு உணவு உற்பத்தித் துறையில் நாம் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம் என்பதை நான் கொடுத்த குறிப்புக்களில் இருந்து பல அங்கத்தினர்களும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிறப்பாக வேளாண்மைத் துறையைப் பற்றி, நான் அதிகமாகச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த மன்றத்தில் இருக்கிற பெரும்பாலோர் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள். பரம்பரையாக விவசாயம் செய்து கொண்டிருப்பவர்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிற பெருமக்கள் மிகுந்த கேவலமாக நடத்தப்பட்ட ஒரு காலம் உண்டு என்பதை மணலி அவர்கள் அறிவார்கள். விவசாயி என்றால் தீண்டப்படாதவராக— தொடக்கூடாதவராக இருந்த காலம் மாறிவிட்டது. உழுது உலகுக்குச் சோறு அளிக்கின்றவனுக்கு இருக்க இடம் இல்லை என்று சொல்லக் கூடிய நிலைமையை இந்த அரசு வந்து மாற்றி விட்டது. விவசாயத் துறைக்கு இந்த அரசு வந்த பிறகு முக்கியத்துவம் பல வகையிலும் அளித்திருப்பது, போல உழவர் பெருங்குடி மக்களது அந்தஸ்தும் கௌரவமும் பலவகையிலும் உயர்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

இன்றையத் தினம் உணவுத் தட்டுப்பாடு இல்லையென்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறோம். 38 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது அன்றையத் தினம். இன்றையத் தினம் 55 இலட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம், இது மிகச் சாதாரண காரியம் அல்ல. எப்படி உற்பத்தி பெருகிற்று என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது. அதற்கு உழவர் பெருமக்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், அதற்கு உறுதுணையாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் தமிழக அரசு அவர்களுக்குச்செய்திருக்கிற உதவிகளையும் ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் விவசாயிகள் எவ்வளவு துன்பப்பட்டார்கள் என்பது இங்கிருக்கிற அனைவருக்கும் தெரியும். அவர்கள் கடனுக்காக எவ்வளவு துயரப்பட்டார்கள் என்பதும் நன்றாகத் தெரியும். ஆனால், கூட்டுறவுத் துறை இன்றையத்தினம் நீண்டகாலக் கடன், குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன் என்ற அளவில் ரூ. 100 கோடியை விவசாயிகளுக்குக் கடனாக வழங்கி வருகிறது. அது மாத்திரமல்ல. அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அவ்வப் போது செய்து வருகிறது, அரசு என்பதை விவசாயிகள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் துறையைப் பலரும் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் துறை ஆற்றி வருகிற பணிகளை மதிப்பிற்குரிய மணலி போன்றவர்களும், பொன்னப்ப நாடார் வர்களும், போன்றவர்களும் பாராட்டி இருக்கிறார்கள். அதைப்போல் மதியழகன் போன்றவர்கள்கூடப் பாராட்டி இருக்கிறார்கள். உண்மையில் இந்தத் துறையில் இன்றையத்தினம் ஓர் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமே, உண்மையில் நான் புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான்! அவர்கள் வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் மாத்திரமல்ல, அவர் அமைச்சராக வருவோம் என்று நினைத்துப் பார்க்காத நேரத்திலே, உங்களிலே பலருக்கு நன்றாகத் தெரியும் நங்கவரத்திலே ஒரு விவசாயப் போராட்டத்திற்குத் தலைமையேற்று, அவர்களுடைய வாழ்விலே ஒளி ஏற்றியவர். அப்படி விவசாயம் தெரிந்த ஒருவர், முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் செய்ய வேண்டிய நேரத்தில், செய்யவேண்டியதைச் செய்து வந்திருக்கிற காரணத்தால், உரிய காலத்தில் விவசாயிகளுக்குப் பலன் கிடைத்து வருகிறது.



மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர்.
அன்பில் தர்மலிங்கம்

பூச்சி மருந்துகளை ஆராய்ச்சி செய்ய 7 நிலையங்கள்: மருந்துகள் தரமானவைதானா என்று கண்டுபிடிக்க அந்நிலையங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

மண் வள ஆய்வுக் கூடம் இப்பொழுதே தமிழ்நாட்டில் 12 இடங்களில் இருக்கின்றன. தென் மாவட்டங்களில் இல்லையென்று குறிப்பிட்டார்கள். தென் மாவட்டங்களில், மதுரையிலும், கோவில்பட்டியிலும், பரமக்குடியிலும் இருக்கின்றன. கன்னியா குமரியிலே இல்லையென்று அவர்கள் கவலைப்பட்டார்கள். கன்னியாகுமரியிலே 1973—74-ஆம் ஆண்டில் மண்வள ஆராய்ச்சிப் பரிசோதனைக்கூடம் திறப்பதற்கு அரசாங்கம் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறது. நிச்சயமாக அடுத்த ஆண்டு திறக்கப்படும்.

அதுமாத்திரமல்ல, தென்னையிலே விழுந்திருக்கின்ற பூச்சிகளைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிய ஆராய்ச்சி முத்துப்

பேட்டையிலே துவக்கப்பட்டிருக்கிறது. கேரளத்திலிருந்து இங்கு வருவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் இந்த விதைகளைப் பற்றிச் சொன்னார்கள். தரமான விதைகள் கொடுக்க வேண்டுமென்பதற்காக இன்றையத்தினம், அரசாங்கத்தின் மூலமாக ஏறத்தாழ 55 பண்ணைகளிலே உற்பத்தி செய்யப்பட்டு, அந்த விதைகள் கொடுக்கப்பட்டாலும் உற்பத்தி செய்கிற விதைகளை விவசாயிகளிடத்திலே வேறு கொடுத்து அவர்கள் உற்பத்தியைப் பெருக்கிய பிறகுதான் மூன்றாவதாக விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற திட்டம் இருக்கின்றது. அதன் பயனாகத் தரமான விதைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமல்ல; சரியான விதைகள்தாம் என்பதற்காக அத்தாட்சி பெற வேண்டும். இதற்காக டெஸ்டிங் லேபரட்டரீஸ் ஏற்படுத்தி, சர்ட்டிபைட் சீட்ஸ் என்று சர்டிபிகேட் கொடுத்ததற்குப் பிறகுதான் விதை கொடுக்கப்படவேண்டுமென்று சட்டம் இயற்றி இன்றையத்தினம் செயல்பட்டு வருகிறோம்.

முன்பு பூச்சி மருந்தை ஆகாய விமானத்திலிருந்து தெளித்து வந்தோம். அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால் அதற்குப் பதிலாக, தமிழக அரசின் 5,700 விசைத் தெளிப்பான்கள் மூலமாகத் தெளிக்கப்பட்டு வருகிறது. அது போதாது என்று சொல்லி, ஏறத்தாழ, 2,400 தெளிப்பான்கள் வாங்குவதற்கு அனுமதி வ்ழங்கப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. இவற்றை உடனடியாக எல்லாப் பகுதிகளுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். இது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க உதவும் என்று யோசனை சொன்னார்கள். உழவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவற்றைத் தெளிப்பதற்கு அவர்களுக்கு உதவிசெய்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்று சொன்னார்கள். இந்த நல்ல யோசனையை நான் வரவேற்று, அவர்கள் சொல்வதற்கு முன்னாலேயே ஆங்காங்கே இதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று அனுமதியும் வழங்கியிருக்கிறோம். ஒவ்வொரு பிளாக்கிலேயும்,




ஒவ்வொரு வளர்ச்சி அலுவலகத்திலேயும் உழவர்களை அழைத்து, வேலையில்லாதவர்களை அழைத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் அன்றையத்தினம் ஒன்று குறிப்பிட்டார்கள். பூச்சி மருந்து தெளித்து யாராவது உயிரிழந்தால் அவர்களுக்கும் ரூ. 1,000 வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். தமிழ்நாட்டிலே, உங்களுக்குத் தெரியும், பூச்சி மருந்தைச்சாப்பிட்டாலும், செத்துப்போனாலும் போகலாம். அதனாலும் தீங்கு வந்துவிடும் என்ற அளவில் இலாகாவின் மூலமாக உடனே அந்தப் பரிசோதனை செய்து, அங்கங்கே, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலேயும் 10 பேர், 20 பேர் அல்லது 50 பேர் என்று தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1973-74-ல் அந்தத் திட்டம் செயல்படவும் இருக்கிறது.

பல ஊராட்சி ஒன்றியங்களில் ஸ்ப்ரேயர்ஸ் பழுதடைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முத்துச்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒவ்வொருவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு அந்தப் பயிற்சியின் மூலமாகப் பலருக்குப் பயிற்சி அளிக்கிற திட்டத்தை நிறைவேற்றி, 374 ஊராட்சி ஒன்றியத்திலே 374 பேர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அத்தோடு சாமான்கள் வாங்கி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு யூனியனிலும்




ரூ. 500-க்கு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கிவைக்க வேண்டுமென்று ஆங்காங்கு இருக்கின்ற ஆணையர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள் (கூடங்கள்) நம்முடைய மாநிலத்தில் 6 இடங்களில் வைக்க அனுமதி வழங்கப்பட்டு, அவை இன்று செயல்பட்டு வருகின்றன. மண்வளப் பரிசோதனைக்கும் 3 கூடங்கள், நடமாடும் ஊர்திகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அதைப்போல் பழுதடைந்த சைக்கிள், பெட்ரோமாக்ஸ் இவைகளை ரிப்பேர் செய்வதைப் போல, ஆங்காங்கே ரிப்பேர் செய்ய முடியுமா என்பதைப் பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறோம்.

குறுகிய காலப் பயிர்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக ஆய்வு செய்து கண்ணகி என்ற நெல் அவருடைய மாவட்டத்தில் பயிரிடப்பட்டு வருகிறது. 95 நாள் பயிர்தான். 85-90 நாட்களில் வருகிற முறையில் கோடையிலே சாகுபடி செய்ய ஏற்ற பயிர்களை இப்போது ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவற்றை விரைவில் வெளியிட இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சுப்பையா முதலியார் அவர்கள் ட்ரைலாண்ட் சீட்ஸ் பற்றிச் சொன்னார்கள். வறட்சிப் பகுதிகளுக்கு ஏற்ற விதைகளை எப்படி விவசாயம் செய்வது என்பது பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிலுள்ள குடுமியான்மலை ஆராய்ச்சிப் பண்ணையில், கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையத்தில் இவை பற்றி ஆராய்ச்சி நடந்து வருகிறது.

சேலத்தில் எப்படிப் பயிர் வளர்ப்பது என்ற முறையில் அதற்கேற்றவாறு ரிசர்வ் ஸ்டேஷன் அமைக்க 1972-73-ல் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. திரு. வெங்கடசாமி அவர்கள் நிச்சயமாகக் கவலைப்படவேண்டியதில்லை. அவர்களுடைய பகுதிக்கு வேண்டிய எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வந்திருக்கிறோம்.

உரத்திற்குக் கார்டு முறை கொண்டு வரவேண்டுமென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதற்கு முன்னாலேயே

வட ஆர்க்காடு மாவட்டத்திலே இந்த முறையைச் செயல்படுத்தி வருகிறோம். தீவிரச் சாகுபடி செய்கின்றவர்களுக்கு மட்டும் இன்ன உரம்தேவை என்று அதிகாரிகள் பார்த்துக் கார்டு மூலம் கொடுக்கிறார்கள். இப்போது உரத் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால் எல்லாருக்கும் கொடுக்க முடியுமா என்று சந்தேகம் இருக்கிறது. உரத் தட்டுப்பாடு இல்லையென்றால் நிச்சயமாகத் தமிழ்நாடு முழுவதும் கார்டு கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இரண்டாயிரம் டீசல் எஞ்சின்கள் வாங்கியிருக்கிறோம். விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கின்றோம். அண்மையில் மத்திய அமைச்சர் சிண்டே அவர்களைச் சந்தித்த போது கூட இதற்கு உடனடியாக வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லி அவர்களும் உடனே செய்வதாக ஏற்றுக் கொண்டார்கள்.

பருத்திக்கு நல்ல விலை இல்லை என்று சொன்னார்கள். பருத்திக்காகக் கார்ப்பரேஷன் திட்டத்தில் உடனடி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறோம். அவர்களும் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் மில்களை எடுத்துக் கொள்ள வசதி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தொழிலமைச்சரிடத்தில் கேட்டு அவர்களும் ஓரளவு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எல்லாம் செய்து கொண்டுதான் வருகிறோம்.

பருப்புப் பற்றுக்குறை பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு 7 இலட்சம், 8 இலட்சம் டன் பருப்பு தேவைப்படுகிறது. இன்று வெளியிலிருந்து வரவழைத்துக் கொண்டிருக்கிறோம் நாம். 23 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கரில் பருப்புப் பயிரிடத் திட்டமிட்டு முன் மாதிரியாகத் தஞ்சையிலும் தென்னார்க்காடு மாவட்டத்திலும், சிதம்பரத்திலும் 6 இலட்சம் ஏக்கராவில் இந்தக் கோடையில் இந்தப் பயிரைச் செய்து வருகிறோம். நிச்சயமாக இரண்டு இலட்சம் டன்னுக்கு மேல் கிடைக்குமென்று நம்புகிறோம்.

சூரியகாந்தி ஒரு தனித் திட்டம். சென்ற ஆண்டு 2 இலட்சம் ஏக்கராவில் பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு 3 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மலைத் தோட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய அரசு 10 கோடி ரூபாய்க்குத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.

மலைவாழ் மக்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மதுரை, திருச்சி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் பயிற்சித் திட்டம் ஏற்படுத்த இருக்கிறோம். சேர்வராயன் மலை, ஜவ்வாது மலை, பச்சை மலை, கொல்லி மலை, கோடை மலை ஆகிய ஐந்து இடங்களில் வேலை நடைபெற்று வருகிறது. வேறு பல திட்டங்களையும் செய்வதற்கு




ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, உருளைக் கிழங்கைப் பற்றித் திரு. வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். உருளைக் கிழங்குத் திட்டம் இந்தோ—ஜெர்மன் நீலகிரித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருவது உங்களுக்குத் தெரியும். ஆனால், கோல்டன் நெமட்டோடு என்ற வியாதி காரணமாக உருளைக் கிழங்கு, பயிர்க் கிழங்கு வருகின்ற சமயத்தில் பாதிக்கப்பட்டு விடுகிறது. இதனால் விவசாயிகள் பெருத்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால், ஜெர்மனியில் இருந்து டாஸ்நைட் என்ற மருந்தை இலவசமாக அனுப்பினார்கள். 75 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மருந்தை அவர்கள் இலவசமாக அனுப்பினார்கள். அந்த மருந்தைத் தெளிப்பதால் நல்ல பலன் ஏற்பட்டது. அவர்கள் அந்த மருந்தைத் தமிழ்நாட்டுக்குக் குறிப்பாக நீலகிரி மலையில் விவசாயிகள் படும் துன்பத்தைப் பார்த்து இலவசமாகக் கொடுத்தார்கள்.

ஆனால், மத்திய அரசு அதன் மீது போட்ட வரி ரூ. 53,25,439: எங்கள் கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு. பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்த மாதிரி என்று. 75 இலட்சம் பெறுமானமுள்ள அந்த மருந்துக்கு ரூ. 53,25,439 இந்த ஆண்டு வரையில் இந்த அரசு மத்திய அரசுக்குச் சுங்க வரியாகச் செலுத்தியிருக்கிறது. அண்மையில் மாண்புமிகு அமைச்சர் சிண்டே அவர்களிடம் இதைப் பற்றிச் சொன்னேன். இந்தப் பழமொழியையும் கூறினேன். அவர்கள் இலவசமாகக் கொடுக்கிறார்கள். அதற்கு நீங்கள் இவ்வளவு வரி போடுகிறீர்கள். அதை விவசாயிகளிடம் எப்படி வசூல் செய்வது என்று வாதாடிய நேரத்தில் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்தப் பகுதி மக்கள் பல ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். சென்ற ஆண்டு நான் அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டேன். பார்வையிட்டு வந்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னேன், இதன் செலவு 'பூராவையும்' மின்சாரத் துறை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று. அங்குள்ள விவசாயிகள் அவர்கள் படும் கஷ்டங்களை நோய் காரணமாகப் படும் கஷ்டங்களை, எல்லாவற்றையும் எடுத்துரைத்தார்கள். நான் இதுபற்றி முதல்வர் அவர்களிடம் சொன்னேன். இந்த ஆண்டு நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருப்பிப்பெறவேண்டிய தொகை முழுவதையும் ரூ. 27 சொச்சம் இலட்சம் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இதை நினைத்துப் பார்த்தால் எந்த அளவுக்கு விவசாயிகளிடம் நம் முதல்வர் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து, கரும்பு விவசாயிகள் தங்கள் ஆலைப் பகுதிகளுக்குச் சாலைகள் அமைப்பது பற்றி இது நாள் வரையில் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கரும்பு செஸ் நிதிஎன்று வசூலிக்கப்பட்டாலும், அந்த செஸ் நிதிவசூலிக்கப்பட்ட பகுதிகளில் அந்தத் தொகை செலவழிக்கப்படுகிறதா என்றால் பெரும்பாலும் அப்படி இல்லாதிருந்த நிலைதான் இருந்துவந்தது. ஆனால், இப்போது நம் முதல்




அமைச்சர் அவர்கள் எந்த எந்தப் பகுதியில் எவ்வளவு எவ்வளவு வசூலாகிறதோ அதை அந்தந்தப் பகுதிகளிலேயே, கரும்பு அபிவிருத்திக்காகவும், சாலை அபிவிருத்திக்காகவும் செலவு செய்யப்படும்—ஏற்கெனவே இருந்தபடி பொதுநிதியில் அது சேர்க்கப்பட வேண்டியதில்லை என்று அதற்காக ஒரு தனி சர்க்கிள், ஒரு சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் தலைமையில் அவர்கள் கீழ் நான்கு டிவிஷனல் என்ஜினியர்களையும் நியமித்துக் கரும்பு விளைவிக்கும் பகுதிகளில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இன்றையத் தினம் அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

பிறகு, இங்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பற்றிச் சொன்னார்கள். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு நிச்சயமாக நல்ல விலை கிடைக்க வேண்டியதுதான். அதற்காக இந்த அரசு ஆங்காங்கு மொத்தம் 120 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறது. மத்திய அரசின் உதவியோடு உலக வங்கிக்கு ஒரு திட்டம் தயார் செய்து தந்திருக்கிறோம். வருகிற ஆண்டுக்கு 150 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறக்கவும், அந்தக் கூடங்களுக்கு விவசாயிகள் தங்களுடைய பொருள்களைக் கொண்டு சென்று சேர்ப்பதற்கும், நல்ல சாலைகள் அமைக்கவும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு ரூ. 10 கோடிக்குத் திட்டமிட்டு ரூ. 4 கோடியில் நிறைவேற்றுவதற்கு உடனடியாக ரூ. ஒன்றரைக் கோடியில் கவேரி காம்ப்ளக்ஸ்-யை நிறைவேற்ற தஞ்சை, தென்ஆர்க்காடு, திருச்சி மாவட்டங்களில் ஆறு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டியிருக்கிறோம். விரைவில் பட்டுக்கோட்டையில் ஒன்று திறக்க இருக்கின்றோம். 45 சாலைகள் எடுக்கப்பட்டு இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் அதற்காகச் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

இப்போது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கொண்டு வந்து, கூடத்தில் வந்து வைத்துச் சரியான விலைக்குப் போகாமல் இருந்தால் பத்து நாட்கள் வரை வைத்திருக்கலாம். மூன்று நாட்களுக்கு இலவசம் என்றிருக்கிறது. கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களிடம் பேசி, இந்த விளைபொருட்களுக்கு நல்லவிலை கிடைக்க, சென்ட்ரல் பாங்கியிலிருந்து 75-ல் இருந்து 80 வரை கடன் கொடுத்து அங்கு வைக்கப்படுமானால் நல்ல விலை வரும்போது அதை விற்றுக் கொள்ளலாம் என்பதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நல்லவிலை வருகிற வரையில் பாதுகாப்பு அளிக்கக் கூடிய திட்டம் இன்றையத் தினம் இருந்து வருகிறது.

சில திட்டங்கள் இன்று வேளாண்மை மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன. பூச்சி மருந்து பற்றிச் சொன்னார்கள். வெளியிடங்களிலிருந்து பூச்சி மருந்துகளை வாங்குவதை விட, அதை நாமே தயாரிப்பது என்ற முறையில் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் சார்பாக முதன்முதலில் தேவையான என்ட்ரின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பி.எஸ்.ஜி. உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகத் தரமான பூச்சி மருந்துகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நமக்குத் தேவையான அளவிற்குத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே வெளியிடங்களிலிருந்தும் தரத்தைப் பரிசீலனை செய்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்தத் தொழில் கழகத்தின் மூலமாக ஆங்காங்கு கிராமங்களுக்குப் பயிற்சி பெற்றவர்களை அனுப்பி ஆங்காங்கு டிராக்டர் பழுது பார்த்தல் போன்ற காரியங்களைச் செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 250 வீதம் 4 மாதத்திற்கு அவர்களுக்கு உதவித்தொகை கொடுக்கப்பட்டு 89 பேர் தேர்வு பெற்று ஆங்காங்கு இப்போது பணியாற்றி வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏராளமான முறை வெள்ளம் வந்திருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பண உதவி செய்யும், வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு மானியமாகப் பணம் தரும். ஆனால், விவசாயிகளுக்கு நிலத்தில் படிந்த மண்ணை அகற்றுவதற்கு இதுவரையில் எந்த அரசும் மானியமோ அல்லது வேறு உதவியோ செய்ததில்லை. இதுவரையில் பணமும் கொடுத்தது கிடையாது. நான் என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். எங்களுடைய நிலத்தில் படிந்து விட்ட மண்ணை எடுப்பதற்காக என்னுடைய தகப்பனார் கடன் வாங்கி, அதைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் கடைசியில் அந்தக்கடனை அடைப்பதற்காக அந்த நிலத்தையே விற்று விட்டார்கள். அந்தக் கொடுமையை என்னுடைய கண்ணாலேயே கண்டேன். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேளாண்மை செய்பவர்களின் கஷ்டத்தை நன்கு புரிந்து கொண்டிருக்கிற காரணத்தால், தஞ்சை, திருச்சி, சேலம், தென்னார்க்காடு, கோவை மாவட்டங்களில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 13,500 ஏக்கரில் படிந்துவிட்ட மண்ணை எடுப்பதற்காக, புல்டோசர்கள் மூலம் சீர்செய்ய உத்தரவிட்டார்கள். முதலில் அதைச் செய்வதற்கு அரசு 25 சதவிகிதம் மானியம் கொடுக்கும் என்றும் அறிவித்தார்கள்.

ஆனால், அந்த வெள்ளப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தவுடன் அங்கேயுள்ள விவசாயிகள் படும் கஷ்டத்தைப் பார்த்து விட்டு எல்லாவற்றையுமே மானியமாக, எவ்வளவு செலவானாலும் அதைத் செய்து தருவது என்று உத்தரவிட்டார்கள். அதன் பயனாக இன்றையத் தினம் 16,000 ஏக்கரில் மணல் எடுக்கப்பட்டுத் தூர் வாரப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஒரு போர் முறைத் திட்டமாகக் கருதிச் செயல்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் அது செய்யப்பட்டு, இன்றையத்தினம் கடலூர்ப் பகுதியில் 4,700 ஏக்கர் சரி செய்யப்பட்டு, அங்கே கடலை பயிரிடப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தீவிரத் திட்டத்தை இன்றையத் தினம் உழவர்களுக்குப் பயன் அளிக்கும் திட்டத்தைச் செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உழவர்களின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

**(தமிழ்நாடு சட்டப் பேரவையில் 16—3—73-ல் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வழங்கிய பதிலுரையிலிருந்து)**

# நாக்கு

புலவர் பொன்னிவளவன்



வாய்க்குள்ளே பல்லாம் முத்து
வரிசை ;அவ் வரிசைக் குள்ளே
நாக்கே !நீ படுத்தி ருப்பாய் :
நாக்குநீ விழித்துக் கொண்டால்
வாக்குகள் பிறர்கா துக்கு
வழங்கிடு கின்றாய் ! உன்றன்
தூக்கமோ மௌனம் ; மௌனத்
தொடர்கதை பெயர்தான் ஊமை !

கதைபேசும் நாக்கே ! நீதான்
காட்டுவாய் திறமை ; ஆனால்
அதனாலே பட்ட தாரி
ஆவதோ வாய்தான் ! மக்கள்
பொதுவாய் 'வா யாடி' என்றே
புகல்கின்றார் ! சிலருக் குன்னால்
உதைகிட்டும் ; சிலர்க ழுத்தோ
உன்னால்பூ மாலை தாங்கும் !

கார்ஊரும் வானில் ! நீலக்
கடலோரம் ஊரும் நத்தை !
தேர்ஊரும் திருவா ரூரில் !
தேன்ஊறும் பூவில் ! நல்ல
ஏர்ஊரும் வயலில் ! வீட்டில்
எறும்பூரும் சர்க்க ரைக்கு !
நீர்ஊறும் பிஞ்சு மாங்காய் ;
நீர்ஊறும் உன்னி டத்தில் !

வரம்பில்லாத் திட்டு வார்த்தை
வழங்கிடும் நாக்கை மக்கள்
நரம்பில்லா நாக்கென் கின்றார் !
நாக்கிலே நரம்பா இல்லை ?
நாம்பிரித் துண்ணு கின்றோம் !
தக்கநல் சுவைகள் ஆறு !
நரம்புண்டு சுவையு ணர்த்த
நாக்கிலே ! மறுப்பா ருண்டா ?



சிடையோ பல்லிற் காக !
சிரித்திடும் மலரில் உள்ள
வாடையோ மூக்கிற் காக !
வகைவகை யாக நெய்த
ஆடையோ உடம்பிற் காக !
அகிலத்தில் ஒலிபெ ருக்கி
மேடையோ யாருக் காக ?
மேலான நாக்கிற் காக !

தீதிலாக் காப்பி யம்செய்
திருத்தக்க தேவர் ஓர்நாள்
பாதிரிப் பூவைப் பார்த்தார் ;
பாங்கான நத்தை நாக்கு
மாதிரி வளர்ந்தி ருக்கும்
மலர்அது ! என்று சொன்னார் !
மாதர்தம் பாதம் போல
வரிவேங்கைப் புலியின் நாக்கு !

பாகற்காய் போற்க சக்கும்
பதங்களை ஒதுக்கி வெல்லப்
பாகாக்க வேண்டும் பேச்சை !
பா, காக்கும் புலவ ரெல்லாம்
'நாகாக்க வேண்டும் !' என்னும்
நற்குறள் உரைப்பார் ! நாக்கை
யார்காக்கத் தவறி னாலும்
அவரால்தான் குத்து வெட்டு !



எச்சிலா புனித கங்கை ?
எப்போதும் குளிக்க லாமா ?
உச்சியில் கொடியில் லாத
ஒய்யார மதிலா பற்கள் ?
கச்சித இதழ்க ளாஉன்
கனவுகள் ? தாழ்ப்பாள் எங்கே ?
மெச்சினேன் உன்னை, என்னை
மேம்பட வைக்கும் நாக்கே !





“நீங்கள் வெற்றிலை பாக்குப் போடுவீர்களா ?”

“ஆம். போடுவேன் !”

“அதோடு புகையிலையும் போடுவீர்களா ?”

“அது இல்லாமலா ?”

“வெற்றிலை, பாக்கு, புகையிலை இம்மூன்றையும் போட்டுச் சிறிது நேரத்தில் துப்பிவிடுவீர்களா ?”

“இல்லை. வாயில் அவற்றை அடக்கி வைத்துக்கொள்வேன் !”

“அப்படியா ? அதனால்தான் உங்களுக்குப் புற்றுநோய் வந்திருக்கிறது......!”

“என்ன ? புற்றுநோயா ? எனக்கா ? உண்மையா டாக்டர் ?”

“ஆமாம். நீங்கள் மணிக்கணக்காக வாயில் வெற்றிலை பாக்கோடு புகையிலையையும் சேர்த்து அடக்கி வைத்துக் கொண்டதால், வாய்த் தாடையின் உட்புறத்தில் புற்றுநோய் கண்டிருக்கிறது ”

“ஐயோ ! அது மிகக் கொடிய நோய் என்று சொல்வார்களே! இதைக் குணப்படுத்தவே முடியாதா டாக்டர் ?”

“பயப்படவேண்டாம்! உங்களுக்கு இந்நோய் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. ஆகையால் அதைக் குணப்படுத்திவிடலாம் !”

டாக்டர் நம்பிக்கையுடன் இப்படிச் சொன்னதும், நோயாளி ஆறுதலடைகிறார்; அவர் முகத்திலே சூழ்ந்திருந்த பீதி மறைந்து, மகிழ்ச்சி காணப்படுகிறது.

இப்படிப் புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து, நோயாளிகளுக்குப் புத்துயிர் அளிக்க அரும் பணியாற்றி வருகிறது காஞ்சிமாநகரிலுள்ள “அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம் ”.

அறிஞர் அண்ணா அவர்கள், புற்றுநோயால் அவதிப்படும் மக்கள் நிலை கண்டு பெரிதும் வருந்தினார். அவர் விடா முயற்சியுடன் உலக சுகாதார நிறுவனத்தோடு (World Health Organisation) தொடர்பு கொண்டு, புற்று நோய் பற்றி ஆராய்ச்சி நடத்தச் செயற்கூடம் ஒன்று அமைந்திட வழி வகுத்தார். அதன் விளைவாக அவர் மறைவுக்குப் பின்னே எழுந்

ததது தான் ‘அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம்’.

இந்நிலையம் 1969-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள், தமிழ் நாடு அரசினரால் தொடங்கி வைக்கப்பெற்றது. இந்தச் செயற்கூடம் உலக சுகாதார நிறுவனத்தோடும், மைய அரசோடும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு அரசு இதற்கு எல்லா வசதிகளையும் கொடுத்துதவி வருகிறது.

புற்றுநோய் பற்றிய விவரங்களை மக்களுக்குத் தெரிவிப்பது, இதனை மேலும் வரவிடாமல் தடுப்பது, வந்ததைத் தடுத்து அறவே ஒழிப்பது ஆகியவையே இந்நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.

காஞ்சியில் கவின்மிகு தோற்றத்தோடு விளங்கும் இந்த ஆராய்ச்சிக்கூடம் இந்தியாவில் மட்டுமின்றி கிழக்காசியாவிலேயே ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்நிலையம் இரு திட்டங்களை வைத்துச் செயல்பட்டு வருகிறது. அவை 1. குறுகிய காலத்திட்டம். 2. நெடுங்காலத் திட்டம். காஞ்சிபுரம் நகர எல்லைக்குட்பட்ட பகுதி மக்களுடைய உடல்நிலையைச் சோதித்து அவர்களுக்குப் புற்றுநோய் இருக்கிறதா என்ற விவரங்களை அறியவும், வாய், தொண்டை. கருப்பைப்பகுதிகளை மட்டும் கவனித்தலும், விரைந்து அந்நோயைக் குணமாக்குவதும் குறுகிய காலத்

# இந்தியாவிலேயே மிகப் பெரிய பரிசோதனைத் திட்டம்





திட்டமாகும்; புற்றுநோய்த் தடுப்புப் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தல், எந்தப் பகுதியில் புற்றுநோய் இருப்பதாகத் தெரிகிறதோ அப் பகுதி நோயாளிகளைக் கவனித்து ஆவன செய்தல், இந்நோயைத் தடுக்கும் வழி வகைகள் பற்றி ஆராய்ந்து அதனை மக்களிடம் பரப்புதல், தகுந்த முறையில் பயிற்சியளித்து மருத்துவ வல்லுநர்களையும், உதவியாளர்களையும் இத் துறையில் பணியாற்றத் தயார்ப் படுத்துதல் ஆகியவை நெடுங் காலத் திட்டமாகும்.

முதலில் வாய்ப்புற புற்றுநோய் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

புற்றுநோய் என்பது உடலில் உள்ள உயிர் அணுக்களில் ஒழுங்கற்ற விபரீதமான வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சி மற்ற சாதாரண உயிரணுக்களின் வளர்ச்சியைவிட மிக அதிகமாக இருப்பதால், பக்கத்தில் உள்ள மற்றைய உயிரணுக்களையும் பாதித்து உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவும் தன்மையுடையது.

நமது நாட்டில் உயிர்களைக் கொல்லக்கூடிய கொடிய நோய்களில் புற்றுநோய் நான்காவது இடத்தைப் பெறுகிறது.

நம் நாட்டில் காணப்படுகின்ற புற்றுநோய் வகைகளில் வாய்ப்புற புற்றுநோய் முதலிடம் பெறுகிறது. இது கிட்டத்தட்ட 40 சதவிகிதமாக உள்ளது. உலகத்திலேயே இந்தியாவில்தான் வாய்ப்புற புற்றுநோய் மிக அதிகமாக இருக்கிறது எனத் தெரிகிறது. இப்புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்து சிகிச்சை செய்தால் பெரும்பாலும் கட்டுப்படுத்தி விடலாம். ஏன், குணமாக்கியும் விடலாமே!

இந்நோய் வருவதற்கான காரணங்கள் சில: 1. இது பெரும்பாலும் வெற்றிலை, பாக்கு, புகையிலை ஆகிய வகைகளை வாயில் நீண்ட நேரம் அடக்கி வைப்பதாலும், 2. உடைந்த கூரான பற்களினால் உண்டாகும் புண்ணாலும் 3. மது பானங்களை அதிகமாக அருந்துவதினாலும் உண்டாகிறது எனத் தெரிகிறது.

நோயின் ஆரம்ப அறிகுறிகள் இப்படி இருக்கலாம்:

அ. நாக்கிலோ அல்லது வாயில் ஏதாவது ஒரு பாகத்திலோ ஒரு புண் மூன்று வாரங்களுக்குப் பிறகும் ஆறாமல் பெரிதாகிக் கொண்டே இருத்தல்;

ஆ. வாயில் தடிப்பான அல்லது வெள்ளை நிறப் படை போன்ற பாகம் இருத்தல்;

இ. உதட்டில் வெடிப்பு ஏற்பட்டு விரைவில் ஆறாமல் இருத்தல்;

ஈ. வலியற்ற ஒரு கட்டி நாக்கிலோ அல்லது ஏதாவது ஒரு பகுதியிலோ பெரிதாகிக்கொண்டே இருத்தல்.

இவ்வறிகுறிகள் யாவும் புற்றுநோயாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் மருத்துவர் பரிசோதனை செய்து பார்த்தபின்தான் இது புற்றுநோயா? இல்லையா? என்று தெளிவாகச் சொல்ல முடியும்.

இந்நோய் பெரும்பாலும் வயது வந்த எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் வரலாம்.

புற்றுநோய் வராமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் கீழ்க்காணும் சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:

1. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை வாயில் நீண்ட நேரம் ஒதுக்கி வைக்கும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

2. வெறும் பாக்கை மட்டும் வாயில் போட்டுக் கொள்ளும் பழக்கத்தையும் கைவிட வேண்டும்.

3. அதிகமாக பீடி, சிகரெட் குடிப்பதையும், புகையிலையை வாயில் நீண்டநேரம் அடக்கி வைக்கும் பழக்கத்தையும் தடுக்க வேண்டும்.

4. அதிக காரமான உணவை உட்கொள்ளுவதையும், லவங்கப் பொருள்களை உணவுடன் அதிகம் சேர்த்து உட்கொள்ளும் பழக்கத்தையும் தடுக்கவேண்டும்.

5. மதுபானங்களை அடிக்கடி உட்கொள்ளும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

6. சாதாரண பல்லோ அல்லது செயற்கைப் பல்லோ வாயில்

புண்ணை உண்டாக்கினுல், உடனே மருத்துவரிடம் காண்பித்து ஆலோசனை பெறவேண்டும்.

7. உதடு, வாயின் உட்புறம் தொண்டை ஆகிய பாகங்களில் ஒரு கட்டி அல்லது வெள்ளைப் படை போன்ற பாகம் அல்லது ஆறாத புண் மூன்று வாரங்களுக்கு மேல் நீடித்தால் உடனே மருத்துவரிடம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

நம் நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய எவ்விதமான விவரங்களும் இல்லை. இததகைய புள்ளி விவரங்களெல்லாம், அவர்கள் மருத்துவ மனைக்கு வந்தபின் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டுதான் கவனிகக வேண்டியுள்ளது. பம்பாய் நகரில் 1963-ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ள புள்ளி விவரங்களே நமக்கிருக்கும் ஒரே குறிப்பு!

அந்தக் குறிப்பு என்ன சொல்கிறது? புதிதாகப் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள் ஒரு இலட்சம் மக்களுக்கு ஏறக்குறைய 85 பேர்கள் என்றும், இநத அடிப்படையில் தமிழகத்தின் மக்கள் தொகையான 4·1 கோடியில், புதிதாக இந்நோயால் பாதிக்கப்படுபவர்கள் சுமார் 35,000 பேர்கள் எனவும் அந்தக் குறிப்பு கூறுகிறது. மேலும் இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 5,00,000 மக்கள் புற்றுநோயால் இறந்துவிடுவதாகவும் இநதப் புள்ளி விவரம் எச்சரிக்கை செய்கிறது.

பொதுவாக 45 முதல் 50 சதவிகிதம் வரை புற்றுநோய் பெணகளுக்குக் கருப்பை பாகத்திலேயே பீடிப்பதாக அறிய முடிகிறது. ஆண், பெண் இருவருக்குமே வாய், தொண்டை, உணவுக் குழாய் ஆகிய இடங்களில் இந்நோய் தோன்ற வாயப்பிருக்கிறது. ஆனுல் மேற்கண்ட புள்ளி விவரம் ஒரு பொதுவான கருத்தையும் கூறுகிறது. தொண்டையில் ஆண்களுக்கும், கருப்பையில் பெணகளுக்கும் புற்றுநோய் தோன்றுகிறது என்பதுதான் அது.

குறிப்பாகக் கருப்பையின் வாய்ப்புற புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துச் சிகிச்சை செய்தால் பாதிக்கப்படுவோரில் பெரும்பாலும் நூற்றுக்கு நூறு சதவிகிதத்தினரையும் குணப்படுத்த முடியும்.

நமது நாட்டில் பெண்களிடையே காணப்படும் புற்றுநோய் வகைகளில் கருப்பையின் வாய்ப்புறத்தில தோன்றும் புற்றுநோய், எண்ணிக்கையில் முதலிடம் பெறுகிறது.

கருப்பையின் வாய்ப்புற புற்றுநோய் கருப்பையின் வாய்ப்புறத்தில் ஏற்படும் ஒருவித வளர்ச்சி அல்லது ரணமாகும். அது மிக வேகமாகப் பரவி வளரும்போது பக்கத்திலுள்ள நல்ல திசுக்களையும் அழிக்கிறது. முடிவாக முற்றிய நிலையில் இந்நோய் இரத்தக் குழாயின் மூலமாகவும், நிணநீர்க் குழாயின் மூலமாகவும் உடலின் மற்ற அங்கங்களுக்கும் பரவி அவற்றையும் பாதிக்கிறது. இதனுல் உயிரிழப்பும் ஏற்படும்.

இந்நோய் வருவதற்கான காரணங்கள் என்ன?

பல் குழந்தைகள் பெறும் பெண்களிடையேயும், இருபது வயதுக்கு முன்னரே திருமணம் செய்து கொள்ளும் பெண்களிடையேயும் இந்நோய் வரும் வாய்ப்பு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்நோயின் அறிகுறிகளாய் இருக்கக்கூடியவை:

1. மாதவிடாயின்போது இரத்தப் போக்கு அதிகமாக இருத்தல் அல்லது நீடித்தல்; 2. ஒரு மாதவிடாய்க்கும் இன்னொரு மாதவிடாய்க்கும் இடையில் இரத்தப்போக்கு ஏற்படுதல்; 3. வயதான காலத்தில் மாதவிடாய் முழுவதும் நின்ற பின் இரத்தப்போக்கு ஏற்படுதல் அல்லது வெள்ளை படுதல் அல்லது இரண்டும் சேர்ந்திருத்தல்; 4. உடலுறவின்போது இரத்தக் கசிவு ஏற்படுதல்; 5. இயற்கைக்கு மாருக பிறப்புப் பாதையில் வெள்ளை படுதல் அதிகம் இருத்தல்.

இந்த அறிகுறிகள் கருப்பையின் வாய்ப்புறத்தில் தோன்றும் புற்றுநோயின் அறிகுறிகளாகவும் இருக்கலாம். ஆனுல், மருத்துவரால்தான் இவ்வறிகுறிகளுடன் ஒரு பெண்ணுக்குப் புற்றுநோய் இருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசோதித்துப் பார்த்த பின் சொல்ல முடியும்.

கருப்பையின் வாய்ப்புறத்துப் புற்றுநோய் பெரும்பாலும் வயது வந்த எந்தப் பெண்ணுக்கும் வரலாம். எனவே, இருபது வயது முதல் அறுபது வயது வரையில் உள்ள எல்லாப் பெண்களும், மற்றும் திருமணமான எல்லாப் பெண்களும் தாங்கள் உடல் நலமாயிருக்கிறேம் என்று எண்ணும் போதே, பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இப்பரிசோதனை இலவசமானது. எளிதானது, வலியற்றது. இரண்டே நிமிடத்தில் முடியக் கூடியது. ஆண்டுக்கொரு முறை செய்யப்பட வேண்டியது.

இப்பரிசோதனையில், அறிகுறிகள், வலியேதும் தோன்றுவதற்கு முன்பே நோயின் ஆரம்ப நிலையைக் கண்டுபிடித்து விடலாம். இந்த நிலையில் சிகிச்சை செய்தால் பாதிக்கப்படுவோரில் பெரும்பாலும் எல்லோரையும் குணப்படுத்த முடியும்.

அறிகுறிகள் தோன்றி, வலி ஏற்பட்ட நிலையில் மருத்துவ மனைக்கு வருவது தாமதித்த நிலையாகும். இந்த நிலையில் நோயைக் குணப்படுத்துவது மிகவும் கடினமாவதுடன், முடியாததுமாகும். எனவே இந்நோயை முற்ற விடாமல் ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்துவது மிகவும் நன்மை பயப்பதாகும்.

இந்நோய்க்கு மூன்று வகைச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன



1. அறுவைச் சிகிச்சை.

2. கதிரியக்கச் சிகிச்சை (ரேடியம் போன்றது).

3. அறுவைச் சிகிச்சையும் கதிரியக்கச் சிகிச்சையும் சேர்ந்தது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்களுக்குக் கதிரியக்கச் சிகிச்சைதான் செய்யப்படுகிறது.

மற்ற நாடுகளுடன் நமது நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது புற்றுநோய்க் கட்டுப்பாடு நமக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும்.

இங்கிலாந்தில் 12·5 சதவீதம்; அமெரிக்காவில் 13·6 சதவிகிதம்; ஆனால் இந்தியாவிலோ 24·7 சதவிகிதம் கருப்பையில் புற்றுநோய் உள்ள பெண்கள் இருப்பதாக நாம் அறிகிறோம். மேலும் தொண்டை, உணவுக் குழாய்களில் இந்நோய் உள்ளவர்கள் இந்தியாவில் 37·5 சதவிகிதம் ஆண்களும், 15 சதவிகிதம் பெண்களும் இருக்கிறார்கள். அமெரிக்காவில் 4·5 சதவிகிதமும், இங்கிலாந்தில் 7 சதவிகிதமும் தான் தொண்டை, உணவுக் குழாய் புற்றுநோய் உள்ள ஆண்கள் இருப்பதாக அறிகிறோம். ஆனால், பெண்கள் சதவிகிதமோ அங்கே மிகக் குறைவு!

காஞ்சியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 55,000 பேர்கள் புற்றுநோய் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வீடுவீடாகச் சென்று இந்நிலைய மருத்துவர்களும், உதவியாளர்களும் மக்களை விசாரிக்கின்றனர். பிறகு பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு வரவழைக்கின்றனர். விரைந்து செயலாற்றுவதற்கு வசதியாக இந்நிலைய ஊர்திகள் நாள்தோறும் இயங்குகின்றன. இவ்வூர்திகளில் பெண் மருத்துவர்கள், உதவியாளர்கள் செல்கின்றனர். ஆண், பெண் அனைவரையும் விசாரித்துப் புற்றுநோய் அறிகுறிகள் இருக்கின்றனவா என அறிகின்றனர். வெற்றிலை பாக்கு, புகையிலை போடுதல், பீடி சிகரெட் குடித்தல், குடிப்பழக்கம் போன்ற பழக்க வழக்கங்களை விசாரணையின் மூலம் அறிந்து பதிவு செய்து கொள்கின்றனர். நோய்க்கான அறிகுறி தென்பட்டால் உடனே அவர்கள் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு தக்க சிகிச்சைக்காகச் சென்னை மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இந்தியாவிலேயே முதன் முதலாக அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையத்தில்தான் பெரிய அளவு பரிசோதனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்குச் சுமார் 100 பேர்கள் இவ்வாறு விசாரிக்கப்படுகின்றனர். இது வரை 25,000 பேர்களுக்குப் பரிசோதனை நடந்திருக்கிறது. நகராட்சி மருந்தகங்கள், தாய்சேய் நல விடுதிகள் ஆகியவற்றிலும் இந்நோய் பற்றிய பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

இந்நிலயத்திற்கு உலகச் சுகாதார நிறுவனமும், தமிழ்நாடு அரசும் இணைந்து மருத்துவ வசதிகளைச் செய்து வருகின்றன. தமிழ்நாடு அரசு இதுவரை 6·5 இலட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது. மருத்துவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி இத்துறையில் பயிற்சி பெற வகையும் செய்துள்ளது. புற்றுநோய் சம்பந்தமான எல்லா விவரங்களும் தேவைப்படுவதால், புள்ளி விவரங்களை முறைப்படி சேகரிக்கவும், அதனைக் காக்கவும், வேண்டியபோது மக்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் தெரிவிக்கவும், தகுதி வாய்ந்த புள்ளி விவர நிபுணர் ஒருவர் இங்கே இருக்கிறார். இவர் வெளிநாடு சென்று பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத் தகுந்தது.

மருத்துவ நிபுணர்களாலும், உயிர் அணு ஆய்வாளர்களாலும், புள்ளி விவர வல்லுநர்களாலும், சுகாதாரக் கல்விப் பயிற்சியாளர்களாலும் ஓர் ஆராய்ச்சிக் கழகமாகப் பணியாற்றி வரும் இந்நிலயத்தில் பரிசோதனைக்காகவும், குறுகிய காலச் சிகிச்சைக்காகவும் தங்கும் நோயாளிகளுக்குப் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நவீன வசதிகளுடன் கூடிய பரிசோதனைக்கூடம் இவற்றுக்குப் பெரிதும் துணை புரிகின்றது.

இந்நிலயத்தின் குறிக்கோள்களில் சமூக நல ஆராய்ச்சி நடத்துவதும் ஒன்றாகும். இதன்படி மக்களின் விருப்பு வெறுப்பு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து புள்ளிவிவரங்கள் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. வீடு வீடாகச் சமூக நல ஊழியர்களோடு மருத்துவப் பணியாளர்களும் சென்று மக்களிடமுள்ள அறியாமையைப் போக்கிப் புற்று நோய் பற்றி அறிய வாய்ப்பு அளிக்கிறார்கள். குடும்ப வாரியாக 20 வயதிற்கு மேற்பட்டவர்களுடைய வாழ்க்கை நிலை, உடல் நிலை ஆகியவற்றைத் திரட்டித் தனித்தனி அட்டையில் பதிவு செய்து பாதுகாத்தும் வருகின்றனர். புள்ளிவிவர நிபுணர் இதற்குப் பெருந்துணை புரிகிறார்.

இவ்வாறு இந்நிலயம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதைப் பிற மாநிலத்தவரும் அறிந்துள்ளனர். ஆந்திரம், கேரள மாவட்டங்களிலிருந்து புற்றுநோய் உள்ள சுமார் 140 பேர்கள் இங்கு வந்து சிகிச்சை பெற்று நலமடைந்து சென்றுள்ளனர் என்றால் இதன் பணியினை நெஞ்சாரப் பாராட்ட வேண்டுமல்லவா?



இந்த நற்பணி, பயனுள்ள சமூக நலப் புணியாதலால், இதன் இன்றியமையாமையைத் தமிழக அரசு நன்குணர்ந்து, இங்குள்ளது போன்ற வசதிகள் மற்ற மாவட்டங்களிலும் கிடைக்க முயற்சி எடுத்து வருகிறது. முறையாக, ஒவ்வொரு கட்டமாக இந்தத் திட்டம் விரிவாக்கப்படும்.

புற்றுநோய் ஒழிப்பில் முதல் கட்ட (1972—73) நடவடிக்கையாகக் காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனை மையத்தில், புற்றுநோய்ச் சிகிச்சைக்காக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்படவிருக்கிறது. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையத்துடன் இது இணைக்கப்பெறும். இந்த மருத்துவமனை, தமிழ்நாடு வட்டாரப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமாக நாளடைவில் மேம்படுத்தப்படும். இதற்காகப் பக்தவத்சலம் தொழில் நுணுக்கப் பள்ளி அருகே 20 ஏக்கர் நிலம் வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கட்டடச் செலவுக்கு ரூ. 21·35 இலட்சமும், இக்காலக் கட்டத்தில் அலுவலர் வகையில் ரூ. 5 இலட்சமும், கதிரியக்கக் கருவிகள் வாங்க மூன்று இலட்சம் டாலரும் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்டத்தில் (1974—76) அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையமும் மருத்துவமனையும் 200 படுக்கை வசதியுள்ள வட்டாரப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமாக மேம்படுத்தப்படும். இதற்கு முதலீட்டுச் செலவு ரூ. 12 இலட்சமும், அந்நியச் செலாவணி 1·5 இலட்சம் டாலரும், நடைமுறைச் செலவு ரூ. 4 இலட்சமும் ஆகும்.

மூன்றாவது வளர்ச்சிக் கட்டத்தில் (1977–79) இந்த நிலையம் 300 படுக்கை வசதிகள் கொண்டதாகவும், ஆராய்ச்சி வசதிகள் நிறைந்ததாகவும் ஆகும்.

நான்காவது கட்டத்தில் (1980–81) மாநிலத்தில் புற்றுநோய் ஒழிப்புச் செயல் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும். இவ்வகையில் ரூ. 20 இலட்சம் மூலதனச் செலவு ஆகும்.

ஐந்தாவது கட்டத்தில் (1982–83) அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் உயர்தர ஆராய்ச்சி வசதிகளும், 500 படுக்கை வசதிகளும் உள்ளதாக அமையும். ரூ. 30 இலட்சம் முதலீட்டுச் செலவும், ரூ. 10 இலட்சம் நடைமுறைச் செலவும் ஆகும்.

ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவ மாணவர்கள் புற்றுநோய் பற்றி அறிந்துகொள்வதற்காக ஒரு சிறு புற்றுநோய்ப்



பிறப்புப் பாதையிலிருந்து பரிசோதனைக்கு எடுக்கப்பட்ட திரவத்தை கண்ணாடித் துண்டில் பாதுகாக்கப் படுகிறது.

பிரிவு இருக்கவேண்டும் என்று பேராசிரியர் பி. என். வாகி தலைமையில் டிசம்பர் 1971-ல் அமைக்கப்பட்ட புற்றுநோய் மதிப்பீட்டுக் குழு கூறியுள்ளது. தற்போதுள்ள பதினொரு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையங்களையும் முழு வசதியுள்ள நிலையங்களாக உயர்த்தவும், வட்டார ஆராய்ச்சி நிலையங்களாக மாற்றுவது பற்றி ஆலோசனை கூறவும் இக்குழு அமைக்கப்பட்டது. இந்தப் பதினொரு நிலையங்களாவன: 1. சித்தரஞ்சன் தேசீய புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம், கல்கத்தா; 2. புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம், பம்பாய்; 3. எம்.பி. ஷா புற்றுநோய் மருத்துவ மனை, அகமதாபாத்; 4. புற்றுநோய்க் கழகம், சென்னை; 5. ரேடியம் கழகப் புற்றுநோய் மருத்துவ மனை, ஐதராபாத்; 6. சப்தர்ஜங் மருத்துவ மனை, புதுதில்லி; 7. ஜே. கே. ரேடியாலஜி புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம், கான்பூர்; 8. அரசாங்க மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கட்டாக்; 9. சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம், நெய்யூர்; 10. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம், காஞ்சிபுரம்; 11. ரேடியம் கழகம் மருத்துவக் கல்லூரி, திருவனந்தபுரம்.

வட்டார நிலையங்கள் புற்றுநோய்க்கு நவீன முறைகளில் சிகிச்சை அளிக்கும் வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அதே சமயத்தில் மருத்துவ பட்டப்படிப்பு, மேற்படிப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வசதிகளும் இந்நிலையங்களில் இருக்க வேண்டும் என்று இக்குழு கூறியுள்ளது.

ஒவ்வொரு நிலையத்திலும் 250 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றும், சோதனைக்கூட வசதிகளும் தேவையான அளவுக்கு ஊழியர்களும் இருக்கவேண்டும் என்றும், புற்றுநோய்ப் பதிவு நிலையம் ஒன்று ஒவ்வொரு நிலையத்திலும் வைக்கப்பட வேண்டும் என்றும் இதற்கு முதற்படியாகத் தேசியப் புற்றுநோய்ப் பதிவு நிலையம் ஒன்றை அமைக்கலாம் என்றும் இக்குழு கருத்துரை கூறியுள்ளது.



புற்று நோயால் பாதிக்கப்பட்டவருக்கு கதிரியக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நோயற்ற வாழ்வு வாழவும், புற்றுநோய்களிலிருந்து முற்றிலும் விடுபடவும், அதனை வராமல் தடுக்கவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அரும்பணிகள் ஆற்றி வருகிறது அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம். இந்தியாவிலுள்ள வட்டார ஆராய்ச்சி நிலையங்களில், ஒன்றாக இந்நிலையமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது தமிழ் நாட்டுக்குப் பெருமை தரும் செயலே அல்லவா?

—பி.வி.ஜி.



# அறிவாலயங்கள் நிறைந்த கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் ஆலயங்கள் குறைவாக இருந்தாலும், அறிவாலயங்கள் நிறைந்துள்ளன. செல்வங்களுக்கெல்லாம் பெருஞ் செல்வமாகிய கல்விச் செல்வத்தை வளர்க்கக் கோவை மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட அறிவாலயங்கள் அரும்பணியாற்றுகின்றன.

| | | |
|---|---|---|
| துவக்கப்பள்ளிகள் | | 2,602 |
| உயர் துவக்கப் பள்ளிகள் | | 460 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 5 |
| உயர் நிலைப் பள்ளிகள் | .. | 260 |
| மொத்தம் | .. | 3,327 |

கோவை மாவட்டத்தில் 4 பயிற்சிப் பள்ளிகளும் உள்ளன.

கோவை மாவட்டத்தில் 29 கல்லூரிகள் கலை, அறிவியல், தொழில் நுட்பக் கல்விகளை அளித்துத் தமிழ்நாட்டில் அறிவொளி பரப்பும் அரிய பணியினைச் செய்து வருகின்றன. அவைகளுள் 19 கல்லூரிகள் கோவை நகரில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டின் மற்ற நகரங்களுக்கு இல்லாத சிறப்பு கோவைக்கு உண்டு. ஏனெனில், கோவை நகரில்தான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், தென் இந்திய வனச் சரக அலுவலர்கள் பயிற்சிக் கல்லூரியும், விமானப் படை நிருவாகக் கல்லூரியும், அவினாசி லிங்கம் மனை இயல் கல்லூரியும், ஜி.சி.டீ ( G.C.T ) சி.ஐ.டீ ( C.I.T ) பி.எஸ்.ஜி. (P.S.G.) ஆகிய 3 பொறியியற் கல்லூரிகளும் அமைந்துள்ளன. எல்லா வகையான கல்லூரிகளும் கோவை மாவட்டத்தில் உள்ளன. சட்டக் கல்லூரியும், இசைக் கல்லூரியும் இல்லாததே கோவைக்குக் குறையாகவுள்ளது.

கோவை மாவட்டத்தில் கீழ்க் கண்ட கல்லூரிகள் உள்ளன.

1. அரசினர் கலைக் கல்லூரி.
2. பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரி.
3. நிர்மலா மகளிர் கல்லூரி.
4. பி.எல்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி.
5. அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி ( G.C.T ).
6. கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனக் கல்லூரி (C.I.T.).
7. பி. எஸ். ஜி. தொழில் நுட்பக் கல்லூரி.
8. அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரி.
9. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் கூடம்.
10. அரசினர் பன்னுட்பக் (பாலிடெக்னிக்) கல்லூரி.
11. அரசினர் மகளிர் பன்னுட்பக் கல்லூரி.
12. அரசினர் மருத்துவக் கல்லூரி.
13. ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி.
14. செந்தமிழ்க் கல்லூரி, பேரூர்.
15. மாருதி, உடற்பயிற்சிக் கல்லூரி, பெரியநாயக்கன் பாளையம்,
16. இராமகிருஷ்ண வித்யாலய பயிற்சிக் கல்லூரி, பெரியநாயக்கன் பாளையம்.
17. இராமலிங்கம் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம்.
18. தென்னிந்திய வனச்சரகர் கல்லூரி.
19. விமானப்படை நிருவாகக் கல்லூரி.

ஈரோடு

20. வாசவி கல்லூரி.
21. சிக்கய்ய நாயக்கர் கல்லூரி.
22. அரசினர் கலைக் கல்லூரி. கோபிச்செட்டிபாளையம்
23. அரசினர் கலைக்-கல்லூரி.

பொள்ளாச்சி

24. நாச்சிமுத்து மகாலிங்கம் கலைக்கல்லூரி.
25. நாச்சிமுத்து மகாலிங்கம் பன்னுட்பக் கல்லூரி, மக்கினம் பட்டி.

திருப்பூர்

26. சிக்கண்ண அரசினர் கலைக் கல்லூரி.
27. எல். ஆர். ஜி. கலைக் கல்லூரி.

உடுமலைப்பேட்டை

28. அரசினர் கலைக் கல்லூரி.
29. விசாலாட்சி மகளிர் கல்லூரி.

கோவை மாவட்டக் கல்லூரிகளை இணைத்துக் கோவையில் ஒரு பல்கலைக் கழகம் துவங்குவது பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் உள்ள சில கல்லூரிகள் தமிழகத்தின் மாணவர்களுக்கு மட்டுமன்றி, பிற மாநிலங்கள், பிற நாடுகளின் மாணவர்களுக்கும் கல்விக்கண் கொடுத்து வருகின்றன. கோவை மாவட்டத்தில் ஏராளமான அறிவாலயங்கள் அறிவொளி பரப்புவதால், 1961-ஆம் ஆண்டில் 30.20 சதமாக இருந்த கோவை மாவட்டப் படித்தவர்களின் தொகை, 1971-ஆம் ஆண்டில் 38.81 சதமாக உயர்ந்துள்ளது.





யார் பேசுவதில் எவ்வளவு
இன்பம் இருந்தாலும், தாய்
நம்மை 'வாடா மகனே!' என்று
கூறும்போது ஏற்படும் இன்பத்
திற்கு நிகரில்லை. அதுபோல,
தாய் மொழியின் இன்பத்திற்கு
நிகர் ஏதுமில்லை.

—பேரறிஞர் அண்ணா

அமெரிக்காவில் மக்கள்
தொகையைவிட வானொலிப்
பெட்டிகள் அதிகமாம்.
அங்கு 1000 பேர்களுக்கு
1412 வானொலிப்பெட்டிகள்
என்ற விகிதத்தில்
உள்ளன.

இருதயம் தனக்காகத் துடிப்ப
தில்லை; உடலும் உயிரும் வாழ்
வதற்காகத் துடித்துக் கொண்
டிருக்கிறது.

—கலைஞர்



செவ்வாய்க் கோளிலே கோடிக் கணக்
கான ஆண்டுகளுக்கு முன்னே தண்ணீர்
பாய்ந்து ஆற்றுப் படுகை போன்று
தடம் உண்டாகியிருக்க வேண்டும் என்று
ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.



சிக்காகோ நகரில் 1,450 அடி உயரத்
தில் 110 மாடிகள் கொண்டதாக அமைக்
கப்பட்டுவரும் ஸீயர்ஸ் அண்ட் ரோபக்
டவர் என்ற கட்டடம்தான் உலகத்தி
லேயே உயரமான கட்டடம் என்கின்
றனர்.

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமய்யா!
ஏழை என்றொருவன்-உலகில்
இருக்க லாகாதையா!

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

ஒரு துளி மை பத்துலட்சம்
பேர்களைச் சிந்தனை செய்யத்
தூண்டக் கூடியது.

—பைரன்

"கடினமான தரையில் ஏர்கட்டி உழுவாரிடமும்,
சாலை அமைக்கச் சரளைக் கல் உடைப்பாரிடமும்
அவன் இருக்கின்றான். அவர்களுடன் அவன் மழை
யில் நனைகின்றான். வெயிலில் உலர்கின்றான்.
அவன் ஆடையில் தூசி படிந்திருக்கின்றது.
உன் துவராடையைத் தூக்கியெறி! அவனைப்
போலவே நீயும் புழுதியில் இறங்கிவா!

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும்
விட்டு வெளியேவா! உன் ஆடை கிழிந்து அழுக்
கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில்
விழ உழைத்து உன் இறைவனைக் கண்டு கொள்!

—தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து



# இங்கே எல்லாம் கிடைக்கும்



நம் நாட்டில் ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள கண் சிகிச்சைக் கருவிகள் உற்பத்தியாகின்றன. தற்போது இரண்டாயிரத்து ஐநூறுக்கும் அதிகமான சிறு தொழில் பிரிவுகளில் மூக்குக் கண்ணாடி லென்சுகளும், ஃப்ரேம்களும், மற்ற கண் சிகிச்சைக் கருவிகளும் உற்பத்தியாகின்றன.

"இந்தியப் பயண வழிகாட்டி நூல்" ஒன்றைத் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த வெளியீடுகள் பிரிவு வெளியிட்டிருக்கிறது. இந்தப் பழம்பெரும் நாட்டின் முக்கிய இடங்கள் பற்றிய எல்லா விவரங்களையும் இந்நூல் வழங்குகிறது. வெளிநாட்டிலிருந்து வந்து சாவதானமாக, அல்லது அவசரமாக இந்தியாவைச் சுற்றிப் பார்க்க நினைக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு இப்புத்தகம் மிகுந்த உதவியாக இருக்கும்.

நாட்டிலுள்ள சுற்றுலா மையங்களைக் கண்டு களிக்கும் விருப்பமுடையவர்களுக்கும், அவ்விடங்களுக்குக் கல்வி முறையில் பயணம் மேற்கொள்ள நினைப்பவர்களுக்கும் இந்த நூல் வழிகாட்டி உதவும். பயணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் எளிதாக்கும் பொருட்டு விமான, கடல் வழிகள், உள்நாட்டுப் போக்குவரத்து, அரசு விதிமுறைகள் முதலியவை பற்றிய தகவல்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

1972-73-ஆம் ஆண்டின் முதல் ஆறு திங்களில் 1,783 டன் மாம்பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மதிப்பு 48 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய். 1971-72-ஆம் ஆண்டில் 26 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு 1325 டன் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பிரிட்டன், பஹரீன், துபாய், குவைத், மஸ்கட், கொதார் ஆகிய நாடுகள் இந்திய மாம்பழங்களை அதிகமாக வாங்குகின்றன. மாம்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கு உரிமக் கட்டுப்பாடு கிடையாது.

இந்தியாவில் வைரம், தங்கம், வெள்ளி ஆகியவற்றின் உற்பத்தி கடந்த பிப்ரவரித் திங்கள், அதற்கு முந்தைய திங்களைவிட அதிகமாய் இருந்தது.

கடந்த பிப்ரவரித் திங்களில் 282 கிலோ கிராம் தங்கமும், 448 கிலோ கிராம் வெள்ளியும் உற்பத்தியாயின. சனவரித் திங்களைவிட பிப்ரவரியில் தங்கத்தின் உற்பத்தி 6 சதவீதமும், வெள்ளி உற்பத்தி 37 சதவீதமும் கூடியது. ஆய்வு மாதத்தில் 2,172 காரட் வைரம் உற்பத்தி செய்யப்பட்டது. சனவரியில் உற்பத்தியான வைரம் 2,099 காரட்கள் ஆகும். இதே மாதத்தில் 2,053 டன் துத்தநாகமும், 663 டன் ஈயமும் திரட்டப்பட்டன.

பஞ்சம் ஒழிக்கும் இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த மாணவத் தொண்டர்கள் கேரளத்திலுள்ள ஃபரூக்கில் குளம் ஒன்றை அகழ்ந்துகொண்டு இருந்தனர். அப்போது கிழக்கிந்தியக் கம்பெனி வெளியிட்ட மூன்று பழைய நாணயங்களைக் கண்டுபிடித்தனர். அவற்றில் ஒன்றில் 1744-ஆம் ஆண்டு முத்திரையும், மற்றொன்றில் 1786-ஆம் ஆண்டு முத்திரையும் உள்ளன. மூன்றாவதில் முத்திரைகள் மழுங்கிவிட்டன.

# படமும் செய்தியும்....




முதல்வர் கலைஞர் அவர்களின்
ஐம்பதாவது பிறந்த நாளான ஜூன்
3உ அன்று கைரிக்ஷாவுக்குப்
பதிலாக இலவச சைக்கிள்
ரிக்ஷா வழங்கும் நிதிக்கு ரூபாய்
21,18,484 சேர்ந்தது.. இதில்
உண்டியல் மூலமாக மட்டும்
சேர்ந்த ரூபாய் 1,35,698 ஆகும்



தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு நூற்றுண்டுக் காலமாக மனிதனை வைத்து மனிதன் இழுத்துவந்த கொடுஞ் செயலுக்குத் துணைபுரிந்த கைரிக்ஷாக்களின் சரித்திரம் முற்றுப்பெற்று, அவை போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தைத் தஞ்சம் அடைந்த காட்சி.



கைரிக்ஷாத் தொழிலாளர்கள் இலவசமாகப் பெறுவதற்காக, அரசினர் தோட்டத்தில் அணிவகுத்து வைக்கப்பெற்ற சைக்கிள் ரிக்ஷாக்கள்.



சென்னையில் நடைபெற்ற சைக்கிள் ரிக்ஷா வழங்கு விழாவில் பங்கேற்றுக்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களும் ஏனைய அமைச்சர் பெருமக்களும்.

முதல்வர் கலைஞர் அவர்களின் 50-வது பிறந்த நாள் நினைவாகச் சென்னை மாவட்டச் சீரணியினர், சைதாப்பேட்டையில் கட்டி முடித்த நரிக்குறவர் மாணவர் இல்லத்தைக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் நாவலர் 5-6-73 அன்று திறந்து வைத்தார்.









கன்னிமாரா பொது நூலகத்தின்
புதுக்கட்டடத்தை 4-6-73ல்
கல்வியமைச்சர் நாவலர்
திறந்துவைத்தார்



எழில்மிகு ஏர்க்காட்டில்
மலர்க்கண் காட்சியினை
சுற்றுலா அமைச்சர்
திரு. க. இராசாராம்
27-5-73ல்
திறந்துவைத்தார்





நாகர்கோவிலில் 27–5–73 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள், விளையாட்டு அரங்கினைத் திறந்துவைத்தார்கள்.





நாகர்கோவிலில் 27–5–73 அன்று தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்க ல் திறந்துவைக்கப்ப ற 'கலைஞர் கருணாநிதி அரங்கம்'.

# உலகப் புகழ் பெற்ற பயிர்வகைகளை உருவாக்கியது கோவை



உலகப் புகழ்பெற்ற 'ஜி. இ. பி. 24' என்னும் கிச்சலி சம்பாவை உருவாக்கியது கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் கூடமே யாகும். இந்தக் கிச்சலி சம்பாவிற்கு இணையான ரகம் இதுவரை உலகில் வேறு எங்குமே கண்டுபிடிக்கப்படவில்லை என்பது பெருமைக்குரியதாகும். இவ்வாராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு ரகங்கள் உலகமெங்கிலும் பரவியுள்ளன.

கோவைக்கருகில் உள்ள மைய கரும்பு உருவாக்கும் நிறுவனம் (Central Sugarcane Breeding Institute) வெளியிட்டுள்ள கோயம்புத்தூர் கரும்பு வகைகள் (Co–cane Varieties ) இந்தியாவின் சர்க்கரை உற்பத்தியைப் பன்மடங்காகப் பெருக்க உதவியதுடன், உலகெங்கணும் உள்ள 26 நாடுகளில் வாணிக அடிப்படையில், பயிரிடப்படுகின்றன. இதனால் இந்நிலையம் உலகப் புகழ்பெற்று விளங்குகிறது. இந் நிலையத்தில் நாணலையும், கரும்பையும் இணைத்து உருவாக்கிய கரும்புகள் உலகின் கவனத்தையும், பாராட்டுதலையும் பெற்றுள்ளன.



நூரும் எண் நூலினை நூற்பதற்கு ஏற்ற 'சுஜாதா' என்ற ரகமும், எகிப்து நாட்டிலிருந்து தற்பொழுது இறக்குமதி செய்யப்பட்டு வரும் 'கிஸா' பருத்தி ரகத்திற்கு இணையான 'சுவின்' என்ற ரகமும் கோவையில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மண்டல நிலையத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டன. இந்த ரகங்கள் நாடெங்கிலும் முழு அளவில் பரவுமானால், நீண்ட இழைப் பருத்தியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் வகையில் இந்தியா ஆண்டுதோறும் இழந்து வரும் 85 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியும். எனவே, இவ்விரு ரகங்களும் உலகப் புகழ் பெற்று விளங்குகின்றன.

இத்தகைய உலகப் புகழ் பெற்ற பயிர் ரகங்களை உருவாக்கிய கோவை, நாட்டிற்கும் நானிலத்திற்கும் நல்ல சேவை செய்து வருகிறது.




கெசட்டியர் (Gazetteer) என்ற சொல்லுக்கு ஆக்ஸ்போர்டு அகராதி தரும் பொருள் 'நிலநூல் விவரங்கள்' என்பதாகும். ஆனால் கெசட்டியர் நூல்கள் உண்மையில் வெறும் நிலநூல் விவரங்கள் மட்டும் கொண்டதல்ல; வரலாறு, அரசியல், பொருளாதாரம், போக்குவரத்து, மக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள் முதலிய பல்வேறு தகவல்களையும் திரட்டி ஒரு தொகுப்பு வடிவிலே தருவனவாகும். ஒருநாடு, நாட்டின் பகுதி, அல்லது மாநிலம் அல்லது மாவட்டம் இவைகளின் விரிவான சிறப்பு வரலாறு, மற்றும் ஏனைய செய்திகளைத் திரட்டித் தனித்தனிப் புத்தக வடிவில் வெளியிடப்படுவது கெசட்டியர் எனப்படும். ஆகையால் கெசட்டியர் என்ற சொல் இன்று மிக விரிவான பொருளை உள்ளடக்கி நிற்கிறது எனச் சொல்லலாம். தமிழில் இதனை விவரச்சுவடிகள் என்று அழைக்கிறோம்.

முந்தைய காலத்தில் விவரச்சுவடி என்பது பெரும்பாலும் பயணக் குறிப்புகளைத் தொகுத்துச் சொல்வதாகவே இருந்தது. நம்நாட்டைப் பொறுத்தவரை மெகஸ்தனீஸ், பாஹியான், யுவான்சுவாங், அல்புராணி, இபுஸ்பட்டூடா ஆகியோரின் பயணக் குறிப்புகள் இவ்வகையைச் சாரும். சாணக்கியனின் அர்த்தசாஸ்திரம் அக்கால இந்தியாவின் அமைப்பு முறைகளையும் பல்வேறு செய்திகளையும் தருவதாக உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை விவரச்சுவடி என்று சொல்லுகிற அளவு விவரங்களைத் தொகுத்துச் சொன்ன பெருமை அக்பரின் அவைப் புலவரான அபுல்பாசலைச் சாரும். அவர் எழுதிய 'அயினி அக்பரி' இந்திய விவரச் சுவடிகளின் முன்னூல். அதுபோலத் தமிழகத்தில் ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பு, குருகுகதாசப் பிள்ளையின் திருநெல்வேலிச் சீமை சரித்திரம் ஆகியவற்றை இவ்வகையில் சேர்க்கலாம். நம் நாட்டில் வந்து தங்கித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டு செய்த கால்டுவெல், வீரமாமுனிவர், போப் ஆகியோர் திரட்டிய வட்டார விவரங்களும் பயனுள்ளவைகளாக அமைந்துள்ளன.

**பழைய கெசட்டியர்கள்**

உலகெங்கும் முறையான கெசட்டியர் பதினேழாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் எழுதித் தொகுக்கப்பட்டது. இந்தியாவில் கெசட்டியர் வெளியீடு ஆங்கிலேயரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தங்கள் ஆட்சியைச் செவ்வனே நடத்திச் செல்ல மாவட்டக் கலெக்டர்கள், உயர்தர சிவில் அதிகாரிகள் ஆகியோருக்கு அவர்கள் நிருவாகம் செய்யும் பகுதியின் விரிவான எல்லா விவரங்களும் தெரிந்திருக்க வேண்டியது மிக அவசியம் என்று உணரப்பட்டது. இந்தியாவில் ஊக்கமிக்க சில அதிகாரிகளும் வேறு சிலரும் வட்டார விவரங்கள் அடங்கிய சில புத்தகங்களை எழுதி வெளியிட்டிருந்த போதிலும், முதன்முதலாக சர் வில்லியம் ஹண்டர் என்பவர்தான் 1815-ல் முறையான வகையில் அவரின் "ஈஸ்ட் இன்டியா கெசட்டியரை" வெளியிட்டார். எட்வர்டு தார்ன்டன் என்பவர் ஒரு கெசட்டியரை 1844-ல் எழுதி வெளியிட்டார். ஹண்டர் மீண்டும் 1869-ல் தொடங்கி 1881 வரை 'இம்பீரியல் கெசட்டியர்' என்ற பெயரில் ஒன்பது தொகுதிகளை வெளியிட்டார். இந்தக் கெசட்டியர்களின் உபயோகத்தை நன்கு உணர்ந்த வைஸ்ராய் லார்டு கர்ஸான் மேலும் இருபத்தாறு தொகுதிகளை இம்பீரியல் கெசட்டியர் வரிசையில் 1907—1909-ல் வெளியிட ஏற்பாடு செய்தார்.

இதனைத் தொடர்ந்து மற்ற மாநிலப் பகுதிகளிலும் கெசட்டியர் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தென்னாட்டில் அன்றைய 'மதராஸ் பிரசிடென்சியின்' இருபத்தொரு 'ஜில்லாக்'களைப் பற்றியும் 1815-ல் விவரச் சுவடிகள் தயாரிக்க முற்பட்டனர். அனுபவமும் ஆர்வமும் கொண்ட சில மாவட்ட சிவில் அதிகாரிகள் தகவல்களைத் திரட்டி "டிஸ்ட்ரிக்ட் மானுவல்" அல்லது "டிஸ்ட்ரிக்ட் கெசட்டியர்" என்ற பெயரால் பல்வேறு மாவட்டங்களுக்கு விவரச் சுவடிகளை எழுதி வெளியிட்டார்கள். அவ்வாறே தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களைப் பற்றியும் ஆந்திர, கன்னட, கேரள மாவட்டங்களைப் பற்றியும் விவரச்சுவடிகள் எழுதப்பட்டன. அப்படி எழுதப்பட்ட கெசட்டியர்கள், சென்ற நூற்றாண்டின் முடிவிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பக் காலத்திலும் சுமார் 70, 80 ஆண்டுகளுக்கு முன்பு எழுதி வெளியிடப்பட்டவையாகும். அப்புத்தகங்கள் அப்போதைய அரசியல், சமுதாயச் சூழ்நிலையில் எழுதப்பட்டிருந்தாலும் அவை ஆட்சியாளர்களுக்கான வெறும் "கையேடு" புத்தகமாக மட்டும் அமையாமல் பல்வேறு உபயோகமான ஆராய்ச்சிக் குறிப்புகளையும் உள்ளடக்கியுள்ளன. தென்னகத்தில் எழுதி வெளியிடப்பட்ட சில மாவட்ட விவரச் சுவடிகள் ஈடு இணையற்றவை என்று கருதப்படுகின்றன. அவற்றின் ஆசிரியர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் நெல்சன், பிரான்சிஸ், ரிச்சர்ட்ஸ், ஹெமிங்வே முதலானோர். இப்புத்தகங்கள் யாவும் இப்போது நடைமுறையிலில்லை. ஒருசில புத்தகங்களே முக்கியமான நூலகங்களில் பார்வைக்குரியனவாக மட்டும் இருக்கின்றன. மேலும் அப்போது எல்லா மாவட்டங்களுக்கும் விவரச் சுவடிகள் தயாரிக்கப்படவில்லை.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்புவரை நிருவாகம் புரியும் அதிகாரிகளின் பணி என்பது முக்கியமாக வரிவசூல் செய்வதும், பொதுவாகச் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துவதும் தான் என்று கருதப்பட்டது.

ஆனால், இன்று மக்கள் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அரசும் நிருவாகமும் துணை நிற்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஏற்பட்டுள்ளது ஒரு பெரும் மாற்றமாகும்.

**புதுக் கெசட்டியர்கள்**

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மாவட்ட விவரச் சுவடிகளைத் திருத்திய முறையில் எல்லா மாநிலங்களிலும் தயாரித்து வெளியிடுவது என்ற திட்டத்தை மத்திய அரசின் கல்வி— விஞ்ஞான — கலாச்சார அமைச்சரகம் கொண்டு வந்தது. இந்தியாவெங்கும் மொத்தம் சுமார் 300 மாவட்ட விவரச் சுவடிகள் வெளியிடத் திட்டமிடப்பட்டது.

அவ்வேற்பாட்டின்படி அகில இந்திய விவரச் சுவடிகளை டெல்லியிலுள்ள மத்திய பதிப்பாசிரியர் தயாரித்து வெளியிடுகிறார். நமது மாநிலத்தில் 1961-ல் அந்தப் பணிக்கான மாநிலப் பதிப்பாசிரியர் அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டுப் பணி தொடங்கப்பட்டது எனினும், இதற்கு முன்பாகவே ஆவணக் காப்பகத்தின் முன்னாள் காப்பாளர் காலஞ் சென்ற டாக்டர் பி.எஸ். பாலிகா அவர்களின் முயற்சியால் சில மாவட்டங்களின் விவரச் சுவடிகள் தயாரிக்கப்பட்டன. புது அமைப்பு ஏற்பட்டதும், அப்பணி தொடர்ந்து, திருந்திய அமைப்பில் விவரச் சுவடிகளுக்கான விவரங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டது

**கெசட்டியரின் பயன்**

இப்புதிய விவரச் சுவடிகள் அரசு அலுவலர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டி ஏடு என்பது உண்மை. ஆனால், அவை அலுவலர்களுக்கு மட்டுமல்லாமல் ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், அறிவியல் வல்லுநர்கள், அரசியல்—சமூக ஊழியர்கள், மற்றும் வட்டார விவரம் அறிய விரும்பும் அனைவருக்கும் ஒரு நல்ல கருவூலமாக அமையக் கூடிய வகையில் இந்தத் திருந்திய புது விவரச் சுவடிகள் அமைக்கப்படுகின்றன. அந்நிய ஆட்சியாளர்களின் கண்ணோட்டத்தில் வரையப்பட்ட பல பகுதிகள் புதிய திருந்திய சூழ்நிலைக்கேற்ப அமைக்கப்படுகின்றன. நமது இந்தியா வெங்கும் மாவட்ட விவரச் சுவடிகளைத் தயாரிக்கும் பணியிலீடுபட்டிருக்கும் அந்தந்த மாநிலப் பதிப்பாசிரியர்களும் ஒரே சீரான அமைப்பு முறையைப் பின்பற்றும் வகையில் சுவடிகளின் கட்டுக்கோப்பு, அதிகாரத் தலைப்பு ஆகியவற்றை மத்திய அமைச்சரகம் நிர்ணயம் செய்துள்ளது.

அவற்றில் மாவட்ட நிலநூல், தாவர உயிரினங்களின் விவரம், தட்ப வெப்பநிலை, தொன்மை. அண்மைக்கால வரலாறு, மக்களின் மொழி, சமுதாயப் பழக்க வழக்கங்கள், விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைச் செல்வம் தொழிற்சாலைகள், வங்கி, வணிகம், போக்குவரத்து வசதிகள், பொருளாதார முன்னேற்றம், பொதுநிருவாகம், ரெவினியூ அமைப்பு, சட்டம், ஒழுங்கு, நீதி பரிபாலனம், மற்ற அரசுத் துறை நடவடிக்கைகள், உள்ளாட்சித் துறை, கல்வி, கலாச்சார வளர்ச்சி, நல்வாழ்வுத்துறை, தொழிலாளர் நலம், பிற்பட்டோர் நலம், அரிசன நலம்,



பொதுவாழ்க்கை, சமூகசேவை சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்கள், இன்ன பிற விவரங்கள் தொகுத்துத் தரப்படுகின்றன.

**தமிழ்நாடு மாநில கெசட்டியர் பிரிவு**

நமது மாநிலத்தில் திருந்திய முறையில் இதுவரை வெளியிடப்பட்ட மாவட்ட கெசட்டியர்களின் எண்ணிக்கை ஆறாகும். அவை முறையே, தஞ்சை, மதுரை, தென் ஆர்க்காடு, கோவை, சேலம் மற்றும் இராமநாதபுர மாவட்டங்களாகும். அவற்றில் இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் அண்மையில் வெளியிடப்பட்டதாகும். நீலகிரி மாவட்ட கெசட்டியர் அச்சில் உள்ளது. ஏனைய மாவட்ட கெசட்டியர்களுக்கான பணி பல்வேறு கட்டங்களில் உள்ளது. அப்படி ஆய்வில் உள்ளவை திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, சென்னை, வடஆர்க்காடு, திருநெல்வேலி, கன்னியாகுமரிமாவட்ட கெசட்டியர்களாகும். தருமபுரி மாவட்ட கெசட்டியரும், மாநில கெசட்டியரும் இனித் தொகுக்கப்பட இருக்கின்றன. இது தவிர ஏற்கனவேவெளியிடப்பட்டு எல்லாப் பிரதிகளும் விற்பனையாகிவிட்ட மாவட்டகெசட்டியர்களும் புதுப்பித்து அண்மைக்கால விவரங்களுடன் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் உள்ள சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பெரிய நகரங்களுக்கு ‘சிட்டி கெசட்டியர்’ என்ற பெயரில் தனிக் கையேடும் தயாரித்து வெளியிடத் திட்டமுள்ளது. அந்நகரங்களின் சிறப்பு அம்சங்கள் தொகுக்கப்பட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் இவை வெளியிடப்படவிருக்கின்றன.

மத்திய கல்வி—கலாச்சார அமைச்சரகம் தேசிய கெசட்டியர் வரிசை, கலாச்சாரத் தொகுதி வரிசை என்ற இரு புதுத் திட்டங்களையும், ஐந்தாவது திட்டத்தில் உருவாக்கி, உள்ளது. இந்த வரிசையில் ஓவியம், சிற்பம், நாட்டியம் கிராமிய நடனம், இசை போன்ற பல்வேறு தலைப்புகளில் விவரங்களைத் தொகுத்துத் தனி நூல்கள் வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தின் தனிச்சிறப்பை எடுத்துச் சொல்லும் வகையில் இந்நூல்கள் அமைக்கப்படும்.

**இராமநாதபுரம் கெசட்டியர் வெளியீடு**

நமது மாநிலத்தில் 1961-க்குப் பிறகு திருந்திய முறையில் வெளியிடப்பட்ட மாவட்ட கெசட்டியர்களில் இராமநாதபுரம் கெசட்டியர் ஆறாவதாகும். இராமநாதபுர மாவட்டம் பழம் பெருமை கொண்ட பாண்டிய நாட்டின் தொன்மையான பகுதிகளில் ஒன்றாகும். இம்மாவட்டம் 1910-ல் தான் தனியான ஒரு மாவட்டமாக உருப்பெற்றது. முன்னாள் இராமநாதபுரம் சேதுபதியின் ஜமீன் பகுதிகளையும், சிவகங்கை ஜமீன் பகுதிகளையும் இணைத்து அத்துடன் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து சில பகுதிகளையும் பிரித்துஎடுத்து ஒரு தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டது. இந்த மாவட்ட கெசட்டியரைத் தொகுக்கப் பல்வேறு நூல்கள் பயனுள்ளதாக அமைந்தபோதிலும் அதில் குறிப்பிடத் தகுந்தவைகள் சில உண்டு.



ஏ.ஜே. ஸ்டூவர்ட் எழுதிய “மானுவல் ஆப் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் (1879)”, டாக்டர் கால்டுவெல் எழுதிய “எ பொலிடிகல் அண்டு ஜெனரல் ஹிஸ்டரி ஆப் திருநெல்வேலி (1881)”, எச். ஆர். பேட் எழுதிய “திருநெல்வேலி கெசட்டியர் (1917)”, ஜே. எச். நெல்சன் எழுதிய “மதுரா டிஸ்டிரிக்ட் மானுவல்—5 பாகம் (1868)”, டபிள்யூ பிரான்சிஸ் எழுதிய “மதுரை டிஸ்டிரிக்ட் கெசட்டியர் (1905)” ஆகியவையாகும். இவை தவிர ராஜாராமாராவ் என்பவர் எழுதிய “ராம்நாட் டிஸ்டிரிக்ட் மானுவல்” என்ற புத்தகமும் இந்தக்கெசட்டியரை உருவாக்கப் பயன்பட்டது.

இப்பொது வெளியிடப்பட்டுள்ள இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் 1061 பக்கங்களைக் கொண்டது. நல்ல ரெக்சின் அட்டையுடன் பைண்டு செய்யப்பட்டுள்ளது. பலபுகைப் படங்கள், மாவட்ட நிலப் படம், மற்றும் அட்டவணைக் குறிப்பு ஆகியவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூபாய் பதினைந்து. பிரதிகள் வேண்டுவோர், மேலாளர், அரசு விற்பனை நிலையம், 166, அண்ணாசாலை, சென்னை-2, என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

**இராமநாதபுரம் கெசட்டியர் வெளியீட்டு விழாவில் முதல்வர்**

இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் சென்ற மார்ச்சுத் திங்கள் 17-ஆம் நாளில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தின் முதல் பிரதியைச் சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்களிடம் முதல்வர் வழங்கி இந்த வெளியீட்டினைத் தொடங்கி வைத்தார்கள். வருவாய்த்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இந்த விழாவில் பங்கேற்றார்கள். தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்களது அறையில் இந்த விழா நடந்தது. இந்த விழாவில் கெசட்டியரை வெளியிட்டபிறகு அங்குக்குழுமியிருந்த பத்திரிகை நிருபர்களிடம் முதல்வர் அவர்கள் கூறியதாவது:

“இதுவரை ஆறு மாவட்ட கெசட்டியர்கள் வெளியிடப்பட்டுள்ளன. தஞ்சை, மதுரை, தென் ஆர்க்காடு, கோவை, சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களைக் குறித்த கெசட்டியர்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டாலும் தற்போது வெளியாகியிருக்கும் இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் போன்று விரிவான அளவில் அவை வெளியிடப்படவில்லை. அவைகளையும் இனி வெளியாகவிருக்கும் மற்ற மாவட்ட கெசட்டியர்களும் இதே அளவு விரிவான முறையில் வெளியிட அரசு உத்தேசித்துள்ளது. நீலகிரி மாவட்ட கெசட்டியர் தற்போது அச்சில் உள்ளது. இந்தக் கெசட்டியர்களைத் தமிழில் வெளியிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மாவட்டத்தின் தொன்மை, அண்மைக் கால வரலாற்றுச் சிறப்புகள், நில அமைப்பு, தொழில்வளம், சமுதாயப் பழக்க வழக்கங்கள், முதலிய பல்வேறு விவரங்களைக் கொண்டதாக இந்தக் கெசட்டியர் அமைக்கப்பட்டுள்ளது, இராமநாதபுரம் கெசட்டியர் நூலின் விலை ரூபாய் 15 தான். எனினும், இதனை அச்சிடவும் விவரங்களைச் சேகரிக்கவும் ஆகியுள்ள செலவைக் கணக்கிட்டால் பிரதிக்கு ரூபாய் 150-க்கு மேல் ஆகின்றது. ஆனால் அனைவரும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டுமென்ற அளவில் இந்நூலின் விலை ரூபாய் 15 என்று போடப்பட்டுள்ளது.”

# உலகில் இரண்டு கிளிகள்

## டி.என். சுகி சுப்பிரமணியன்

### 15 "கனவுகள் வாழ்வதில்லை" "நினைவுகள் சாவதில்லை"

'திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர்' ஆசைகளை ஒருத்தி விதைத்து வைப்பாள்; அறுவடையை இன்னொருத்தி கொண்டுபோவதா?'' என்று இன்னும் குமுறிக்கொண்டுதானிருக்கிறது ரோமியோவின் இதயம்.

அவன் ஒருவன் இதயம் கொதித்தால் என்ன? குமுறினால் என்ன? மணிவாசகன்—நர்மதா இவர்களின் திருமணத்திற்கு வந்திருக்கும் ஓராயிரம் இதயங்களும் அவர்கள் இருவரின் வளமான வாழ்வுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த வண்ணம் மகிழ்ந்திருக்கின்றன. வாழ்த்துகின்ற இதயங்களின் தலைவாசலில் நின்று என்றுமுள்ள பெருமகிழ்ச்சியோடும் எல்லையிலாப் பெருமிதத்தோடும் அனைவரையும் வரவேற்பதும் அவர்களுடன் சேர்ந்து வாழத் துடிக்கின்ற மணமக்களை வாழ்த்துவதுமாக இருக்கிறாள் ராதை.

இந்த வைபவத்தைக் கண்டு களிக்க பாண்டித்துரை உயிருடன் இல்லையே என்ற உணர்வின் நெருடல், உற்ற நண்பர்களின் இதயத்துள் இருந்தது. பாண்டித்துரை உயிரோடு இல்லாவிட்டால் என்ன? அவர் தம் இதயம், அவர் தம் ஆசிகள் அனைத்தும் ராதையின் வடிவத்தில் ஜீவனோடு வாழ்ந்த வண்ணம் இருக்கின்றனவே என்ற பெருமிதம் ஒரு சிலரின் உள்ளங்களில்....

சம்பந்தியைப் போன்ற பொறுப்பும் நர்மதாவுக்குச் சகோதரியைப் போன்று வாஞ்சையும் கொண்டு திருமண நிகழ்ச்சிகளைச் சீரும் சிறப்பும் குன்றாமல் நடத்தி முடித்த ராதையை எல்லோரும் ஏகமனதாகப் பாராட்டிச் செல்கின்றனர்.

செண்பகா மில்லின் சட்ட ஆலோசகன் பதவிக்கான நியமனப் பத்திரத்தை ரோமியோ தன் அன்புப் பரிசாக மணிவாசகனிடம் கொடுத்த அதே நேரத்தில்—

சட்டக் கல்லூரியில் தான் சேருவதற்கான விண்ணப்பத் தாளில் கையெழுத்திட்டு நர்மதாவிடம் தன் சிறப்புப் பரிசாகக் கொடுக்கிறாள் ராதை!

எங்கும் திருமணத்தின் கோலங்கள்; கோலாகலங்கள். திருமண வீட்டின் சந்தடிகள்; சந்தன தாம்பூல நறுமணங்கள்.

மாலை வரவேற்பின்போது—

இசை வெள்ளம் ஒரு பக்கம் வழிந்தோடுகிறது. மற்றொரு பக்கம் இரைச்சல் வெள்ளம் குமிழ் விடுகிறது.

கோயம்புத்தூர் வடிவேலு தாம் வந்திருக்கும் விஷயத்தைப் பற்றிச் சாடைமாடையாகப் பேச ஆரம்பிக்கிறார். அதுவும் யாரிடம்....பாண்டித்துரையின் உயிர்த் தோழர் ஆலை முதலாளி முத்தையாவிடம்!

வரவேற்பில் நடைபெறும் இசைக் கச்சேரியைத் தானும் கேட்கவில்லை; அருகில் இருப்பவர்களையும் கேட்க விடவில்லை!

"ஒரு கல்யாணம் நடந்து முடிவதற்குள் அதே பந்தலில் மற்றொரு கல்யாணம் நிச்சயமாகும் என்று பெரியவர்கள் அனுபவத்தில் சொன்னது உண்மையாகி விட்டது பார்த்தீர்களா முத்தையா!'' என்று பீடிகை போடுகிறார் வடிவேலு.

"உண்மை உண்மை..மிஸ்டர் மணிவாசகனின் திருமணச் சிறப்புகளுக்கு மத்தியில் அவர் தம் நண்பர் ரோமியோவின் திருமணம் நிச்சயமாகியிருப்பதும் சிறப்புக்குரிய சேதிதான்!'' என்கிறார் முத்தையா.

திருமண வீட்டிலும் சரி; இழப்பு வீட்டிலும் சரி அவரவர் அனுபவத்தை அவரவர் நினைத்துக் கொள்ளுவார்கள்.

அவரவர்க்குத் தத்தம் வீட்டுத் திருமணத்தைத் தவிர வேறெந்த நினைவுகளும் வராது போலும்!

"மிஸ்டர் ரோமியோவின் திருமணம் கிடக்கட்டும்'' என்று மேலே பேச ஆரம்பித்த வடிவேலுவைக் கையமர்த்திவிட்டார் முத்தையா. "கிடக்கட்டுமாவது! என் மகளின் திருமணம் உங்களுக்கு அவ்வளவு அலட்சியமாகப் போய்விட்டதோ..இனிமேல் உங்களுடன் எனக்கென்ன பேச்சு?'' என்று கூறியபடியே அந்த இடத்தைவிட்டு எழுந்து நிற்கிறார் முத்தையா.

வடிவேலுவின்பாடு திண்டாட்டமாகிவிடுகிறது!

மணிவாசகனிடம் — கல்யாண மாப்பிள்ளை — மணிவாசகனிடம் பக்குவமாக நேரங் காலமறிந்து விஷயத்தை எடுத்துச் சொல்லக் கூடிய நபராக முத்தையாவைத் தேர்ந்தெடுத்து தேடித்தேடி சேதியை ஆரம்பிக்கப்போனால்— முத்தையாவே முறுக்கிக்கொண்டு போகிறாரே என்று கவலைப்படுகிறார் வடிவேலு. கல்யாணப் பரபரப்புக்கு மத்தியில் ராதையைப் பெண் கேட்டுப் பேச்சைத் துவக்கும் புத்திசாலித்தனமோ திருமணத் தேதியை நிச்சயம் பண்ணக்கூடிய சாமர்த்தியமோ தம் மனைவி ரஞ்சிதத்திற்குக் கிடையாது என்பது ஏற்கனவே அவருக்குத் தெரிந்த விஷயம். ராதையின் திருமணம் பற்றி மணிவாசகனிடம் உரிமையுடன் பேசக்கூடிய ஒரே நபர் ஆலை முதலாளி முத்தையாதான்....அவர் மனம் கோணும்படி தாம் தவறாகப் பேசியிருக்க வேண்டாமே என வடிவேலு காலங் கடந்து வருத்தப்பட்டுக் கொள்கிறார்.

சமய சஞ்சீவி போல் அவர் முன்னால் வந்து நிற்பவன் ரோமியோதான்!

''வாருங்கள் புது மாப்பிள்ளை.. அதிகமாக ஓடியாடி அலட்டிக் கொள்ளக் கூடாது..உங்கள் திருமணத்தின் போது சமயத்தில் கால் கடுக்க நிற்க வேண்டியதிருக்கும்..இப்போது கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்..'' என்று ரோமியோவின் மீது அன்பு வலையை விசிறி எறிகிறார் வடிவேலு.

அந்த வலையும் ரோமியோவின் மேல் விழாமல் கைஎட்டித் தடுக்கிறார் முத்தையா. ''நண்பனின் திருமணம் என்றால் நாலாவித வேலையும் இருக்கும்... நாள் கணக்கில் தூக்கமும் கெடும்.... வயசுப் பிள்ளைகள் வருத்தப்பட்டு முடியுமா....? அல்லது வருத்தப் படத்தான் தோன்றுமா....? நீங்கள் போய் வருகின்ற விருந்தினரைக் கவனியுங்கள் மாப்பிள்ளை'' என்று கூறி ரோமியோவை அப்பால் நகர்த்துகிறார் ஆலை முதலாளி முத்தையா.

முத்தையாவின் அலட்சியத்திற்கும் காரணம் இருக்கிறது. உதகையில் மணிவாசகனை நர்மதாவுடன் சேர்ந்து பார்த்தவுடன் ஒரு கணமும் தாமதிக்காமல் மணிவாசகனின் முறைப்பெண் ராதையைத் தன் மகனுக்குப் பெண் கேட்ட காரியவாதியாயிற்றே இந்த வடிவேலு! மற்றவர்களின் மனத்துடிப்புகளையோ பாதிப்புகளையோ பற்றிச் சற்றும் கவலைப்படாமல் தன் காரியத்திலேயே குறியாக இருக்கும் வடிவேலுவின் வீட்டில் மருமகளாகப் போய் ராதை நிம்மதியாகக் குடும்பம் நடத்த இயலுமா? ராதையைப் போன்ற பரந்த மனம் கொண்ட பெண்ணுக்கு, ராதையைப் போன்ற பெருந்தன்மைமிக்க நல்லவளுக்கு வடிவேலுவைப் போன்ற சுயகாரியப் புலிகளுக்கு மத்தியில் எப்படி நிம்மதி கிடைக்க முடியும்? நிச்சயமாகக் கிடைக்காது என்பதைப் பாண்டித்துரையும் அறிந்து வைத்திருந்தார். அதைப்பற்றித் தம் அருமை நண்பர் முத்தையாவிடமும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார். எனவே, பாண்டித்துரை உயிருடன் இருந்திருந்தால் வடிவேலுவை எப்படி ஒதுக்கி வைத்திருப்பாரோ அந்த அந்த எல்லையிலேயே இப்போதும் நிறுத்தி வைக்க வேண்டுவது தம் கடமை என்று முத்தையா முடிவு கட்டியிருந்தார்!

இரவு விருந்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் சாக்கில் பரபரப்பாக அங்கிருந்து நழுவிவிடுகிறார் முத்தையா. அடுத்து யாரைத் தூதாக அனுப்பலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடும் வடிவேலுவைப் பார்த்துப் பரிதாபப்படவும் அந்தக் கூட்டத்தில் ஆள் இருந்தது. வடிவேலுவின் மீது ஏற்படும் பரிதாபம் என்பதைவிட, ராதையின்மேல் ஏற்பட்டிருக்கும் பாசமே முதன்மையான காரணம் என்றாலும் பொருந்தும். அவர்தான் பசுபதி—டாக்டர் நர்மதாவின் தந்தை—சிங்கப்பூர் செல்வர் பசுபதி!

''வணக்கம்....நான் பசுபதி.. சிங்கப்பூரில் வியாபாரம்'' என்று

## வேடிக்கை விளக்கங்கள்!

**அபத்தம்:**—நம்முடைய சொந்தக் கருத்துக்களுக்கு ஒத்து வராத, பிறரது எண்ணங்கள்.

**சந்நியாசி:**—சொகுசான வாழ்வை மறுத்துக் கொண்டிருக்கும் சொகுசு படைத்த ஒரு நபர்.

**ரசிகர்கள்:**—தங்களது சொந்த ஆவலுக்கு ஆளாகி அவதிப்படுபவர்கள்.

**குளிக்கும் தொட்டி:**—ஆர்கிமிடீஸின் பரிசோதனைக் கூடம். அவரது காலத்தில் இருந்தே விஞ்ஞானத்திற்கு எந்தவிதமான பலனும் இன்றி மனித குலம் பயன்படுத்தி வரும் சாதனம்.

**தாடி:**—கழுத்துப் பட்டிக்கும், 'டை'க்கும் பதிலாகப் பயன்படுத்தப்படுவது.

**குழந்தைப் பருவம்:**—சிறிய சம்பவங்களை மாபெரும் விபத்துக்களாகவும், மாபெரும் விபத்துக்களை சிறிய சம்பவங்களாகவும் மனிதன் கருதும் ஒரு காலம்.

**மகள்:**—அதிகச் செலவு வைக்கும் ஒரு குட்டைப் பாவாடை.

**நாய்:**—சிந்திக்கும் மனிதனின் நண்பன்; அது சிந்திப்பதை வெளியுலகிற்கு அறிவிக்காத பிராணி.

**தங்கம்:**—மக்களுடன் எளிதில் கலந்து, கலந்தபின் அவர்களைச் சிதைவடையச் செய்யும் ஓர் உலோகம்.

**வாழ்வின் அற்ப விஷயங்கள்:**—தொட்டியிலிருந்து சுடுகாடு வரை நிகழ்பவை.

**வாழ்க்கை:**—வெளி மாணவனாக இருந்து பயில முடியாததொரு பள்ளிக்கூடம்.

**அண்டை வீட்டுக்காரன்:**—உங்களைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பதைவிட அதிகமாக அறிந்துள்ளவன்.

**உறவினர்கள்:**—உங்கள் இன்பத்தை நீங்கள் அனுபவிக்க அனுமதிக்காத கூட்டத்தினர்.

**வதந்தி:**—ஒலியின் வேகத்தில் செல்லும் செய்தி.

**மருமகன்:**—தனக்கு எவ்வளவு குறைபாடுகள் உள்ளன என்பதைத் திருமணம் முடியும்வரை அறிந்திராத ஒரு மனிதன்.

**புத்திக் கூர்மை:**—பிறர் அனைவருக்கும் இல்லாத, உங்களுக்கு மட்டுமே அபரிமிதமாக உள்ள ஒரு தன்மை.

(சோவியத் நாட்டிலிருந்து வெளியாகும் "குரோகடைல்" என்ற நகைச்சுவை இதழில் வெளியாகிய வேடிக்கை விளக்கங்கள்.)

தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதற்குள் அவர் கரங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு நெடுநாள் பழகியவர்போல் வடிவேலு பேசத் தொடங்குகிறார்.

''அடேடே .... சிங்கப்பூர் சீமான் மிஸ்டர் பசுபதி! நர்மதாவின் - மன்னிக்கவும் டாக்டர் நர்மதாவின் தந்தை .... உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன் .... ஒரு விஷயம் தெரியுமோ உங்களுக்கு....?'' என்று அடிக்குரலில் கேட்டவர் பசுபதியைத் தனியே அழைத்துப் போகிறார். கச்சேரி மேடையின் பின்புறம் காற்றோட்டமாக வந்து நிற்கின்றனர் இருவரும்.

''உங்கள் மகளுக்கும் மணிவாசகனுக்கும் உள்ள காதலை உரிய நேரத்தில் பாண்டித்துரைக்குத் தெரிவித்ததே நீங்கள்தான் மிஸ்டர் வடிவேலு..... அதைத்தானே சொல்லப் போகிறீர்கள்?'' என எதிர்க் கேள்வி கேட்கிறார் பசுபதி.

''ஆமாம்....நல்ல காரியங்கள் தாமாகவே நடக்கும். அது நம்மால் கொஞ்சம் விரைவாக நடந்தால் அந்த விரைவில் நமக்குப் புண்ணியந்தானே?'' என்று சிரித்துப் பேசுகிறார் வடிவேலு. 'தம் மகளை மணந்தவன்' என்ற உரிமையுடன் பசுபதி - பணச் செழுமையுள்ள பசுபதி - மணிவாசகனிடம் என்ன வேண்டுமானாலும் பேசலாம் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற நினைவு வடிவேலுவின் நெஞ்சில் அதுவரையில் தோன்றாமல் இருந்தது ஆச்சரியந்தான்! கர்வம் பிடித்த முத்தையாவைத் தூது போகச் சொன்னதற்குப் பதில் கனியக் கனியப் பேசும் பசுபதியையே முதலில் பார்த்துத் தம் எண்ணத்தைத் தெரிவித்திருக்கலாமே என்று வடிவேலு வருந்துகிறார்!

''மிஸ்டர் வடிவேலு! மணிவாசகன் திருமணம் இவ்வளவு விரைவாக நடந்து முடிவதற்கு நீங்கள்தான் காரணம் என்பதால்—'' என்று பசுபதி கூறுவதற்குள் வடிவேலு குறுக்கிட்டு, ''நானும் ஒரு காரணம் என்பதால்'' எனத் திருத்துகிறார். பசுபதி மெல்லச் சிரித்துக் கொண்டே, ''சரி, நீங்களும் ஒரு காரணம் என்பதால், மணிவாசகனுக்கு உங்களிடம் தனி மதிப்பு ஏற்படும்'' என்கிறார். ''ஏற்பட்டிருக்கும்'' என்று அழுத்தமாகச் சிரிக்கிறார் வடிவேலு.

''ஏற்பட்டுவிட்டது என்றே முடிவு செய்துகொள்வோம். இதனால் உங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை — உங்கள் மகனின் திருமணம். அதுதானே?''

''அதேதான்....... அமைதியும் அடக்கமும் நிறைந்த ராதை என் மருமகளாக வரவேண்டும். அந்தப் பாக்கியம் என் குடும்பத்திற்குக் கிடைக்க வேண்டும்!'' என்று பசுபதியின் முன் கரங்குவித்து நிற்கிறார் வடிவேலு.

''கிடைக்கும்...! மணிவாசகன் மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் போல் பத்துமடங்கு என் இளைய மகள் ராதையின்மேல் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்''

''உங்கள் மேலும் நான் நம்பிக்கை வைத்துவிட்டேன். அதனால்தான் உங்களிடம் எல்லா விவரங்களையும் விரிவாகப் பேசத் தனிமையில் வந்திருக்கிறேன்!''

''மிஸ்டர் வடிவேலு.... கல்யாண காரியம் நாலுபேர் கூடிப்



பேச வேண்டிய விஷயம். காதலர் சந்திப்புக்குத்தான் தனிமை தேவை... புரிகிறதா?''

தனிமையில் இருவரும் சிரிக்கிறார்கள்.

''புரிகிறது...!''

மீண்டும் சிரிப்பு.

பசுபதி, என்ன கேட்டாலும் மறுபேச்சுக்கு இடமில்லாமல் பணிந்து பணிந்து தலையாட்டுகிற வடிவேலுவைப் பார்த்ததும் முத்தையாவுக்குச் சிரிப்புத்தான் வருகிறது... வடிவேலுவைச் சீண்டி மகிழ அவருக்கும் விருப்பந்தான். ஆனால் கல்யாணவீட்டில் அதற்கான நேரமில்லையே என்று அரை குறை மனத்துடன், ''சம்பந்தி...! சாப்பிட வரலாம்'' என்று பசுபதியை நோக்கிக் குரல் கொடுத்து விட்டு அப்பால் நகர்ந்து போகிறார்.

''சம்பந்தி... நாம் இருவரும் இன்றுசேர்ந்து சாப்பிடவேண்டும். நீங்கள் மறுக்கக் கூடாது'' என்று பிடிவாதம் செய்கிறார் வடிவேலு. அவருடைய பிடிவாதத்தினூடே பித்துக் குளித்தனமும் இழையோடுகிறது! பசுபதிக்கு அவரைப் பார்த்துப் பரிதாபம் அதிகரிக்கிறது!

''சாப்பிடுவோம் சம்பந்தி... சாப்பாட்டுக்குப் பிறகு ராதையின் சம்மதத்தையும் கேட்டுவிடுவோம்'' என்கிறார் பசுபதி.

''சம்மதம் தெரிந்ததுதானே... உங்கள் மகள் ராதையைக் கூப்பிடுங்கள். நானும் முறைப்படி கேட்டுவிடுகிறேன்!'' என்று அவசரப்பட்டவரைக் கையமர்த்தி, ''நேரங்காலம் வரட்டும். நானே கேட்கிறேன். முதலில் சாப்பாடு... அப்புறந்தான் சம்பந்தம்!'' என்று கூறிக் கல்யாண மண்டபத்திற்குள் அழைத்து வருகிறார் பசுபதி.

மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் குளிர்பானம் கொடுத்து விட்டு அங்கிருந்த பரிசுப் பொருள் பொட்டலங்களை அப்புறப்படுத்தி எடுத்துச் செல்கிறாள் ராதை. மானின் துள்ளல், மயிலின் அழகு, மழை மேகத்தின் கருமை எல்லாம் ஓர் பெண்ணுருவாய் வந்ததைப் போன்றல்லவா இந்த ராதை கல்யாண மண்டபத்தையே கலகலப்பாக்கிக் கொண்டிருக்கிறாள்...!

வடிவேலுவும் பசுபதியும் நிற்குமிடத்தைத் தாண்டும்போது ராதை கனிவு நிறைந்த பார்வையுடன் பசுபதியிடம், ''இரவு நேரம் அரிசிச்சோறு உங்களுக்கு ஒத்துக் கொள்ளாது என்பது தெரியும் சித்தப்பா.... உங்களுக்காகக் கோதுமைச் சப்பாத்தி தயாராகியிருக்கிறது'' என்று கூறிவிட்டுப் புறப்படுகிறாள்.

வெளியூர் விருந்தினரெல்லாம் விடைபெற்றுப் போய்விட்டனர். பாண்டித்துரையின் இல்லத்தில் பழைய அமைதியும் புதிய பொலிவும் குடிகொள்ளத் தொடங்கிய நேரம். பசுபதிக்குத் தன்மகளின் திருமண வேலைகளை முடித்த அலுப்பு— முத்தையாவுக்கோ தன் மகளின் திருமண வேலைகளை முடிக்க வேண்டிய பரபரப்பு... இருவருக்குமிடையே, வடிவேலுவுக்குத் தம் மகனின் திருமணம் பற்றிய பேச்சை எடுக்கவில்லையே என்ற அங்கலாய்ப்பு.

பசுபதி, கோயம்புத்தூர் வடிவேலுவின் குடும்ப நிலையை எண்ணிப் பார்க்கிறார். ஒரே பிள்ளை. ஏகப்பட்ட சொத்துக்கள். தரமான படிப்பு. தகுதிக்கு ஏற்ற வேலை... கண்ணுக்கு அழகான பையன். கண்ணியம் நிறைந்த தோற்றம். ராதையின் நல்ல இதயத்திற்கு இது ஏற்ற இடந்தான் என அவர் முடிவு செய்து விட்டார். மணிவாசகனும் பசுபதியின் முடிவு சரியே என ஆமோதித்து விட்டார். நர்மதா மட்டும், ''எதற்கும் ராதையின் சம்மதத்தைக் கேட்டுவிடலாமே'' என்று தயங்குகிறார்.

பெண்ணின் மனத்தை மற்றொரு பெண்தானே அனுமானிக்க முடியும்? சியாமளாவும் ராதையின் சம்மதம் தெரிந்துகொள்வதே நியாயம் என வாதாடுகிறாள்.

பாண்டித்துரையின் வீட்டுக் கூடம்.

பாண்டித்துரையின் நெடிய கம்பீரமான உருவம். புகைப்படமாய் இலங்கி பொலிவு தந்து கொண்டிருக்கிறது.

ராதையின் சம்மதத்திற்காக அனைவரும் காத்துக்கொண்டிருக்கும் நேரம்.

குத்துவிளக்கின் முத்துச் சுடராக வந்து நிற்கிறாள் ராதை. அவள் நடையில் அமைதி; ஆனால் ஒவ்வொரு அடியையும் உறுதியுடன்தான் எடுத்து வைக்கிறாள் என்பதை மற்றவர்களின் உள்ளங்களில் பதிய வைப்பதைப் போன்ற அழுத்தம்.

ராதை பேசுகிறாள்.

''உள்ளத்தால் ஒரு வாழ்க்கை உலகத்துக்காக ஒரு வாழ்க்கை என்று என்னால் இரட்டை வேடம் போட முடியாது. என்னைப் பொறுத்தவரை என் உடல் இந்த வீட்டை விட்டு வெளியே போகாது. உள்ளம் இன்னொருவருடன் ஒன்ற முடியாது. என்றென்றும் நான் பாண்டித்துரையின் மகளாக, நர்மதாவின் தங்கையாக, மணிவாசகனின் மாமன் மகளாக—குமாரி ராதாவாகவே—வாழ்ந்து விடுவது என்று தீர்மானித்துவிட்டேன்.... என்னை என் விருப்பப்படியே வாழ விடுங்கள் என்று உங்களைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.... என்னை மன்னித்து விடுங்கள்!''

எரிமலையைக் கூட இரண்டு விரல்களால் அணைத்துவிடக் கூடிய சாந்தம் உள்ள ராதையின்



பேச்சில் இவ்வளவு வேகம் இதற்கு முன் வந்ததில்லை. அங்கிருந்த அனைவர் நெஞ்சிலும் ராதையின் வார்த்தைகள் எரியீட்டியாகப் பாய்ந்து தைக்கின்றன.

ராதைக்கு மறுமொழி கூறும் மனஉறுதி மணிவாசகன் ஒருவனுக்குத்தான் இருக்கின்றது.

''ராதை... உன் உணர்ச்சிகள் எனக்குப் புரிகின்றன... உன் உணர்ச்சிகளை நான் மதிக்கிறேன். இங்கிருக்கும் மற்றவர்களைவிட நான்தான் உன்னுடைய விரக்திக்கு நேரடிப் பொறுப்பாளன்'' என்கிறான்.

''இது விரக்தியல்ல அத்தான். கன்னிப் பெண் ஒருத்தியின் வைராக்கியம்''

''கன்னிப் பருவத்துக் கனவுகள் காலவோட்டத்தில் நிலைக்க முடியாது ராதா...''

''என் வாழ்க்கை முழுவதுமே கன்னிப் பருவம்தான் என்று நான் தீர்மானித்துக் கொண்டு விட்டேன் அத்தான். என் காலம் முடியும்போதுகூட, கனவுகள் கலையாமல்தான் என் வாழ்வு முடியும்!''

''கனவுகள் வாழ்வதில்லை ராதா...''

''நினைவுகள் சாவதில்லை!''

—இந்த வார்த்தைகளைக் கூறிய பிறகு ஒரு கணமும் நிற்காமல் அறையினுள் ஓடி மறைகிறாள் ராதை. ஒவ்வொருவர் இதயத்தினுள்ளும் ஓராயிரம் மின்னல் கோளங்களை ஏற்படுத்திவிட்டன. 'நினைவுகள் சாவதில்லை!' என்று ராதை கூறிய சொற்கள்!

''ராதையின் எதிர்காலம்?'' என்று அக்கறையுடன் வினவுகிறாள் சியாமளா.

'அவள் சட்டம் படிக்கப் போகிறாள். என்னிடமே ஜூனியராக இருக்கப் போகிறாள்'' என்கிறான் மணிவாசகன்.

மணிவாசகனே இப்படிக் கூறியதும் நர்மதாவுக்குத் திகைப்பு. மனமாரத்தான் மணிவாசகன் இதைக் கூறுகிறானா அல்லது மற்றவர்களின் மன ஆறுதலுக்காகக் கூறுகிறானா என்பது நர்மதாவுக்குப் புரியவில்லை.

**முதல் பாகம் முடிவுற்றது.**

தமிழ்நாட்டில் மூன்று மாவட்டங்களில் கால்நடை வளர்ச்சி முனைப்புத் திட்டம் செயல்படவிருக்கிறது. இத்திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் 2,600 கோழிப் பண்ணைகள் அமைக்கப்படும். 2,60,000 வீரியக் கோழிகள் வழங்கப்படும்.

இது போன்றதொரு திட்டம் திருச்சி மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 1,700 கோழிப் பண்ணைகள் மூலம் 1,70,000 வீரியக் கோழிகள் வளர்க்கப்படும். இதுவரை திருச்சியில் 843 கோழிப்பண்ணைகள் முழுமையாகத் தொடங்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தில் இதுவரை ரூபாய் 24·40 இலட்சம் இந்திய மாநில வங்கி கடனைக் கொடுத்துள்ளது.

தஞ்சையில் இதுவரை 689 கோழிப்பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை தஞ்சை மாவட்டத்திற்கு ரூபாய் 6·5 இலட்சம் இந்திய மாநில வங்கி கடனை வழங்கியுள்ளது.

தஞ்சையிலும், திருச்சியிலும் ஆரம்பிக்கப் பட்டுள்ள இத்திட்டத்தில் 4,30,000 கோழிகள் வளர்க்கப்படும். இந்திய மாநில வங்கி இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து ரூபாய் 96·75 இலட்சம் கடனை வழங்கும்.

இந்தத் திட்டத்திற்காகத் திருச்சி மாவட்டத்திற்கு ரூபாய் 38·25 இலட்சமும், தஞ்சை மாவட்டத்திற்கு ரூபாய் 58·50 இலட்சமும், ஆக மொத்தம் ரூபாய் 96·75 இலட்ச ரூபாய் கடன் அளிக்கப்படும்.




### எந்தெந்தக் கிராமங்களில் உள்ளவர்களுக்குக் கடன் உதவி?

1. கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு 5 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள விவசாயிகளுக்குக் கடன் வசதி அளிக்கப்படும்.

2. ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்குமேயானால் 8 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளவர்களுக்குக் கடன் வசதி அளிக்கப்படும்.

இவ்விதம் அமைக்கப்பட்ட வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் 100 உயர் ரகக் கோழிகள் கொண்ட 100 கோழிப் பண்ணைகள் நிறுவ வேண்டும். 200 அல்லது 300 கோழிகள் கொண்ட பண்ணைகளும் நிறுவப்படும். ஆனால், ஆரம்பத்தில் ஒரு கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பகுதியில் 10,000 கோழிகள் வரைதான் இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும்.

ஏற்கெனவே கோழி வளர்ப்பில் அனுபவம் உள்ளவர்கள் 300-க்கும் மேற்பட்ட அளவில் கோழிகள் வளர்க்க விரும்பினால் பிரத்தியேகமாகப் புதுத்திட்டமாக அனுப்பினால் பரிசீலித்து வழங்கப்படலாம்.

போக்கு வரத்து வசதியுள்ள கிராமங்களுக்கும் சாலை ஓரமுள்ள கிராமங்களுக்கும் கொடுக்கப்படும்.

ஒரே கிராமத்தில் குறைந்தது 5 விண்ணப்பதாரர்களாவது இருத்தல் அவசியம்.

### கடன் உதவி யாருக்கு?

வாழ்க்கை நடத்துவதற்கும், போதுமான வசதியற்றவர்களுக்கும், போதிய வருவாயில்லாதவர்களுக்கும் கடன் கொடுக்கப்படும்.

பொழுது போக்காகக் கோழி வளர்ப்பில் ஈடுபட்டவர்களுக்குக் கடன் வழங்கப்பட மாட்டாது.

### கடன் வழங்கும் முறை

1. கோழி வீடு கட்டுவதற்கும், தீனி, தண்ணீர்ப் பாத்திரங்கள் முதலிய உபகரணங்களும், மருந்துகளும் வாங்குவதற்கு ரொக்கப் பணம் விண்ணப்ப தாரருக்கு நேரிடையாக வழங்கப்படும்.

2. கோழிக் குஞ்சுகளும் தீனியும் வாங்குவதற்குத் தேவைப்படும் தொகை டிராப்ட் மூலம் சம்பந்தப்பட்ட கம்பெனிக்கு வங்கியிலிருந்து நேராக அனுப்பப்படும்.

3. உபகரணங்கள் மருந்து ஆகியவற்றைச் சம்பந்தப்பட்ட கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கி வழங்குவதாயின், வங்கி அதற்கான தொகையைச் சங்கத்திற்கு ஈடு செய்யும்.

### வங்கியிலிருந்து பணம் வழங்கப்படும் முறை

கட்டடம் தரை மட்டம் வந்தவுடன் ரூபாய் 375, முதல் தவணையாக வழங்கப்படும்.

கட்டடம் கூரை மட்டத்திற்கு வந்ததும் இரண்டாம் தவணை வழங்கப்படும். கட்டடத்திற்கான மொத்தத் தொகையில் முதல் தவணையில் வழங்கியது போக மீதிப் பணம் முழுவதும் தீனி, தண்ணீர்ப் பாத்திரங்கள் வாங்குவதற்கான முழுத்தொகையையும் சேர்த்து வழங்கப்படும்.

### குஞ்சுத் தீவனத்திற்கான பணம் வழங்குதல்

கட்டடம் ஒழுங்கான முறையில் கட்டி முடித்தவுடன் வங்கி மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தீனி விற்பனை நிலையத்திற்கு 2 வாரங்களுக்குத் தேவையான தீனி அதாவது 110 குஞ்சுகளுக்குச் சுமார் 60 கிலோ தீனிக்கான தேவைப்பட்டியல் வங்கி மூலம் அனுப்பப்படும். தீனி கிடைத்தவுடன், அதற்கான பணம் டிராப்ட் மூலம் வங்கியிலிருந்து விற்பனை நிலையத்திற்கு நேரிடையாக அனுப்பப்படும்.

தீனி ஒவ்வொரு முறையும் 2 வாரங்களுக்குப் போதுமான அளவே வழங்கப்படும். ஏனென்றால், அதற்குமேல் தீனி இருப்பில் இருந்தால் தீனியில் வைட்டமின் போன்ற சத்துக்கள் குறைவதுடன் தீனி கெட்டுப் போவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

### குஞ்சுகளுக்கான பணம் வழங்குதல் :—

தண்ணீர், தீனிப் பாத்திரங்கள், 15 நாட்களுக்கான தீனி தயாரானவுடன் வங்கி மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குஞ்சு விற்பனை நிறுவனத்திற்குக் குஞ்சுகளுக்கு ஆன தேவைப்பட்டியல் அனுப்பப்படும். 100 கோழிகளை வளர்க்கும் பண்ணையாளர்களுக்கு 110 குஞ்சுகளும், 200 கோழிகளை வளர்ப்பவர்களுக்கு 220 குஞ்சுகளும், 300 கோழிகளை வளர்ப்பவர்களுக்கு 330 கோழிக் குஞ்சுகளும் வழங்கப்படும்.

சாதாரணமாக நான்கு வாரக் குஞ்சுகளே வழங்கப்படும். குஞ்சுகள் வந்து சேர்ந்ததும் வங்கி அதற்கான தொகையை டிராப்ட் மூலம் குஞ்சு விற்பனை நிறுவனத்திற்கு அனுப்பிவிடும்.

### வட்டி விகிதம்

1. நகர்ப்புறங்களில் ஆண்டிற்கு 2,000 ரூபாய்க்கும், கிராமப்புறங்களில் 1,200 ரூபாய்க்கும் அதிகம் வருவாய் பெறுதவர்களுக்கு 4 சதவிகிதம் வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். ஏழை மக்களுக்கு இது ஓர் மகத்தான நல்ல வாய்ப்பு என்பதில் ஐயமில்லை. ஏழைகள் ஏற்றம் பெறச் செய்யும் வங்கி வாழ்த்துக்குரியது.

2. மேற் குறிப்பிட்ட வகையினர் தவிர, ஏனையோருக்கு 10 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படும்.

200 அல்லது 300 கோழிகள் வளர்க்கக் கடன் பெறுபவர்கள் அனைவருக்கும் 10 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படும்.

### பிணையம் (Security)

1. 3,000 ரூபாய்க்குக் குறைவாகக் கடன் பெறுபவர்கள், அதாவது 100 கோழிகள் வளர்ப்பவர்கள்.

அ. கோழி வீடும், கோழிகளும் வங்கி பெயரிலேயே இருக்க வேண்டும்.

ஆ. கடன் பெறுபவர்கள் மூவர் ஒருவருக் கொருவர் நபர் ஜாமீன் கொடுக்க வேண்டும்.

இ. 3,000 ரூபாய்க்கு மேல் கடன் வாங்குபவர்கள், நிலம் அல்லது வீடு அடமானம் எழுதிப் பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

### விஞ்ஞான முறையில் கோழி வளர்ப்பு :

மக்கள் உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும், புரதச்சத்து வைட்டமின்கள், தாதுப் பொருள்கள் மிக அவசியம். இவை கோழி இறைச்சியிலும், முட்டையிலும் நிறைந்து காணப்படுகின்றன. கலப்படம் செய்ய முடியாத சிறந்த உணவுப்பொருளாகிய முட்டையை மும்முரக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்தல் இந்தத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்.

இத்திட்டத்தில் வீரியக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த வீரியக் கோழிகள் வெள்ளை லெக்கார்ன், சுத்த இனத்தை விட அதிக முட்டைகள் இடுகின்றன.

சாதாரணமாகக் கோழிகள் வளர்க்க மூன்று முறைகள் கையாளப்படுகின்றன. 1. திறந்த வெளி வளர்ப்பு முறை. 2. தீவிர வளர்ப்பு ஆழ்கூள வீடு, 3. அடுக்குக் கூண்டுமுறை.

மும்முரக் கோழி வளர்ப்புத் திட்டத்தில் ஆழ்கூள வீடு மூலம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த ஆழ்கூள வீடு கோழி வளர்ப்பு முறையில் ஏற்படும் நன்மைகள் வருமாறு:

1. சிறிய இடத்தில் நிறையக் கோழிகளை வளர்க்கலாம்.

2. தினசரி சுத்தம் செய்ய வேண்டியதில்லை.

3. குறைந்த ஆட்களை வைத்து அதிகமான கோழிகளை வளர்க்கலாம்.

4. தரை மெத்தென்று இருப்பதால் முட்டைகள் உடையாது.

5. விரோதிகளிடமிருந்து கோழிகளுக்கு அதிகமான பாதுகாப்பு கிடைக்கிறது.

6. குளிர் காலத்திலும், வெயில் காலத்திலும் கூளத்தில் கோழிகள் சுகமாக இருக்கின்றன.

7. கோழிகள் வெளியே போகாததால் நோய் பரவிட அதிக வாய்ப்பு இல்லை.

8. கோழிகளுக்குத் தேவைப்படும் வைட்டமின் பி2, பி12 சத்துக்கள்.

9. கூளம் நாளடைவில் சிறந்த உரமாக மாறுகிறது.

### டீப்லிட்டர் வீடு (ஆழ்கூள வீடு) அமைத்தல் :

15' 20' அளவுள்ள ஆழ்கூள வீடு 100 கோழிகளுக்குப் போதுமானது. நான்கு பக்கங்களிலும் 1½ முதல் 2 அடி உயரமுள்ள சுவர். அதன்மேல் 3 அடி உயரம், கம்பி வலைத் தட்டிகள் அமைத்துக்கீற்றுக்கூரையும், கம்பி வலைக் கதவும் போட்டு விட்டால் செங்கல்லினால் சுவர் கட்டுவது நல்லது. பூமிக்குள் 1½' முதல் 2' அடி கூடைகால் சுவரின் மேல் (20 கேஜ்) ½ அங்குல வலைக்கம்பி 3 அடி உயரம் வரை இருக்க வேண்டும். மழைத் தண்ணீர் உள்ளே போகாதிருக்கக் கூரையானது 2½ அடி வெளியே நீட்டி இருக்க வேண்டும். ஒரு பக்கத்தில் 5 அடி உயரம், 2 அடி அகலமுள்ள கம்பி வலைக் கதவு அமைக்க வேண்டும். கோழி வீட்டின் தரை சிமென்ட் பூசப்பட்டிருந்தால் நலம். சுற்றுப்

### ஒரு வேண்டுகோள் !

'தமிழரசு' இதழுக்குக் கவிதை, கதை, கட்டுரை எழுதுவோர் அருள்கூர்ந்து படி எடுத்துக் கொண்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். பிரசுரம் ஆகாதவற்றை எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

புறத்தை விடக் கோழி வீட்டின் தரை அரைஅடி உயரமாக இருக்க வேண்டும். அதன் மீது உமி, மரத்தூள், கடலைத்தோல் மரச்சீவல், கரும்புச் சக்கை இவைகளில் ஏதாவது ஒன்றை 4 அங்குலம் முதல் 9 அங்குலம் வரை போட்டு அதில் கோழி களை விட வேண்டும்.

தீனிக்குத் தானியங்கும் தீனித் தொட்டிகள் 20 கோழிகளுக்கு ஒன்று வீதம் வைக்க வேண்டும்.

### கோழிகளுக்குக் கலப்புத் தீனி

கோழிகள் நன்கு வளர்வதற் கும், அதிக முட்டையிடுவதற்கும் வியாதிகள் அதிகமாகாமல் இருப்பதற்கும், சத்துள்ள தீனி அவசியம். கோழி ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 100 முதல் 125 கிராம் தீனி போதுமானது. கோழிகளுக்குக் கொடுக்க வேண் டிய சமதீவனம் கோழிகளுக்கு முன்பாக எப்பொழுதும் வைத் திருக்க வேண்டும். இத்துடன் ஒரு கோழிக்கு 45 முதல் 50 கிராம் வரை பச்சைத் தீவனம் மிகவும் அவசியம். வீடுகளில் காய்கறிகளை நறுக்கும் பொழுது வீணுன பாகங்களைச் சிறு துண்டு களாக நறுக்கிக் கோழிகளுக்குப் போடலாம். பச்சைக் கீரை வகைகள், தண்டுகள், முள்ளங்கி, கோஸ் இலைகள் முதலிய வைகளை நறுக்கிப் போடலாம். இதனல் தனிச்செலவு குறை வதுடன் கோழிகளுக்கு நல்ல உணவாகவும் இருக்கிறது. கோழி களும், திடகாத்திரமாகஇருக்கும் வீட்டில் சாதம் வடித்த தண்ணீர் பருகவைப்பது நல்லது.

சுத்தமான தண்ணீர் எந்த நேரத்திலும் கோழிகளுக்குக் கிடைக்கும்படி செய்து தர வேண்டும். கிளிஞ்சல் பொடி கோழி வீட்டில் தனித் தட்டில் வைத்துக் கோழிகள் வேண்டும் போது சாப்பிடச் செய்ய வேண்டும். இதன் மூலம் முட்டையில் ஓடு நன்ருக இருக்கும். கோழிகள் நன்ருக வளரும். கோழிக்கு உகந்த பச்சைத் தீவனங்களை எளிதாகப் பயிரிட்டுக் கோழி களுக்குக் கொடுத்தால் முட்டை உற்பத்தி பெருகும். பச்சைத் தீவனத்திற்காக நாம் அதிகமாகச் செலவு செய்தால், கோழிப் பண்ணை லாபகரமாக இருக்காது.

எனவே எளிதாகக் கிடைக் கக்கூடியதும், சிக்கனமாகப் பயி ரிடக்கூடியதும் ஆன கீரை வகை களாவன :— குதிரை மசால், சணப்பை, அகத்தி, சித்தகத்தி, கொடிப்பசலை, ஆகியவைகளைக் பயன்படுத்தலாம். இவை தவிர முள்ளங்கி இலை, முட்டைக்கோசு இலை ஆகியவைகளையும் பச்சை தீவனமாக வழங்கலாம்.

### கோழிகளை வியாதிகளிலிருந்து காக்க....

கோழிகளை வெகுவாகப் பாதிக் கும் தொத்து நோய்கள் ராணிக் கேட் (கழிச்சல் நோய்), கோழி அம்மை. இந்த வியாதிகளை வந்த பின் தடுக்க முடியாததால், தடுப்பு ஊசி போடுதல் அவசியம். தடுப்பு ஊசிகள் போட வேண் டிய பருவம்—

1. ராணிக்கேட் எப். 1 மருந்து, குஞ்சுகள் பிறந்த 48 மணி நேரத்திற்குள்.

2. புரு அம்மை— குஞ்சு பிறந்த 7-வது நாள்

3. கோழி அம்மை—6-வது வாரத்தில் அல்லது 7-வது வாரத் தில்.

4. ராணிக்கேட் கே. மருந்து—10 வாரத்தில் அல்லது 12-வது வாரத்தில் கோழிகள் முட்டையிட ஆரம்பித்த பின் தடுப்பு ஊசி போடுவது கூடாது.

### தடுப்பு மருந்துகள்

1. நாக்குப்பூச்சி— பிப்ரசின் அடிபேட் மாத்திரை — ஒரு கோழிக்கு ஒரு மாத்திரை (0.5 கிராம்).

2. நாடாப்புழு—பாக்குத்தூள் ½ கிராம் அல்லது டைசெண்டால் ½ மாத்திரை. ஒரு பெரிய கோழிக்கு.

3. பேன் உண்ணி: கோழிகள் குறைவாக இருந்தால், வசம்புத் தூளைத் தண்ணீரில் முக்கி எடுக்க லாம். கோழிகள் தங்கும் கட்டைகளில் 12' நீளத்திற்கு 1 அவுன்ஸ் என்ற விகிதத்தில் 40 சத விகிதம் நிக்கோடின் சல் பேட் தடவ வேண்டும். 10 நாட்கள் கழித்துப் பின்னர் மீண் டும் ஒரு முறை இதே போல் செய்ய வேண்டும்.

0.5 சதவிகிதம் மலதியான் கலவையில் கோழிகளைத் தலைப் பாகம் தவிர மூழ்கச் செய்தல் வேண்டும்.

1 சதவிகிதம் மலதியான் கோழி வீட்டில் தெளிப்பான் மூலம் தெளித்துக் கோழி வீடு களிலுள்ள பேன்களைப் போக்க லாம்.

கூடுகளை 2 வாரங்கள் கோழி கள் இன்றிச் சுத்தமாக வைத் திருந்தால் பேன்கள் இறந்து விடுகின்றன.

4. இரத்தக் கழிச்சல் :—இவ் வியாதி குஞ்சுகளுக்கு ஏற்படக் கூடியது. சல்பாமிசதின் 16 சத விகிதம் உள்ள மருந்து 60 மில்லி லிட்டர் மருந்தை ஒரு காலன் குடி தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும். பைபுரான் ½ மாத் திரையை ஒரு காலன் குடி தண் ணீரில் கலந்து கொடுக்க வேண் டும்.

### கோழிகளின் மேல் அலகுகள் வெட்டுதல்

கோழிகள் ஒன்றை ஒன்று கொத்திச் சேதப் படுத்துவதைத் தவிர்க்கவும், தீனியை வீணுக்கா

## கண்ட மட்டும் - கண்ட மட்டும்

சேது சமஸ்தானத்தை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் செந்தமிழில் மிகவும் ஈடுபட்டவர்கள் ; பல புலவர்களைத் தம் அவைக்களத்தே வைத்து அவர்தம் அருந்தமிழ்க் கவிதைகளைச் சுவைத்து மகிழ்ந்தனர். பொன்னும் பொருளும் புலவர்களுக்கு வழங்கி அவர்களை ஆதரித்தனர்.

அங்கிருந்த புலவர்களில் இருவர் சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர் எனப் பெயர் பெற்றிருந்தனர். இவர்களிடையே சொற்போர் அடிக்கடி நிகழ்வதுண்டு ; ஒருமுறை சர்க்கரைப் புலவர், "என் கவிதைகள் சர்க்கரை போல இனிப்பன ; சவ்வா தோ கசப்பது" என்ருர். இதுகேட்ட சவ்வாதுப் புலவர் ஒரு கணமும் தயங்காது "சர்க்கரை கண்ட மட்டும் சவ்வாது கண்ட மட்டும்" என்ருர் ; அவ்வுரையின் நுண் பொருளை உணர்ந்த சேதுபதி மன்னரும் மற்றையப் புலவர்களும் சவ்வாதுப் புலவரைப் பாராட்டினர்.

(கண்டம் மட்டும்—கழுத்து வரையிலும் தான் ; கண்ட மட்டும்—மணம் பரவிய இடம் வரையிலும்.)

திருக்கவும் அலகு வெட்டுதல் அவசியமாகிறது.

முதலாவது ஒரு நாள் வய திருக்கும்பொழுது அல்லது 6 வார வயதிற்குள்ளும்இரண்டாவதாகக் குஞ்சுகள் 16 வார வயதிருக்கும் பொழுதும் அலகு வெட்டு தல் செய்யப்படுகிறது.

### களை நீக்குதல்

அதிக இலாபம் பெற வேண்டு மானல் வேண்டாத கோழிகளைக் களைந்து நீக்குதல் அவசியம். குஞ்சுகள் மெலிந்தவை, முட மானவை. பெட்டைகளில் வளர்ச்சி குறைந்த மெலிந்த கோழிகளை நீக்க வேண்டும்.

### சிறந்த முட்டையிடும் கோழி எது ?

1. கொண்டையும், தாடை யும் பிரகாசமாகவும், சிவந்தும் நன்கு வளர்ந்தும் இருக்கும்.

2. கண்கள் பிரகாசமாக இருக் கும்.

3. மூன்று விரல் அகல இடை வெளி உள்ள இடை.

4. ஆசனவாய் பருத்து ஈர மாக விரிந்து இருக்க வேண்டும்.

### கோழிகளிடையே காணப்படும் துர்ப்பழக்கம் .

1. இறகுகளைக் கொத்தித் தின்னும் பழக்கம்:—

இந்த பழக்கத்தைப் போதிய அளவு இடவசதி செய்து கொடுப் பதாலும், சரிவிகித உணவு கொடுப்பதாலும் தடுக்கலாம்.

2. முட்டையைக் கொத்தித் தின்னும் பழக்கம் :—

தீவனத்தில் சுண்ணும்புச் சத்தோ, வைட்டமின் சத்தோ குறைவாக இருந்தால் இந்தப் பழக்கம் எற்படலாம். நெரிச லாகக் கோழிகளை வளர்க்கும் பொழுதுபோதியஅளவுமுட்டைப் பெட்டிகள் வைக்கப் பட விட்டாலும் இந்தப் பழக்கம் ஏற்படலாம். மேற்கூறிய குறை கள் தவிர்க்கப்பட வேண்டும். முட்டைக் கூட்டினுள் இருட் டாக இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

3. தன் இனம் தின்னும் துர்ப்பழக்கம் :—

சாதாரணமாக வெப்பக் காலங்களில் கோழிப் பண்ணை யில் கோழிகள் அதிக நெருக்க மாக இருந்தாலும் பசுந் தீவ னங்கள் இல்லா திருந்தாலும் இத்துர்ப்பழக்கம் ஏற்படலாம். சிறந்த பராமரிப்பு முறைகள் கை யாளப்படும் பண்ணைகளில் இக்குறை ஏற்படுவதில்லை.

### சைவ முட்டை

சேவல் சேர்க்கப் படாத கோழிகள் இடும் முட்டைகளில் கரு இல்லை. அதனல் இதைச் சைவ உணவோடு சேர்த்துச் சைவர்களும் உண்ணலாம். மகாத்மா காந்தியடிகள் கூடப் பாலைச் சைவ உணவாகக் கருது பவர்கள் இவ்வகை முட்டை களையும் சைவ உணவாகச் சேர்த்துக் கொள்ளலாம் எனக் கூறியுள்ளார்.

இவ்விதச் சைவ முட்டைகள் தான் சுகாதார முறையில் இந்த மும்முரக் கோழி வளர்ப்புத் திட் டத்தில் உற்பத்தியாகின்றன.

முட்டை உற்பத்தி 60 சத விகிதம் அளவில் வைத்துக் கொண்டால் கூட இத்திட்டத் தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி முட்டைகளுக்கு மேல் உற்பத்தியாகும். இதைத் தவிர ஒவ்வோர் ஆண்டும் சற் றேறக்குறைய 375 டன் கோழி இறைச்சியும் கிடைக்கும்.

---


## வெண்பாப் போட்டி—58

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை குவித்துள்ள வெற்றிகள் பற்றி நேரிசை வெண்பா எழுதுக.

முடிவு நாள்: 2-7-1973.

வெண்பா அனுப்ப வேண்டிய முக்வரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.



## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும் (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற் கிலிருந்து வடக்கு நோக்கியும், மேற் கிலிருந்து கிழக்கு திசை நோக்கியும் சென்று கொண்டு இருக்கும் எல்லா நீர் ஊற்றுக் களையும் விஞ்ஞான முறையில் கண்டு பிடித்து அவைகளிடையே மிக அதிகமாகத் தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டு பிடித்துக் குறித்துக் கொடுக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க்கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதப்படி 3 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு 20 காசு அஞ்சல் தலை அனுப்பவும்.

முகவரி : **கே. கந்தசாமி,**
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி (போஸ்ட்டு), கோயம்புத்தூர்-6.
தொலைபேசி எண் : 31912.



# எளியவர்களின் சத்துணவு!

மாலைக்கண்.

சோகை.

வாய்ப்புண்.

குறைப்பிரசவம்.

குழந்தை மரணம்.

இவ்வளவும் 'பி' வைட்டமின் குறைவினால் ஏற்படுகின்றவையே ஆகும்! இத்தகைய நோய்வாய்ப்பட்டவர்கள், மருந்துக் கடைகளில் விற்கிற 'பி' வைட்டமின் மாத்திரைகளை வாங்கி விழுங்கியும், 'பி' வைட்டமின் கலந்த சில பிஸ்கோத்து ( Biscuit )-களை வாங்கிச் சாப்பிட்டும், 'பி' காம்ப்ளெக்ஸ் போன்ற ஊசி மருந்துகளை உடம்பிற் செலுத்தியும் பெரும்பொருள் செலவு செய்து வருகிற நாகரிகத்தை நாம் அன்றாடம் கண்டு வருந்துகிறோம். இது தவிர மருந்துக் கடைகளிலே புட்டிகளிலும், டப்பாக்களிலும் அடைத்து விற்கப்படுகிற 'பிரான்' ( ) என்பதையும் வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர்.

பொதுவாக, அரிசியையே முக்கிய உணவாக ஏற்றுப் பழகிவிட்டவர்கள் நாம் மேலே கூறிய பல்வேறு நோய்களுக்கும் கட்டுப்பட்டு, அந்நோய்களிலிருந்து விடுதலை பெற வைட்டமின் 'பி' கலந்துள்ள மருந்துகளை வாடிக்கையாகப் பயன்படுத்தி வருவதினின்றும் பெரும்பாலும் தப்புவதில்லை. இப்படிக் கூறுவதால், நாம் பன்னெடுங் காலமாகச் சாப்பிட்டுப் பழகிவிட்ட அரிசியில் 'பி' வைட்டமின் கிடையாது என்னும் முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

இன்றைய நாகரிக உலகில் வாழுகிற நாம், நெல்லை உமி போக அரைத்து அதன்பின் கிடைக்கும் சிவப்பு அரிசியை மீண்டும் ஆலையில் இட்டு நன்கு தீட்டி வெள்ளையாக்கி கண்ணுக்குப் பளிச்சென்று தெரியும் அந்த வெள்ளை அரிசியைச் சமைத்து, வடி நீரையும் வடித்துக் கொட்டிவிட்டுச் சத்தூட்டத்தை முழுக்க முழுக்க இழந்துவிட்ட உணவையே விரும்பிச் சாப்பிடுகிறோம். இன்னும் நாகரிக வளர்ச்சியடையாதவர்கள் என்று கருதப்படுகிற மக்கள் நம்மைப் போல ஆலையில் நன்கு தீட்டப்பட்ட அரிசியை உண்ணாமல் பழுப்பு அரிசியை—சிவப்பு அரிசியையே உண்டுவருகிறார்கள்.

பொதுவாக, ஆலையில் நெல்லை இட்டுத் தீட்டினாலோ, கரடு முரடான உரல்களில் போட்டுக் குத்தினாலோ உலோக உப்புச் சத்து மிகுதியும் கொண்ட மேல் தவிடும், 'பி' வைட்டமினும் கொழுப்பும் புரதமும் அடங்கியிருக்கும் முனைப்பகுதியும் அரிசியிலிருந்து பிரிந்து, பயன்படாமல் போகின்றன. அரிசியின் வேறெந்தப் பகுதியையும்விட முனைப்பகுதிதான் முழு நிறைவான உணவுச் சத்தைக் கொண்டிருப்பது. தானியத்தின் கொழுப்புச் சத்து முழுவதும் கூட இந்த முனைப்பகுதியில்தான் உள்ளது. ஆலைகளில் தீட்டியோ, கரடுமுரடான உரல்களில் இட்டுக் குத்தியோ, நாம் வெள்ளை அரிசி பெறுவதன் மூலம், மேலே குறித்த வைட்டமினையும், கொழுப்புச் சத்தையும், புரதச் சத்தையும் இழந்துவிடுகிறோம்.

அரிசியை ஆலையில் இட்டுத் தீட்டுவதற்கு முன்பு நெல்லில் 'ஏ' வைட்டமின் இருக்கிறது என்பதை மெக்காரிசன் என்பார் ஆராய்ந்து கூறியிருக்கிறார். இந்த வைட்டமின், அரிசியின் மேற்புறத்தில் இருக்கிறது. பச்சை நெல்லை, ஆலையில் இட்டு அரைப்பதால் — (தீட்டுவதால் அல்ல) இச்சத்து முழுதும் போய்விடுவதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நன்கு தீட்டப்பட்ட அரிசியில் மாவுச் சத்து மட்டுமே உள்ளது. ஆனால், அவியலுக்கு ஆளாகாத, தீட்டாமல் அரைக்கப்பட்ட அரிசியில் ஏ., பி., சி., வைட்டமின்கள் மட்டுமின்றி, நாம் மேலே குறிப்பிட்டுள்ளது போல் புரதம், கொழுப்பு, உலோகச் சத்துக்கள் அனைத்தும் முழு அளவில் இருக்கின்றன. எனவே தீட்டப்படாத பழுப்பு அரிசியைச் சிவப்பு அரிசியைப் பயன் படுத்துவதன் மூலம் அந்தச் சத்துக்களை நாம் பெற முடியும். தீட்டப்படாத அரிசியைப் பயன்படுத்துகிறவர்களைப் பல்வேறு நோய்கள் தீண்டுவதில்லை. 'கிராமப் பொருளாதாரத் தந்தை' என்று பாராட்டுப் பெறுகிற டாக்டர் ஜே. சி. குமரப்பா அவர்கள், தமது உணவில் எப்போதும் சிறிதளவு தவிட்டைக் கலந்து சாப்பிடுவதைப் பழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார்.

தீட்டப்படாத தவிடு நீக்கப்படாத பழுப்பு அரிசியை,: சிவப்பு அரிசியைப் பயன்படுத்துவதன் மூலம் நாம் புரதச்சத்தையும் வைட்டமின் 'பி'யையும் குறைந்த செலவில் நிறைந்த அளவு பெறுகிறோம் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் சீரணக் குழாய்களில் கிருமிகளால் ஏற்படுகிற தீமையையும், பழுப்பு அரிசியை—சத்தூட்டமான தவிட்டை நாம் பயன்படுத்துவதன் மூலம் தவிர்க்கலாம். குறைப்பிரசவங்களையும், அகால மரணங்களையும் தடுக்கலாம்; 'பெரி பெரி', மாலைக் கண், ஆகிய நோய்கள் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். வாய்ப் புண்கள் வராமல் தடுக்கலாம். வேனற் கட்டிகளினின்றும் விடுதலை பெறலாம். உடல், ஊட்டமும் உறுதியும் பெறும்; எடை அதிகரிக்கும்; சுறுசுறுப்பு ஏற்படும்.

வைட்டமின்களும் வேறு பல சத்துக்களும் நிறைந்த சிவப்பு நிற—பழுப்புநிறக் கைக்குத்தல் அரிசியைச் சொந்தமாகத் தயாரித்துக் கொள்ளமுடியாதவர்கள், வசதியில்லாதவர்கள் கதர் கிராமக் கைத்தொழில் பிரிவுகளில் ஒன்றாக விளங்குகிற கைக்குத்தல் அரிசி கூட்டுறவுச் சங்கங்களில் இந்தச் சத்தூட்டமான அரிசியைப் பெற்றுப் பயன் அடையலாம். கைக்குத்தல் அரிசி, எளியவர்களின் சிறந்த சத்துணவாகும்.

—சாமி. பழ.

# விதை காக்கும் மருந்துப்பூச்சு; களைகளும் ஒழிந்து போச்சு, விளைச்சல் பன்மடங்காய் பருத்தி வளம் கொழிக்கலாச்சு.



நோயற்ற விதைகளிலிருந்துதான் நல்ல வளமுள்ள பயிர் விளையும். பல்வேறன நோய்களிலிருந்து விதைகளைப் பாதுகாத்து விளைச்சலை அதிகரிப்பது இண்டோஃபில்

**டைத்தேன் M-45**




பருத்தி விதைகளுக்கு நோயற்ற வளமூட்டுவது இண்டோஃபில் டைத்தேன் M–45; களைகளை ஒழித்துக் கட்டுவது

**டோக் E-25**




பயிர்களுக்குத் தேவையான உணவு சத்துக்களுக்கு களைகளும் போட்டியிடுவதால், பயிர்களின் விளைச்சலும் தரமும் மிகவும் பாதிக்கப்படுகிறது. இண்டோஃபில்லின் டோக்-25 களைகளை ஒழிப்பதன்மூலம் பயிர்களுக்கு எல்லா உணவுச்சத்துக்களும் கிடைக்க வழிசெய்து, விளைச்சலை அதிகரிக்கிறது. உங்கள் தேவைக்கு இண்டோஃபில் விற்பனையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்

**இண்டோஃபில் — வளமைநிறைந்த எதிர் காலத்திற்கு**

**இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிட்.**

பம்பாய்-25

® டைத்தேன் M-45, டோக் E-25 [illegible]

# நாளும் தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம்



தமிழ்ச் சங்கத்தில் தலைமைப் புலவராக இருந்து தமிழைப் பழித்தவர்களுக்குத் தக்க பாடம் கற்பித்து வந்தவர் நக்கீரர் என்பதை நாடறியும். அவர் தம் திருப்பெயரில், தமிழகத் தலைநகரிலே ஓர் கழகம் தமிழ்ப் பணி புரிந்து வருகிறது. அது தான் நாளும் தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம்!

தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களின் நல் வாழ்த்துக்களோடு 1941-ஆம் ஆண்டில், சென்னைப் பெத்து நாயக்கன் பேட்டை 'தமிழகம்' என்னும் சிறு குடிலில் இக்கழகம் தொடங்கப் பெற்றது.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகிய வற்றைப் பேணி வளர்த்தல்; இத்துறைகளில் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், கருத்தரங்குகள் நடத்துதல்; அறிஞர்களைக் கொண்டு அரிய ஆராய்ச்சி நூல்களை வெளியிடுதல்; தமிழ் வகுப்புகள், இரவுப்பள்ளி முதலியன நடத்துதல்; மாணவர்களைச் சொற்பொழிவாற்றவும், கட்டுரை, கவிதை எழுதவும் பழக்குதல் முதலியவை நக்கீரர் கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

ஆண்டு தோறும் தமிழுக்கு விழா எடுப்பதும், தமிழ்ச் சான்றோர்களைச் சிறப்பிப்பதும் இக்கழகம் தலையாய பணியாகக் கருதுகிறது.

'தமிழில் முடியுமா? முடியாதா?' என்ற பிரச்சினைக்குத் தெளிவாகத் 'தமிழில் முடியும்' என்பதைப் பறைசாற்றி வருகிறது இக்கழகம். 'தாய்மொழி வாயிலாக உயர் கல்வி' என்ற தலைப்பில் வரலாறு, பொருளாதாரம், அரசியல், மெய்ப்பொருள், உளவியல், விஞ்ஞானம் மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற பல்வேறு துறைகளைப் பற்றிய சொற்பொழிவுகள் அத்துறை வல்லுநர்களால் நிகழ்த்தப் பெறுவதைப் பார்க்கும்போது, தமிழின் வளமும், வளர்ச்சியும் இமயமென நிமிர்ந்து நிற்கிறது. நாமும் நிமிர்ந்து நிற்கிறோம்.

முத்தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம், நம் முன்னோர்களை நினைவு கூரும் வகையில் ஐந்து அமைப்புகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றது. அவை (1) பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு, (2) திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, (3) பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூல் நிலையம் (4) மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு, (5) டாக்டர் எஸ். தருமாம்பாள் மகளிர் இலக்கிய வட்டம்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு, தமிழ்ப் புலவர் பெருமக்களால் சிறப்புற நடத்தப்படுகின்றது. நன்னூல், பத்துப் பாட்டு, கம்பராமாயணம், யாப்பு, தண்டி முதலிய இலக்கண இலக்கிய வகுப்புகள் தமிழ்த் தாகத்தைத் தணிக்க உதவுகின்றன.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி 1944 முதல் சென்னைப் பவழக்காரத் தெரு, ஏ. ஆர். சி. மகளிர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்று வருகிறது. புலவர் புகுநிலை, புலவர் முதனிலை, புலவர், தமிழ் எம். ஏ., ஆகிய வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சுமார் 20 ஆசிரியர்கள் தமிழ்ப்பணி புரிந்து வரும் இக்கல்லூரியில், இதுவரை 280 பேர் தமிழ்ப்புலவர் பட்டம் பெற்றுள்ளனர். கல்லூரியில் சேரக் கட்டணமில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

கல்லூரியின் சார்பில் புலவர் நிறைநிலை, முதனிலை, தமிழ் எம். ஏ,. தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்கட்குரிய முக்கியப் பாடப் பகுதிகளுக்கு விளக்கம் தரும் வகையில் சொற்பொழிவுகளும் அவ்வப்போது நடத்தப் படுகின்றன. மேலும் சைவம், வைணவம் ஆகிய சமயத் தொடர் சொற்பொழிவுகளும், 'கல்வெட்டியல்' பற்றிய தொடர் சொற்பொழிவுகளும் திங்கள் தோறும் நடத்தப்படுகின்றன. இனிமேல் சமணம், பௌத்தம் பற்றிய தொடர் சொற்பொழிவுகள் நடக்கவிருக்கின்றன.

பல ஆண்டுகளாகத் தனிப்பட்ட முறையில் வித்துவான் முதனிலைத் தேர்வுக்குச் செல்லுபவர்கள் வயது 30 ஆக இருக்க வேண்டும் என்று இருந்த விதியைக் குறைத்திட, சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பல முறை தூதுக்குழுக்கள் மூலமும், வேண்டுகோள்கள் மூலமும் சென்னை நக்கீரர் கழகம் செய்த நன் முயற்சி வீண் போகவில்லை. 1970-ஆம் ஆண்டுமுதல் வித்துவான் முதனிலைத் தேர்வுக்குரிய வயது 30 என்ற நிலை மாறி, வயது 25 எனக் குறைக்கப்பட்டது கழகத்தின் சாதனை என்றே கூற வேண்டும்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூலகத்தில் சுமார் 400-க்கு மேற்பட்ட பல்துறை நூல்கள் உள்ளன. நக்கீரர் கழக உறுப்பினர்களும், கல்லூரி மாணவர்களும், பொது மக்களும் இந்நூலகத்தால் பயன்பெறுகின்றனர், பொது மக்கள் ஒவ்வொரு திங்கள் மாலை 6—30 மணி முதல் 8 மணிவரை இந் நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

1959-ல் தொடங்கப்பெற்ற மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு இன்றுவரை 48 ஆராய்ச்சிக்

கூட்டங்களை நடத்தியிருக்கின்றது. தமிழ் நூல்களின் காலம், புலவர் வரலாறுகள், புலவர்களின் காலம், கல்வெட்டுகளின் காலம், தமிழ்ச் சொற்களின் வரலாறு, இலக்கியத் திறனாய்வு முதலிய பொருள்கள் பற்றி ஆய்ந்து அரும்பணி யாற்றி வருகிறது. இக்குழு.

டாக்டர் தருமாம்பாள், இலக்கிய வட்டம் 1956 முதல் மகளிர் அமைப்பாக இயங்கி வருகிறது. ஆண்டு தோறும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்குக் கரும் பலகை, நோட்டுப் புத்தகம், எழுதுகோல் முதலியனவற்றை வழங்கி வருகின்றது. ஒவ்வொரு சனிக்கிழமையும் இலக்கியம் பண்பாடு, முதலிய வகுப்புகள் நடைபெறுகின்றன. டாக்டர் தருமாம்பாள் நினைவுக் கட்டுரைப் போட்டி மாணவ, மாணவிகளைப் பெரிதும் ஊக்குவிக்கின்றது. நக்கீரர் கழகம் 1960 முதல், தமிழக அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கும் கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்திப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்து வருகின்றது.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை

> சென்னை-கன்னிமாரா நூல் நிலையத்தில் 12 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இங்கு இரண்டரை இலட்சம் நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியாகும் 200க்கு மேற்பட்ட நாளிதழ்கள் இந் நூலகத்துக்கு வருகின்றன.

செய்தல்' எனும் பேரவாவோடு செயலாற்றித் தமிழ் அன்னைக்கு ஓர் அணிகலனாய் விளங்கி வருவது நக்கீரர் கழகமென்றால், இக்கழகத்தின் அமைப்புக்கும், ஆக்கப் பணிகளுக்கும் துணையாய் நின்று தமிழ்த் தொண்டராய்த் திகழ்பவரோ திரு. சிறுவை மோகனசுந்தரம்.

அறிவியல் வளர்ச்சியில் தமிழகத்தின் பங்கு, தமிழ் கொடுத்தும் கொண்டதும், தமிழ்க் கடலில் கண்ட ஒளி முத்துக்கள், தமிழ்த் தந்தை தாயர், மாலை மதியம், தொல்பொருள் ஆய்வும் தமிழ்நாடும், மனம் நல்ல மாணிக்கம் இப்படி எத்தனையோ தலைப்புகளில் கட்டுரைப் போட்டிகளும், சொற்பொழிவுகளும் நடத்தித் தமிழ் ஆராய்ச்சிக்குத் துணை புரிந்திருக்கிறது இந்த நக்கீரர் கழகம்.

கோயில்களில் கல்வெட்டுகளைப் பார்வையிடுதல் போன்ற பயனுள்ள சுற்றுலாக்களும், கருத்தரங்குகளும் கழகத்தின் சார்பில், அவ்வப்போது நடைபெறுகின்றன.

மேலை நாட்டு நாகரிகம் தலைவிரித்தாடும் இந்நாளில்—மக்களை வேறு வேறு வகைகளில் கவர்ந்திடும் சாதனங்கள் நிறைந்துள்ள இந்த நேரத்தில்— தொடர்ந்து தளராமல் தமிழ்ப்பணி புரிவது எத்துணை அரிய செயல் என்பதைத் தமிழ்த் தொண்டர்களால் மட்டுமே உணர முடியும்.

என்றும், எப்பொழுதும், எந்நாளும் 'தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்யலாம்?' என்ற பெரும் சிந்தனையோடு செயல்பட்டு வருவது தமிழர் தம் தலையாய கடமையாகும். இந்த வகையில் பணியாற்றும் நக்கீரர் கழகம், தமிழ்த் தொண்டில் பங்கேற்க நம்மை யெல்லாம் அழைக்கிறது'

—பி.வி.ஜி.

---



நமது சரித்திரங்களும், இலக்கியங்களும், பழைமைச் சிறப்பும், மக்கள் உள்ளத்தில் பதிந்து என்றும் நிலைத்து நீடித்திருந்தால்தான் எதிர்காலச் சமுதாயம் நமது மூதாதைகளின் வழிநடக்க, அவர்களின் நல்ல அறிவுரைகளைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்திட, ஏதுவாக இருக்கும். நமது முன்னோர்களை நினைந்து போற்றுவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலச் சமுதாயத்தை நல் வழிப் படுத்தவும் பயன்பட வேண்டும் என்றுதான் நல்ல காரியங்களை நடத்தி வருகிறோம்.

யார் யார் இப்படிப்பட்ட பணிகளைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள் என்பது தெரியும்.

தமிழுள்ளம் படைத்தவர்களும்—தமிழ்ப் பற்று மிகுந்தவர்களும் இதுபோன்ற நினைவாலயங்களை எழுப்பும் போது—அழிந்து போனவற்றைப் புதுப்பிக்கும்போது பாழ்பட்டுப் போனவற்றைப் பண்படுத்தும்போது மகிழ்ச்சி அடைவார்கள்.

—மயிலையில் நடைபெற்ற திருவள்ளுவர் கோயில் அடிக்கல் நாட்டு விழாவில்



# கேளுங்கள் ??? கொடுக்கப்படும்

எனக்கு 6 ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் இருக்கிறது. அதில் கிணறு வெட்டினால் தண்ணீர் கிடைக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது. ஆனால், எந்த இடத்தில் வெட்டுவது என்பதுதான் தெரியவில்லை. ''தமிழரசு'' இதழில் நிலத்தின் கீழேயுள்ள நீரைப் பற்றிய முழுவிவரமும் அறிந்து கொள்ள 'கம்ப்யூட்டர்' என்னும் கருவி பயன்படுத்தி எத்தனை அடி ஆழத்தில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று அறிய முடியும் என்று தெரிவித்துள்ளீர்கள்.

ஆனால், பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தினர் தனி ஒரு கிணற்றுக்கு அதைப்பயன்படுத்த முடியாது, பாறை நிலத்தில் கண்டு பிடிக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். வேறு எவரேனும் அறிவியல் அடிப்படையில் நீரோட்டம் கொண்ட கிணறு காட்டுவார்களா ? ஒரு கிணற்றுக்கு என்ன செலவாகும் ? தயவு செய்து விளக்கமான—காரிய சாத்தியமான—பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். பொன்னுசாமி,
தலைமை ஆசிரியர்,
ப. யூ. து. பள்ளி, கெடிகாவல்,
வைகுந்தம் (அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

(இதுபோன்ற கேள்விகள் பல வந்துள்ளன. எனவே எல்லாக் கேள்விகளுக்கும் சேர்ந்து விடையளிக்கப்பட்டுள்ளது)

''தமிழரசு'' இதழ், தமிழ் நாட்டில் அவ்வப்பொழுது கண்டு பிடிக்கப்படும் புதுமைகளையும், ஆங்காங்கே ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களையும் தமிழ் நாட்டு மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிப்பதையே கடமையாகக் கொண்டுள்ளது. அந்த வகையிலேயே, பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட 'கம்ப்யூட்டர்' (Direct Simultation Anlog Computor) பற்றியும் ''தமிழரசு'' இதழில் வெளியிடப் பட்டிருந்தது. மேலும், விவரம் அறிய, பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், 'பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தினர் தனி ஒரு கிணற்றுக்கு அக்கம்ப்யூட்டரைப் பயன் படுத்தமுடியாது; பாறை நிலத்தில் கண்டு பிடிக்க முடியாது' என்று சொல்லி விட்டதாகத் தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். தங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தினால், விளக்கமான காரிய சாத்தியமான பதிலளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளீர்கள்.

பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தினரே அவ்வாறு கூறி விட்ட பிறகு, நாங்கள் எவ்வாறு விளக்கமான, காரிய சாத்திய மான பதிலளிக்க முடியும் ?

'வேறு எவரேனும் அறிவியல் அடிப்படையில் நல்ல நீரோட்டம் கொண்ட கிணறு காட்டுவார்களா?' என்று கேட்டுள்ளீர்கள். இக்கேள்விக்கும் தற்பொழுது தகுந்த பதிலளிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது போன்ற கேள்விகளைப் பலர் நிலநீர்த்துறை இயக்குநர் அவர்களுக்கும் அனுப்பியுள்ளனர். நிலநீர்த்துறை இயக்குநர் அவர்கள், 'நல்ல நீரோட்டமுள்ள கிணறு வெட்டுவதற்குரிய இடத்தினைக் காண்பிப்பது தற்பொழுது சாத்தியமல்ல!' என்று கூறியுள்ளதாகவும் பலர் ''தமிழரசு'' இதழுக்கு எழுதியுள்ளனர். எனவே, நிலநீர்த் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளதற்கிணங்க, உழவர் பெருமக்களுக்குப் பின் கண்ட விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''தனிப்பட்ட உழவர் பெருமக்களுக்குச் சிறந்த வகைக் கிணறு, கிணற்றின் ஆழம்போன்றவைகளில் தகுந்த தொழில் நுட்ப அறிவுரை (Technical advice) வழங்குவதைத் தமிழ் நாடு நிலநீர்த்துறை இயக்குநர் அலுவலகம் ஒரு கடமையாகக் கொண்டுள்ளது. ஆனால் நிலநீர் பற்றி விரிவான ஆய்வு முடிந்துள்ள பகுதிகளில் மட்டுமே, இவ்வாறு அறிவுரை வழங்க முடியும். உதாரணத்திற்குத் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அறிவுரை வழங்க முடியும். மற்றப் பகுதிகளில் நில நீர் பற்றிய ஆய்வுகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. நில அமைப்பு, நீரூற்றின் வகை, அதன் பருமன் மற்றும் ஆழம், வெளிப்படுத்தும் தன்மை இறைப்பதற்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு, இறைத்தபின் மீண்டும் ஊறும் தன்மை போன்றவைகளின் முழு விவரமும் தெரியாமல், எந்தத் தனிப்பட்ட உழவர் பெருமகனுக்கும் கிணறு வெட்டுவதற்கு எந்தத் தொழில் நுட்ப அறிவுரையும் வழங்க இயலாது. எனவே, நிலநீர் இயக்குநர் அலுவலகம், இத்தகைய வேண்டுகோள்களை ஏற்றுக் கொள்ள முடியாமலும், உழவர் பெருமக்களுக்கு உதவ முடியாமலும் உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்''.

எல்லா மாவட்டங்களிலும் நிலநீர் பற்றிய ஆய்வு முழு அளவில் முடிந்த பிறகே, நில நீர் இயக்குநர் அலுவலகம் தனிப்பட்ட உழவர் பெருமக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்கி, தகுந்த அறிவுரை வழங்க முடியும். அதுவரை பொறுத்திருக்குமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**காஞ்சி, காவேரி ரகங்களுக்கு 14:14:14 என்ற உரங்களை அடி-மேல் உரமாகப் போடலாமா? ஒவ்வொன்றும் எவ்வளவு எப்பொழுது போட வேண்டும் ?**

— வ. முத்தரசன்,
லால்குடி,
திருச்சி மாவட்டம்.

காஞ்சி, காவேரி ரகங்களுக்கு அடியுரமாக 14:14:14 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 175 கிலோவையும், யூரியா 11 கிலோவையும் சேர்த்துக் கடைசி உழவில் இட வேண்டும். நடவு செய்த 25 நாட்களுக்குப் பிறகு (அதாவது கர்ப்பத்தில் கதிர் தோன்றும் சமயம்) ஒரே முறையாக 100 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 44 கிலோ யூரியாவை மேல் உரமாகப் போட வேண்டும். மேல் உரமிட காம்ப்ளெக்ஸ் 14:14:14 உரத்தைப் பயன்படுத்தக்கூடாது.

**மானாவாரியாக கோ. 1 துவரை பயிரிட என்ன உரமிட வேண்டும் ? எப்பொழுது விதைக்க வேண்டும் ?**

—த. முருகேசன்,
ஆத்தூர்,
சேலம் மாவட்டம்.

மாறுவாரியாக கோ. 1 துவரை ஏக்கருக்குப்பயிரிட 20 வண்டி தொழு எரு போட்டு நன்கு உழுது விட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 கிலோ மணிச்சத்து கொடுக்க 63 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை இட வேண்டும். துவரை விதையை விதைக்கும் பொழுது ஏக்கருக்கு 5 கிலோ தழைச்சத்து கொடுக்க 25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியா இட வேண்டும்.

கோ. 1 துவரை விதைக்க ஜூன், ஜூலை மாதங்கள் ஏற்றவை.

**நவீன முறையில் வேளாண்மை செய்ய விருப்பம் உள்ளவன் நான். எங்கள் கிணற்றில் போதிய அளவு தண்ணீர் உள்ளது. இதைக் கொண்டு 3 பயிர்கள் செய்ய விரும்புகின்றேன். சிரமம் இல்லாமல், அதே சமயம் அதிக இலாபம் தரும் பயிர்கள் என்னென்ன செய்யலாம். உத்தேசமாக இவற்றின் மூலம் ஒரு ஆண்டிற்கு எவ்வளவு நிகர இலாபம் கிடைக்கும்.**

**—எம். ஏ. முகம்மது,**
**களக்காடு,**
**நெல்லை மாவட்டம்.**

தங்கள் கிணற்றில் போதிய தண்ணீர் உள்ளதால் தாராளமாக ஒரு ஆண்டில் 3 பயிர் செய்யலாம். சிரமம் இல்லாமல், அதே சமயம் அதிக இலாபம் தரும் பயிர்கள் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றீர்கள். பன்முறைச் சாகுபடி என்றாலே சிரமம் இருக்கும்! அதிக இலாபம் தரும் பயிர்களைச் சாகுபடி செய்ய, சிரமப்பட்டால்தான் முடியும்! இருப்பினும் பன்முறைச் சாகுபடி செய்யும் போது முன்கூட்டியே திட்டமிட்டு, வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறைகளைத் தவறாமல் மேற்கொண்டு சாகுபடி செய்தால் சிரமமின்றி, அதிக இலாபம் எடுக்கலாம்.

தங்கள் நிலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரே ஆண்டில் 3 பயிர் செய்யலாம்.

முதற்போகம்—ஐ. ஆர். 8 நெல்.

இரண்டாம் போகம்—டி.எம். வி. 7 நிலக்கடலை.

மூன்றாம் போகம்—எச். பி. 3 கம்பு.

ஜூன், ஜூலை மாதங்களில் ஐ.ஆர். 8 நெல் நடவு செய்தால், அக்டோபர் - நவம்பர் மாதங்களில் அறுவடைக்கு வரும். நவம்பர்-டிசம்பரில் டி.எம்.வி. 7 மணிலா பயிரிட்டால், பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் அறுவடைக்கு வரும். மார்ச்சு மாதத்தில் கம்பு நடவு செய்தால் மே மாதத்தில் அறுவடைக்கு வரும்.

இம்முறையில் பயிரிட்டு, கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை மேற்கொண்டால், ஒரு ஏக்கரில் இருந்து ஒரே ஆண்டில் அதிக சிரமம் இன்றி ரூபாய் 3,000 முதல் 5,000 வரை நிகர இலாபம் எடுக்க முடியும். ஆனால் வெகு கவனமாகப் பயிரிட வேண்டும்.

**தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 300 அங்கீகாரம் பெற்ற உழவர் விவாதக் குழுக்களும், 150 அங்கீகரிக்கப்படாத (ஆனால் செயல்படும்) குழுக்களும் உள்ளன. அமைப்பாளர்களுக்குத் தார்ப்பாய், கைத் தெளிப்பான் ஆகியவற்றை இனாமாக அல்லது மிகக் குறைந்த விலையில் கொடுத்தால், அதனால் 10,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பயன் அடைவார்கள். இதற்கு அரசு உடன் ஆவன செய்யுமா? தயவு செய்து பதில் அளிக்கவும்.**

**—ஜெ. இராமநாதன், பி.ஏ.,**
**செயலாளர்,**

**தஞ்சைமாவட்ட உழவர்,**
**விவாதக்குழு சங்கம்,**
**கீழ்த்தஞ்சாவூர் அஞ்சல்,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**

தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா உழவர் விவாதக் குழுக்களின் அமைப்பாளர்களுக்கும் தார்ப்பாய், கைத்தெளிப்பான் ஆகியவற்றை இனாமாகவோ அல்லது மிகக் குறைந்த விலையிலோ கொடுத்தால், 10,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பயன் அடைவார்கள் என்பது உண்மை. எனினும், நடைமுறையில் எதிர் பார்க்கும் பயன் கிட்டாது! அத்துடன் உறுப்பினர்களிடையே போட்டியும், பொறாமையும் ஏற்படுவதால் அமைப்பாளர்கள் உறுப்பினர்களின் குற்றச் சாட்டிற்கு ஆளாவார்கள். உழவர் விவாதக்குழுவிற்குக் கொடுக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளைக் கூட, சில அமைப்பாளர்கள் சொந்த உபயோகத்திற்கே பயன் படுத்துவதாகக் குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் தார்ப்பாய், கைத் தெளிப்பான் போன்ற பொருள்களை உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களிடம் ஒப்படைப்பது பொருத்தமல்ல!

உழவர் விவாதக் குழுக்களுக்கு இலவசமாகத் தார்ப்பாய், கைத் தெளிப்பான் ஆகியவைகளை வழங்குவது பற்றிய திட்டம் எதுவும் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரியவில்லை.

உறுப்பினர்கள் கொஞ்சமாவது பங்குத் தொகை செலுத்தி வாங்கினால் தான், எல்லாருக்கும் பொதுவான பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவர்களாக இருப்பார்கள். இல்லாவிட்டால், 'ஓசியில் வந்த பொருள் தானே' என்று கருதி, முறைதவறிப் பயன்படுத்திச் சீக்கிரம் கெடுத்து விடுகின்றனர். இந்நிலைமை நாடெங்கிலும் நிலவி வருகிறது. எனவே, அரசு இலவசமாக வழங்கும் பொருள்களைத் தங்கள் பொருள்களைப் போல் பாவித்து, வெகுப் பத்திரமாகப் பயன் படுத்திப், பாதுகாத்து வைத்திருக்கும் மனப்பக்குவம் ஏற்

**சுற்றுலாவுக்கு ஒரு திருச்சி**

1972-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே திருச்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைதான் மிகவும் அதிகமாகி இருக்கிறது.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை திருச்சியில் 29 சதவீதம் அதிகமாகியது. சென்னையில் 10·4 சதவிகிதம் தான் அதிகமாகியது. கடந்த ஆண்டு மட்டும் இந்தியாவுக்கு வெளிநாடுகளில் இருந்து 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 பயணிகள் வந்திருக்கிறார்கள்.

படும் வரை, இத்தகைய இல வசத் திட்டங்கள் எதிர்பார்க்கும் பயன்களைத்தரா !

உழவர் விவாதக் குழு உறுப்பினர்கள் குறிப்பிட்ட அளவு பங்குத் தொகை செலுத்தி, மீதியை ஊராட்சி ஒன்றியம் மூலமாக அரசு மானியம் பெற்றுத் தார்பாய், கைத்தெளிப்பான் ஆகியவைகள் வாங்கிக் கொள்வதே சிறந்த முறையாக இருக்கும். இத்திட்டமும், அரசின் பரிசீலனைக்கு இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. எனவே, இது பற்றித் தங்கள் சங்கத்தில் தீர்மானம் நிறை வேற்றி, வேளாண்மைத் துறை இயக்குநர் ஊர்வளர்ச்சித்துறை இயக்குநர் ஆகியவர்களின் மூலமாகத் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைக்கலாம். அல்லது உங்கள் மாவட்ட வேளாண்மைக் கருத்தரங்கு நடைபெறும் போது, இதுபற்றி விவாதித்துத் தீர்மானம் நிறைவேற்றித் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைக்கலாம். இத்திட்டம் பயன்தருமெனக் கருதினால், தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை ஏற்றுப் போதிய நிதி வழங்கிட ஆவன செய்யும்.

எங்களுக்குத் தற்போது உள்ள கிணற்றிலிருந்து 300 கெஜ தூரத்தில் 5 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. அதில் கிணறு வெட்ட முடியாது. பழைய கிணற்றிலிருந்து சிமெண்ட் குழாய் மூலம் நீர் கொண்டு செல்லலாம். குழாய்களைப் புதைக்க ரூபாய் 1,500 ஆகும். கடன் அளிக்கப்படுமா? யாரை அணுக வேண்டும்? எவ்வளவு காலக் கெடுவில் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும்? விளக்கமாகக் கூறவும்.

—பெ. இராமசாமி,
ஆர்ப்பாக்கம் (அஞ்சல்),
திருவண்ணாமலை வட்டம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

தங்கள் திட்டத்திற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுக்க முன்வரும். ஆனால் குழாய் புதைக்க வேண்டிய நிலம் (தாங்கள் குறிப்பிடும் 300 கெஜ தூரம்) உங்களுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் அல்லது அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தில்) சிமெண்ட் குழாய் புதைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டுக் கொடுக்க வேண்டி இருக்கும். தாங்கள் குறிப்பிடும் இத்திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும், இவ்வாறு செய்வதால் தங்கள் வருவாய் எவ்வளவு கூடும், எத்தனை ஆண்டில் திருப்பிக் கட்டலாம் என்பதற்கு விவரமான மதிப்பீடு (Estimate) தயாரித்துக் கொண்டு தங்கள் பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு நாட்டுடைமாயாக்கப்பட்ட வங்கியின் முகவரைச் சந்தித்து விவரம் கூறி, கடன் கோரலாம். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலும் இத்திட்டத்திற்குக் கடன் பெறலாம். தாங்கள் ஏதேனும் ஒரு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிக்குச் சென்று இது பற்றிய விவரங்களை நேரில் தெரிந்து கொண்டு, அவ்வங்கியின் முகவர் கூறும் முறைப்படி கடன் மனு அனுப்புங்கள்.

எங்கள் பகுதியில் ஐ. ஆர். 20 போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளை நடவு செய்துள்ளோம். மருந்துத் தெளிக்கத் தெளிப்பான் (ஸ்ப்ரேயர்) கிடைக்கவில்லை. தெளிப்பானைத் தவணை முறையில் பெற முடியுமா? அப்படித் தவணை முறையில் பெற யாருக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்? திராட்சைக் கொடியில் பூச்சி பிடிக்கிறது. அதற்கு என்ன மருந்து அடிக்க வேண்டும்?

—டி. இஸ்மாயில்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
கடலி,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

தவணை முறையில் தெளிப்பான் வழங்கப்படுவதில்லை. தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகச் சலுகை விலையில் தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. தங்களுக்குத் தேவையான தெளிப்பான் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் அவர்களின் உதவியை நாடுங்கள். அவர் மனுச் செய்ய வேண்டிய முறையையும், தாங்கள் கட்ட வேண்டிய முன் பணத்தையும் குறிப்பிடுவார். தாங்கள் முன் பணத்தைக் கட்டிவிட்டு, எந்த வகைத் தெளிப்பான் வேண்டும் என்று மனு எழுதிக் கொடுக்க வேண்டும். பிறகு அவர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் அனுமதியுடன், தாங்கள் கேட்கும் தெளிப்பானை வரவழைத்துச் சலுகை விலையில் வழங்குவார்.

திராட்சையில் பல்வேறு வகைப் பூச்சிகள் தாக்கக்கூடும். எனவே எந்தவகைப் பூச்சி தாக்கியுள்ளது என்று தெரிந்தாலன்றி, எவ்வாறு தகுந்த மருந்தைப் பரிந்துரைக்க முடியும் ? தாங்கள் துணை வேளாண்மை அலுவலர் அவர்களை அழைத்துச் சென்று, தங்கள் திராட்சையைக் காட்டினால், அதற்கேற்ற மருந்தைக் கூறி, தெளிக்கும் முறையையும் விளக்குவார். எனவே, அவர் உதவியை நாடுங்கள்.

நான் கோழிப்பண்ணை ஒன்று வைக்க உத்தேசித்துள்ளேன். அதற்கு நான் எங்குக் கடன் வசதி பெற விண்ணப்பிக்க வேண்டும். வழி முறைகள் என்ன என்பதைத் தெரிவித்தால் பயனுடையதாய் இருக்கும்.

—கே.எல். இராதா,
23, சிங்கப் பெருமாள்கோவில்
சன்னதித் தெரு,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

கோழிப்பண்ணை அமைக்க தற்போது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் கடன் கொடுத்து உதவுகின்றன. கோழிப் பண்ணை அமைப்பது பற்றித் தெரிந்து கொள்ளக் காஞ்சிபுரத்திலுள்ள கால்நடை உதவி மருத்துவர் அவர்களின் ஆலோசனையைக் கேளுங்கள். கடன் பெறக் காஞ்சிபுரத்தில் உள்ள ஏதேனும் ஒரு நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள வங்கிக்குச் சென்று நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

—ஆர்.எம்.

### ஏற்றுமதிப் பெருமை

இந்தியாவில் ஆயத்த ஆடைகளின் ஏற்றுமதி விரைவாக அதிகரித்து வருகிறது. 1968—69-ஆம் ஆண்டில் 5 கோடியே 65 இலட்ச ரூபாய் மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1971—72-ஆம் ஆண்டில் 15 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கும் 1972—1973-ஆம் ஆண்டில் 21 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு





TANSI

டான்ஸி

தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமான கட்டமைப்புகளுக்கும், கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி''

விவரங்களுக்கு அணுகவும்: தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழநாடு அரசு நிறுவனம்)

26, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-14
தொலைபேசி எண் 83061.
Telegraphic Address: "State Indco".

# வெண்பாப் போட்டி

## 56 போக்குவரத்தில் பங்கும் பொறுப்பும்

தொழிலாளர் பட்ட துயர்யாவும் ஓட்டும்
அழியாத நன்மைகள் ஆக்கும்—வளையாத
போக்கு வரத்தில் பொறுப்பும் முதலீடும்
சேர்க்கும் புனிதச் செயல் !

—கவி, “கா. சு.”, ஆனந்தூர்.

பேருந்து நாட்டுடைமை என்பதனல், இந்நாளில்,
சேருந் தொழிலாளர் சீரடைந்தார் !—பாருவீர்,
கூறும் வகையாலே கொள்ளும் முதலீட்டில்
சேருமொரு பங்கே சிறப்பு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பணிமனையில் பாட்டாளி பங்குடனே ஆட்சி
அணிசெய்யத் தன்னுரிமை ஆக்கித்—துணிவுடனே
எல்லாரும் தோளுயர்த்தி இன்பத் தமிழ்நாட்டில்
வல்லாராய் வாழ்வோம் மகிழ்ந்து.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

சேரன் பெருஞ்சிறப்பைத் திக்கெட்டும் சாற்றுதற்குப்
பேரன் “கலைஞராம் பேர்” அன்நான்—கூறுவனே
கொண்டிட்ட பேருந்து கொண்டிட்ட சீரிங்கே
எண்டிக்கும் வாழியவே என்று.

—அ. பிரகாசம், கம்பளியம்பட்டி.

சாலையிலே ஓடிவரும் சக்கரத்தில் தர்மசமக்
காலை முரசதிரக் காண்கின்றோம்—வேலைசூழ்
மேதினியில் நல்லதொரு மேன்மை அளித்துயர்ந்தார் !
சாதனையே றெங்குண்டு சாற்று !

—சிவ. கிருட்டிணன், கவிசூர்.

“ஊதியம் பெற்றிடவே ஓயாமல் போராடி
வேதனையில் வாழ்ந்த தொழிலாளர்—மேதினியில்
எங்குமே காணமல் எந்தமிழர் நாட்டினிலே
பங்கடைந்தார் பேருந்தில் பார்”

—க. இலக்குமி, அருப்புக்கோட்டை.

கடையர்க்கும் ஈங்கே கடைத்தேற்றம் காணும்
நடைமுறையைச் செய்தொழிலில் நாடிப்—படைப்பாளிக்கும்
பங்கும் பொறுப்பும் பணிஊக்கும் திட்டமெலாம்
இங்களித்த இவ்வரசை யேத்து.

—கலாவதி காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

---

பரிசுபெற்ற வெண்பா எழுதியவர் :—
கவி “கா. சு.”,
ஆனந்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

போக்கு வரத்தில் பொதுமை பொழிந்திட
ஆக்கங்காண் ஊழியர் அண்டிடும்—ஊக்கமெலாம்
பங்கும் பொறுப்பும் பகிர்ந்தளிக்கும் நம்மரசை
இங்கிதமாய் ஏற்போம் இனித்து!

—ச. கலியனூர், பொன்மலை.

ஓடுகின்ற உந்தில் உழைக்கும் பணியாளர்,
வாடும் நிலையின் வகையறிந்து—தோடுடையோய்!
ஆக்கமவர் எய்திடவே அன்பாய்த் "தமிழரச"ம்
ஊக்குதொகை தந்தார் உணர்ந்து.

—ப. குப்புசாமி, பொன்மலை.

வருவாயில் பங்குபெறும் வாய்ப்பால்பே ருந்து
நிருவாகப் பேர்பொறுப்பால் நீதி—உருவாகி
வாடுகின்ற மக்களை வாழ்த்தவைக்கும், யாவரும்
நாடுகின்ற திட்டமெனல் நன்று.

—கே. ஏ. அர்ஜுனன், டி.எம்.இ., உத்தமபாளையம்.

" சமதர்மம் என்பதனைச் சந்திக்கின் றோரே,
எமதென்ற காலம்போய், எல்லாம்—நமதென்ற
பங்கீட்டுத் திட்டத்தைப் பாரீரோ! இப்பாரில்
எங்குளதோ இவ்வேற்பா டின்று?"

—சாப்டூர் சதுரகிரியான், கருங்காலக்குடி.

என்னத்தான் கொண்டுவந்தீர்?இன்றெனக்குச் சொல்லுங்கள்!
சொன்னாலுன் நெஞ்சந்தான் சொக்கிவிடும்—என்னவளே!
முன்னேறத் தந்தார் முதலீட்டில் பங்கதனால்
வெண்பாவைத் தந்தேன் விழைந்து.

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

பாட்டாளித் தோழரையும் பங்காளி யாக்கியதால்
நாட்டில் நலங்குவித்தார் நாடாள்வோர்—ஊட்டமிகு
சாதனைகள் செய்தார் சமதர்மக் கொள்கையினால்
வேதனையை வேரறுத்தார் வென்று.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

சீரார் சமதர்மத் திட்டத்தைச் செவ்வரசு
பேரார்வ மிக்கூர்ந்து பெற்றளித்தார்!—பாராய்!
நிலைஉயர வாய்ப்பாம் நிருவாக மேற்று
நலஞ்சூழ் முதலீட்டை நாடு.

—மு. க. மூர்த்தி, மானம்புச்சாவடி.

# வெண்பாப் போட்டி

சமதர்மச் சாதனைக்குச் சான்றாய் விளங்கும்
நமதரசு செய்வதே நன்மை—தமது
முதலீட்டில் பங்குதரும் முற்போக்கைக் கண்டு
மிதவாதம் பேசார் மிகுந்து.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

ஆர்வமுடன் பாட்டாளி அன்றாடம் தன்பணியை
நேர்மையுடன் செய்ய நெறிதந்தார்—யார்வந்தே
இவ்வாறு நன்மைகளை ஈட்டும் முறைகளினைப்
பவ்வியமாய்ச் செய்தார் பகர்?

—கண்ணகாந்தி, தாராபுரம்.

பாட்டாளி பங்குபெற்றுப், பாங்குறவே நிர்வாகக்
கூட்டாளி யாய்நன்மை கோடிகண்டு—மாட்சியுறச்
செய்ததமிழ் நாட்டரசின் சேவைக் கிணையாக
வையமிசை உண்டோ வழுத்து.

—வி. மு. உலகநாதன், சென்னை-1.

காரோட்டும் தோழர் கழகத்தில் பங்கெய்திப்
போராட்டம் நீங்கப் பொறுப்பேற்றார்—பாராட்டிச்
செந்தமிழ் நாட்டைச் சிறப்புடன் ஆள்வோர்க்கு
வந்தனை செய்யவா ரீர்!

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், பி. ஏ., திருச்சி-2.

கனவிதுவோ! கற்பனையோ! காரோட்டும் தோழன்
நனவென்றே சொல்கின்றான் நாட்டில்—கனிவாய்
அரசுடைமை உந்தில் அவனுக்கும் பங்காம்!
கரங்குவிப்போம் நன்றியினுக் காய்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

முதலீட்டில் பங்காம் தொழிலாளர் கட்குப்
பொதுவுடைமைக் கொள்கை புகுத்தும்—முதல்வர்தம்
உள்ளத்தின் ஊற்றிலே பின்னே தனியுடைமைக்
கொள்கையா தோன்றிடும்? கூறு.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

ஒன்றுவிட்ட நாள்வந்து நீகொடுத்த ஊதியத்தை
அன்றன்று சேர்த்துவைத்தேன்; ஐநூற்றை—இன்றேபோய்ச்
சேரன் கழகத்தில் சேர்த்திடுவாய்; கண்ணாளா!
காரென்றும் ஓட்டுவார்க்குக் காண்.

—புலவர். இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

மார்க்சின் மணிக்கொள்கை மாமேதை நங்கலைஞர்
பேர்க்குள் மறைந்ததோ? பேசுமுயர்—போக்குவரத்(து)
என்னும் கழகத்தில் எல்லார்க்கும் பங்குண்டு
பொன்னும் பொறுப்புண்டு போற்று.

—சடையப்பன், திருவெண்ணெய்நல்லூர்.

பேருந்தில் பாடுபடும் எல்லார்க்கும் பங்களித்தல்
சீருந்தச் செய்யுமென்றார் சேகுமுசிபுர்—பாருலகில்
வங்கமிதைக் காணுமுன் நம்நாட்டார் நற்பொறுப்பும்
பங்குடனே பெற்றுவிட்டார் பார்.

—புலவர் இரா. வரதராசன், அகிலை.

தொழிலாண்டு சோர்வார் துயருடன் என்றும்
விழிநீரில் நீந்தாமல், வேனிற்—பொழிலாய்
முதலீடு பெற்று முதலாள்வா ராக்கும்
உதிக்கும் கதிரின் ஒலி!

—மா. அரிதாசு, ஒலைப்பாடி.

சேரும் முதலீட்டில் தக்கதொரு பங்கீந்து
கூறும் பொறுப்பளித்துக் கூட்டுறவில்—சீராய்ச்
சமதர்மத் திட்டம் செயல்வடிவம் காணச்
தமிழரசைப் போற்றுவோம் சார்ந்து.

—புலவர் ப. தேவகுரு, தேவ ானப்பட்டி.

வங்காள தேசம் வரைந்ததோர் திட்டத்தை
இங்காளும் எம்கலைஞர் ஏற்றுதொழிற்—செங்கர கள்
பங்கும், பொறுப்பும் பெறச்செய்யும் பண்பாட்ட
பொங்கும் சமதர்மம் பூத்து.

—எழில்வேந்தன், சென்னை-28.

ஏட்டில் மணக்கும் எழிலார் 'சமதர்மம்'
நாட்டில் மலர்விக்கும் நல்லரசின்—நாட்டத்தால்
பேருந்தின் ஊழியர்கள் பேருதவி பெற்றனர்காண்!
சீர்மிக்க ஆட்சிச் சிறப்பு.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

ஊக்குவிக்கும் பங்கும், உழைப்புக்கே ஊதியமும்
காக்கும் பொறுப்போடு கண்ணளித்தும்—ஆக்கம்
வரக்கண்டு வாழும் தமிழகத்துப் போக்கு
வரத்துக் கழகத்தை வாழ்த்து.

—தவமுத்து, அண்ணாமலை, பி.ஏ., பி.டி. தவசி.

## வெண்பாப் போட்டி

நிருவாகத் தில்பொறுப்பும், நல்லமுத லீட்டில்
வரும்தொகையில் பங்கும் வழங்க—விருக்கின்ற
நல்லரசைப் போக்குவரத் தூழியர்கள் எல்லாரும்
சொல்லடுக்கி வாழ்த்துகிறார் சூழ்ந்து.

—இரா. வைத்தியநாதன், பொற்களாக்குடி.

சாதிமதம் ஒய்ந்து சமதர்மம் நீடுயர்ந்து
நீதிநிலை பெற்று நிறைவுபெறும்—மேதினியில்
பங்கும் முதலீடும் ஈந்த சமதர்மத்
தங்கத் திருநாட்டைக் காண்.

—பொன். இளங்கோவன், நடுமலை வடக்கு.

செய்யும் தொழிலின் சிறப்பும் பெருக்கமும்
மெய்யுழைப் பாளர்தம் மேன்மையில்தான்—ஐயமெனில்
போக்கு வரத்துத் துறையிப் பொதுமையிலே
ஆக்கம் பெறுதலறி வாய்.

—புலவர் கோம்பைச் சீரான், கோம்பை.

"உந்தூர்தி ஓட்டும் உழைப்பாளர் பங்குமுதல்
தந்தே உரிமைதனைத் தாம்பெற்றார்—சிந்தையினில்
முந்துசம தர்மம் முகிழ்த்திடவே தொண்டாற்றும்
பைந்தமிழ்ப் பேரரசைப் பார்."

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

பாட்டாளி மக்கள் பயனடையப் பேருந்தை
நாட்டுடைமை என்றாக்கி, நாளுமவர்—ஈட்டுகின்ற
செல்வத்தில் ஓர்பங்கைச் சீரா யளித்துவரும்
நல்லரசே! வாழ்கநீ நன்று.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

போக்கு வரத்தைப் பொதுவுடைமை ஆக்கியதன்
நோக்கம் அறிவாயா நுண்ணிடையே—ஆக்கத்
தொழிலாளி பங்காளும் தோழனாய் ஆக
வழிகோலும் என்றறிந்து வாழ்த்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

பாட்டாளி மூலதனப் பங்காளி யாய்த்தொழிலில்
நாட்டமுடை நற்பொறுப் பாளிஎனில்—நாட்டினிலே
இல்லையென்றும் வர்க்கப்போர் இன்பவளம் ஓங்கும்நம்
நல்லரசின் திட்டமதை நம்பு.

—ஜி.தி. அர்த்தநாரி, பி.ஏ., பி.டி., வேலூர்.

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!



· எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## · சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை,

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

“மன்னிச்சுக்கங்க ...... ஒரு நாலு எழுத்து ஒழுங்காகப் படிக்காதவன் நான்......அதனாலே முறையா....படிச்சவுங்க மாதிரி மேல் பூச்சு பூசி எனக்குப் பேசத் தெரியாது. ஆனால், மனசுக்குப் பட்டதை அப்படியே ‘பளிச்’சுன்னு சொல்லிடுவேன்.

“இப்ப நானும் ஒரு மனிதன் ... எனக்கு இப்ப அதிகமா துணிச்சல் வரக் கேட்பானேன்?”

“செய்யும் தொழிலே தெய்வம்ன்னு பாடுவாங்க..விளக்கம் சொல்லுவாங்க...... ஆனால், தங்கள் மனசுக்குப் பிடிக்காத தொழிலே மற்றவன் செஞ்சா கேவலமா நினைப்பாங்க .. .... உண்மைதாங்க...அந்தக் கேவலமான வேலையை அவன் ஏன் செய்யறான்னு யாராவது நினைச்சுப் பார்த்தாங்களா ? நினைச்சாலும் நிவர்த்தி தேட யோசித்தாங்களா?

“அப்படி ஒருத்தர் மட்டும் யோசித்ததால் இப்ப நானும் ஒரு மனுஷனாகிட்டேங்க ...... ..

“என் தொழிலாலேயே என் மகனுக்கும் எனக்கும் பகை. அதனாலே வீட்டைவிட்டு வெளியே போயிட்டான் அவன். நானும், போறான் கழுதைன்னு விட்டு விட்டேன். பெத்தமனசு சில சமயம் பித்தாகி பாலனை நினைக்கும். அடுத்த நொடியிலேயே மனசை வைராக்கியம் நிறைச்சிடும். ஆனால், இன்னைக்கு அவனைப் பார்த்துட்டேன். தைரியமா நான் பார்த்தேன். பெருமையோடப் பார்த்தேன்! ஏன் தெரியுமா ?

“ஓ......இப்பத்தான் நானும் ஒரு மனிதனாகி விட்டேனே!”

* * * *

கபாலின்னு பேரைச் சொன்னால் போதும், அந்தக் காலத்திலே கைரிக்ஷா இழுக்கிறவுங்க எல்லாருக்கும் நல்லா தெரியும்.

நாலு பேரு உட்கார்ந்தாலும் சுலபமாக இழுக்கிற உடற் கட்டு; வாத்தியாரு கபாலின்னு எங்க பேட்டையிலே பட்டம் வேறு.



# ஓ.... இப்ப நானும் ஒரு மனிதன்

—உழைப்பாளி—

திமிருக்குக் கேட்கணுமா? எங்கே தகராறுன்னாலும் அங்கேதான் இந்தக் கபாலி இருப்பான்.

எங்க அப்பனுக்கு நான் பெரியஉபத்திரவமாகிவிட்டேன். என்னை அடக்க அவருக்குத் தெரிஞ்ச வழி என் காலுக்குக் கட்டுப் போடணுங்கிறதுதான். ஆமாம். காளியம்மாவை எனக்குக் கல்யாணம் பண்ணிவைத்து விட்டார்.

அப்புறமென்ன ?

அடுத்தடுத்துப் பிள்ளைங்கதான். ஒண்ணு, ரெண்டா, எட்டுப் பிள்ளைங்க.. நாலு பொண்ணுங்களுக்குப் பிறகு அஞ்சாவதா பையன் பிறந்தான். பின்னாலே மூணும் பெண்ணுங்க. ........

இப்ப செய்யுறுங்களே விளம்பரம் ''அடுத்த குழந்தை இப்போது வேண்டாம், இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்ன்னு'' அப்படி ஏதாவது அந்தக் காலத்திலே பண்ணியிருந்தால் என் எதிர்காலம் இப்படி இருள் சூழ்ந்துபோயிருக்காதுங்க!

'மரம் வைச்சவன் தண்ணி ஊத்தாமலா இருப்பான்னு ஏகதேசமா அறியாமையினாலே பேசுகிறுங்களே, அதுபோலவே நானும் நினைச்சேன்.

எங்க பேட்டையிலே நாலு இளம்பிள்ளைங்க சேர்ந்து..., மன்றம்னு வச்சுதுங்க.. அங்கே வர்ற பேப்பருங்க பத்திரிகைகளைப் படிச்ச பிள்ளைங்களைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்லிக் கேட்பேன்... கொஞ்சம் கொஞ்மாகவும் என் வாழ்க்கையிலே மாறுதல்ஏற்படத் தொடங்கியது.

கஷ்டத்தோட கஷ்டமா பையனைப் படிக்க வச்சேன். அவனுக்குக் கீழே இருந்த மூன்று பெண்களையும் படிக்க வச்சேன். வாழ்க்கை ரொம்ப துன்பமாகத்தான் இருந்தது. ஆரம்பத்திலே திட்டமிட்டு வாழத் தெரியாத தனாலே வந்தவேதனை! பொறுத்துகிட்டேன்.

காலமும் மாறத்தொடங்குச்சு. வேதனையும் மறையத் தொடங்குச்சு.

காலேஜிலே முதல் வருஷம் வரைக்கும் இலவசப் படிப்பும், பின்னாலே அரசு உதவித்தொகை அளிச்சதாலும் பட்டப் படிப்பும் படிச்சான் என் மகன் பாலன். குடும்பக் கவலை தெரிஞ்சு படிச்சதாலே நல்ல மார்க்கு வாங்கிப் பாஸ் பண்ணினான். வேலையிலேயும் சேர்ந்துட்டான்.

இதற்கிடையிலே என் மூத்த மூணு பெண்ணுங்களுக்கும் கல்யாணம் பண்ணி வச்சுட்டேன். கொஞ்சம் கடன் ஏற்பட்டது. அதை வேலைக்குப் போன பாலன் கொஞ்சம் கொஞ்சமா அடைக்க ஆரம்பிச்சுட்டான்.

இந்த நேரத்திலே தான் எனக்குத் தமிழக அரசுப் பரிசுச் சீட்டிலே ஒரு ஆயிரம் ரூபாய் பரிசு கிடைச்சுது. எனக்கு ஆயிரம் ரூபாய் வந்ததோ இல்லையோ பாலன் மனசு மாறத் தொடங்குச்சு. ''அப்பா அப்பா நீ செய்யுற வேலை ரொம்ப கேவலம், அதனாலே இனிமே நீ கைரிக்ஷா இழுக்கிறதை விட்டு விட்டுச் சின்ன கடை வச்சிக்கோ'' என்றான்.

''என்னடா பாலா உளர்றே? இத்தனை நாளா என் தொழில் உனக்குக் கேவலமா தெரியலியா? நானே அழுது அழுதுகிட்டு இந்த வேலையைச் செஞ்ச நாளுமுண்டு. இப்ப நமக்கிருக்கிற கடன் ஐநூறு ரூபாயையும் கொடுத்துடப்


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB
உயர் ரகத்தைக் குறிக்கும்
வாட்டர் மார்க்



போறேன். மீதி ஐநூறு ரூபாயைக் குடிசை மாற்று வாரியத்திலே கட்டித் தவணைமுறையிலே வீடு வாங்கிக் கொள்ளப் போறேன்'' என்றேன்.

''வாடகைக்குத்தான் குடிசை மாற்று வாரியத்திலே வீடு தர்ருங்களே''.

''தவணை முறையிலே வீடு வாங்கிட்டா நமக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கும். சொந்த வீடுங்கிற உணர்ச்சியிலே நல்லா வச்சிக்குவோம்''

பாலன் பதில் பேசவில்லை. மௌனமாக வெளியே சென்று விட்டான்.

மறுநாள் மாலை நேரம்.

ஒரு பெண்ணை ரிக்ஷா வண்டியில் வைத்துக் கொண்டு மயிலாப்பூர் குளக்கரையிலிருந்துஇழுத்துக் கொண்டு போனேன்.

எதிரே பாலன் வந்தான். குடிசை மாற்று வாரியத்திலே எனக்குப் பாரங்கள் கொடுத்திருந்தாங்க.... அதையெல்லாம் பாலனிடம் காட்டணுங்கிற ஆசையிலே 'பாலா' என்று கூப்பிட்டேன்.

என்னை முறைச்சுப் பார்த்துட்டு போய்விட்டான், அடையாளம் தெரியாத ஆளுபோல! மனதுக்குள் குமுறிக்கொண்டேன். வேறு என்ன செய்ய முடியும்?

அன்றிரவு வீட்டுக்கு வந்தவுடன் ஒரே குதியாக குதிச்சான் பாலன்.

''என் கூட வேலை பார்க்கிற பெண் வசந்தா. அவளை ரிக்ஷாவில் வைத்து இழுத்துக் கொண்டு வரும்போது என்னைப் பாலன் என்று கூப்பிடறது கேவலமா இல்லையா? நீ ரிக்ஷா இழுக்கிறதை விட்டாத்தான் நான் இங்கே இருப்பேன்னு' சொன்னான்.

''போடா கழுதைன்னு'' நானே சொன்னேன்.

உடனே புறப்பட்டு விட்டான். அவன் அம்மா காளியம்மாதான் ரொம்ப அழுதாள். எனக்குக் கொஞ்சம் கூட வருத்தமில்லை. ஏற்கெனவே காளியம்மாவுக்குப் பார்வை கொஞ்சம் சரியாத் தெரியாது. அவன் போன பிறகு என்னைக் கரிச்சுக் கொட்ட ஆரம்பிச்சா. போன வருஷம் முதலமைச்சர் இலவசக் கண்சிகிச்சை முகாமிலே காளியம்மாவுக்கு ஆப்ரேஷன் செஞ்சு கண்ணாடி கொடுத்தாங்க. பார்வை தெரிய ஆரம்பிச்சுது. குடிசை மாற்று வாரியத்திலே கோட்டூர்புரத்திலே வீடு கொடுத்தாங்க. இந்த மாற்றங்களே காளியம்மாவின் மனக்கவலையை மறக்க வச்சிடுச்சி ..இப்ப எல்லாம் நான் சொல்றது தான் அவளுக்குச் சரி... உம்... வசதிதான் மனிதர்களின் வாழ்க்கையையும், மனசையும் எப்படி எப்படி மாற்றி அமைக்கிறது?

ஆனால், எனக்கு மட்டும் விடிவு காலம் வரவில்லை.

எனக்கும் நல்ல காலம் வந்து விட்டது. நமது முதலமைச்சர் ஐம்பதாவது பிறந்த நாளில் என்னையும் மனிதனாக மாற்றிட்டாங்க...............!

இதுவரை நம்ப புண்ணிய பூமியிலே யாரும் நினைச்சுப் பார்க்காததை ஒருத்தர் நினைச்சுப் பார்த்துட்டார். அவர் நம்ப முதலமைச்சர்தான். அதனாலே நான் மனிதனாகிவிட்டேன்.

என் கைரிக்ஷா போய் சைக்கிள் ரிக்ஷா வந்து விட்டது.

மறுநாள் ஆபீஸ் முடிஞ்சு போகும் நேரம் ஒரு புதிசா கல்யாணம் ஆனவுங்க இரண்டு இளசுகள் அடையாறிலே ஏறுச்சுங்க. எலியட்சு பீச்சுப் பக்கம் போகணுமாம். ஏறும்போதே நான் கண்டு பிடிச்சுட்டேன்! பாலனும் அவன் ஆபீஸிலே வேலை செய்ற பொண்ணும்தான். அந்தப் பெண்ணை கைரிக்ஷாவிலே வச்சு இழுத்துக் கொண்டு போகும் போதுதான் அவனை கூப்பிட்டதற்காக கோபித்துக் கொண்டான்.

காதலியை ரிக்ஷாவில் வைத்து இழுக்கிறவன் காதலன் பேர் சொல்லி கூப்பிடலாமா?

இப்ப கலப்பு மணம் செய்திருப்பாங்க.......

கடற்கரையில் இறங்கினர்கள் அவர்கள். எனக்குக் காசு கொடுக்க வரும்போது அப்பா என்று காலில் விழுந்தான் பாலன்.

இப்பொழுது கட்டிய மனைவியிருக்க என் காலில் விழலாமா! என்ன வெட்கம்? என்ன அவமானம்?

ஓ.........இப்பதான் நான் மனிதனாக மாறிவிட்டேன்!

நான் பெருமையோடு என் சைக்கிள் ரிக்ஷாவைப் பார்த்தேன்.

அதை எனக்குக் கொடுத்த 'பேருள்ளத்தை' நினைத்துக் கொண்டேன்.

அதுதானே என்னை மனிதனாக்கியது!


# தமிழரசு

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ | 10-00 |
| அரையாண்டு | ரூ. | 5-00 |
| தனி இதழ் | | 40 காசு |




ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ; தமிழ்நாடு அரசு அச்சக




Criterion CO 2882

பதிவு எண். M. 8676






# தமிழகம் ஒரு பொற்காலத்தை உருவாக்கிவருகிறது!

உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!

இரத்தப்புரட்சி இல்லாமல் இனிய வாழ்வு உருவாக்கும்

இந்தத் திட்டங்கள்
இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க
நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட
தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட
நாம் ஆற்றவேண்டிய பேருதவி

## அளவான குடும்பம்

சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல
சிறு குடும்பம்—
செழித்திடும் நன்மைகளை-நாட்டில்
நிலைத்திடச் செய்ய
அமையட்டுமே அளவான குடும்பம்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு